Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 12
குவிப்பு - 11-12
பக்கங்கள்- 20
விலை ரூபா 40.00
நவம்பர்-டிசம்பர்-2009
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/131/News/2009

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

# கிறிஸ்மஸ் சிறப்புப் பொழிவு

## இத்தாலி நாட்டுப் பாடசாலைகளில் இருந்து திருச்சிலுவைகளை அகற்ற வேண்டும் என்ற ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து திருப்பீடம் பேரதிர்ச்சி!



இத்தாலியப் பாடசாலைகளில் இருந்து திருச்சிலுவைகளை அகற்ற வேண்டும் என்ற மனித உரிமை மீறல்களுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து வத்திக்கான் திருப்பீடம் பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த வேதனையையும் வெளியிட்டுள்ளது.

இத்தாலியில் உள்ள பாடசாலை ஒன்றில் பின்லாந்து நாட்டில் இருந்து குடிபெயர்ந்த ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் பிள்ளைகள் பயிலும் வகுப்பறைகளில் திருச்சிலுவை மாட்டப்பட்டிருப்பது தங்கள் மதச் சுதந்திரத்தைப் பறிப்பதாகக் கருதினார்கள்.

அதை அகற்றும்படி பாடசாலை இயக்குனரைக் கேட்டிருந்தார்கள். அவர் மறுத்ததால் அவர்கள் மனித உரிமை மீறலுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தார்கள்.

இத்தாக்கல் 2002ல் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட வாதத்தின்பின் 02.11.2009ல் தீர்ப்பு வெளியாகியது. அதன்படி இத்தாலியப் பாடசாலைகளில் திருச்சிலுவை வைத்திருப்பது தனிமனித சுதந்திரத்திற்கு எதிராக அமைவதாகவும், இத்தாலிய அரசு அதனை உடனடியாக அகற்றும்படியும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பு திருப்பீடத்திற்கு பேரதிர்ச்சியையும் வேதனையையும் தருவதாக திருப்பீடச் செய்தித்துறை இயக்குனர் பெடேறிக்கோ லொம்பாடி தெரிவித்துள்ளார்.

"எமக்குப் பிடித்தமான அடையாளத்தை எம்மிடம் இருந்து பிரிக்கும் முயற்சியாக இத்தீர்ப்பு அமைகிறது.


விசுவசிப்பவர்கள், விசுவசியாதவர்கள் யாவருமே விசுவாச அடையாளத்தைக் காப்பது இன்றியமையாதது ஆகும்" எனத் திருப்பீடச் செயலர் கர்தினால் தர்சீசியோ பெர்ததோனோ கவலை தெரிவித்தார்.




உங்கள் அனைவருக்கும் அன்பும், அருளும், அமைதியும் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள் மன்னா நிர்வாகம்

வருக! வருக! அ.ம.தி.களின் மேலாளரே!

## அ.ம.தி. களின் மேனிலை முதல்வர் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை



அமலமரித்தியாகிகளின் மேனிலை முதல்வர் (Superior General) பேரருள்திரு வில்ஹெய்ம் ஸ்ரெக்கிளிங் அமதி அடிகளார் டிசம்பர் 21ம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார். 24ம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் அவர் இங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளார். 22ம் திகதி செவ்வாய்க் கிழமை அவர் மன்னார் பேராலய மண்டபத்தில் மன்னார் மறைமாவட்ட குருக்கள் துறவியரைச் சந்தித்து உரைநிகழ்த்தவுள்ளார்.

டிசம்பர் 12ம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த இவர் அங்கு பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தார். போரின் வடுக்களால் வேதனையடைந்து வாழ்வில் களைப்படைந்து வாழும் எம் மக்களுக்கும் வடமாநில அமதிகளுக்கும் நம்பிக்கையை ஊட்டி ஆறுதல் அளிக்க வருகை தந்துள்ள தமது முதல்வரின் வருகையையிட்டு அமலமரித்தியாகிகள் அனைவரும் மகிழ்வடைந்துள்ளனர்.

அமதிகளின் பணித்தளங்களைச் சந்தித்து அவர்களோடு தனது ஒன்றிப்பை வெளிப்படுத்த வருகை தரும் அடிகளாரை மன்னா சார்பாக நாமும் வரவேற்று மகிழ்கின்றோம்.

## யார் பதில் சொல்வது?

வாதாடிப் பெறமுடியாததைப்
போராடிப் பெறமுனைந்த
ஒரு மக்களினத்தின்
உள்ளக் குமுறல் புரிகிறதா?
மௌனக் கதறல் கேட்கிறதா?

மூச்சிழந்து பேச்சிழந்து
உருவிழந்து திருவிழந்து
உரிமையிழந்து பெருமையிழந்து நிற்கும்
எங்கள் வாழ்வுக்கு விடிவில்லையா?
எங்கள் கண்ணீருக்கு முடிவில்லையா?






## இந்தியத் திருச்சபையின் முதல் மறைப்பணி மாநாடு

## The First Indian Mission Congress



இந்தியத் திருச்சபையின் முதல் மறைப்பணி மாநாடு மும்பை கோரேகாவுன் புனித பத்தாம் பத்திநாதர் கல்லூரியில் கடந்த ஒக்ரோபர் 17-18 வரை நடைபெற்றது.

"உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றது. இந்திய இலத்தின் ரீதி ஆயர் பேரவையின் தலைவரான மும்பை, கர்தினால் ஒஸ்வோட் கிராசியாஸ் இம் மாநாடுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் "இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தனித் தன்மையை ஆழப்படுத்த இம்மாநாடு உதவியது" எனக் குறிப்பிட்டார்.

## விடை பெறுகின்றேன் ; நன்றி கூறுகின்றேன்!



மன்னா பத்திரிகையின் ஆசிரியராக கடந்த 9 ஆண்டுகள் (2000 - 2009) இறை வழிநடத்தலோடு பணி செய்த நான் இவ்வருடத்துடன் எனது பணியை நிறைவு செய்கின்றேன். புதிய வருடத்தில் புதிய நிர்வாகம் மன்னா பத்திரிகைப் பணியை பொறுப்பேற்க உள்ளது.

எனது பணியில் எனக்குப் பக்கபலமாக இருந்த அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுகின்றேன். ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் எனப் பலரும் எனது பணியில் எனக்கு உற்சாகமூட்டி என்னைத் தட்டிக்கொடுத்தனர். அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்!

குறிப்பாக மன்னா பணியகத்தில் என்னோடு கூடஇருந்து கடுமையாக உழைத்த அலுவலகப் பணியாளர்கள், பங்குகளிலும் ஏனைய இடங்களிலும் பத்திரிகையை விநியோகித்து பலவித சவால்கள் மத்தியில் பணத்தை வசூலித்துத் தந்த மன்னா விநியோகஸ்தர்கள், ஆக்கங்களை, செய்திகளை அனுப்பி உதவிய எழுத்தாளர்கள், மன்னாவின் வளர்ச்சியில் மகிழ்ந்து பாராட்டி ஊக்குவித்த உள்நாட்டு வெளிநாட்டு வாசகர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் என் இதய நன்றிகள்.

மன்னாவின் புதிய நிர்வாகத்திற்கும் உங்களது மேலான ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் வழங்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன். உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்!

அருட்பணியாளர் தமிழ் நேசன், ஆசிரியர் - மன்னா

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## பிரசவ வேதனை நிறைந்த பத்திரிகைப் பணி

ஒரு பத்திரிகையை உருவாக்கி வெளிக்கொணர்வதென்பது ஒரு தாயின் பிரசவ வேதனைக்கு ஒப்பானது என்பார்கள். இது முற்றிலும் உண்மையான அனுபவ வார்த்தைகளாகும். ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய செய்திகளை, கட்டுரைகளைத் தேடித் தொகுத்து, சொற்பிழை, கருத்துப்பிழை, எழுத்துப் பிழை போன்றவற்றைக் கவனித்து, தேவைக்கு ஏற்ப விடயங்களைக் கூட்டி குறைத்து ஒழுங்காக்கி, பொருத்தமான கவர்ச்சியான தலைப்பிட்டு, தேவையான படங்களைத் தேடி எடுத்துப் போட்டு, ஒவ்வொரு பக்கமாக மிக அவதானமாக வடிவமைத்து பத்திரிகையின் அனைத்துப் பக்கங்களையும் கணனியில் உருவாக்குவது என்பது பல மணித்தியாலங்கள் - பல நாட்கள் கண் துஞ்சாது, பசி நோக்காது மேற்கொள்ளப்படும் மிகவும் கடினமான பணியாகும்.

கணனியில் வடிவமைத்த விடயங்களை கண்ணாடித் தாளில் அச்சாக்கி இன்னும் குறுந்தகட்டில் பதிவு செய்து கொழும்பு செல்லும் பயணிகளில் நம்பிக்கையான ஒருவரிடம் அதைக்கொடுத்து அனுப்பி அச்சக உரிமையாளரின் கையில் அதைப் பக்குவமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கொழும்பு அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு தனித்தனிப் பக்கங்களாக பொதி செய்து லொறி மூலம் அனுப்பப்படும் பத்திரிகைகளை மன்னாரில் பொறுப்பேற்று பணியகத்திற்குக் கொண்டுவர வேண்டும். தனித்தனிப் பக்கங்களாக உள்ள அத்தனை பத்திரிகைகளையும் ஒரு முழுப்பத்திரிகையாக அடுக்கி மடிக்க வேண்டும். பல பணியாளர்கள் இரவு பகலாக நின்று இந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டும். முழுப்பத்திரிகையாக உருவாக்கப்பட்டவற்றை ஒவ்வொரு இடங்களுக்கும் அனுப்பப்படும் தொகைக்கேற்ப எண்ணி, பொதிகளாகக் கட்டி விலாசங்களைக் கணனியில் அச்சடித்து எடுத்து வெட்டி ஒட்ட வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகைகளுக்கு தேவைக்கு ஏற்ப முத்திரைகளை ஒட்ட வேண்டும்.

தபால் மூலம் அனுப்பத் தயாராகவுள்ள தனிப்பிரதிகளையும், பொதிகளையும் தபாலகத்தில் ஒப்படைக்க வேண்டும். நேரடியாகக் கொடுக்கப்படவேண்டிய தனிப்பிரதிகளையும் பொதிகளையும் தூரத்தின் அடிப்படையில் சைக்கில் மூலமாகவும், மோட்டார் சைக்கில் மூலமாகவும், வான் மூலமாகவும் கொண்டுசென்று உரியவர்கள் கையில் ஒப்படைக்க வேண்டும். இரண்டு மூன்று முழு நாட்கள் மேற்கொள்ளப்படவேண்டிய பணி இது.

ஒப்படைக்கப்பட்ட பத்திரிகைகளுக்கான பணத்தை உரியவர்களிடம் இருந்து பெறுவதென்பது கல்லில் நார் உரிக்கும் முயற்சியாகும். பத்திரிகையைப் பெறும் குடும்பங்கள் அந்த அன்பியத்தில் அல்லது ஊரில் உள்ள விநியோகஸ்தர்களிடம் பணத்தைக் கொடுக்க வேண்டும். அந்த விநியோகஸ்தர் அந்தப் பங்கின் பங்குத் தந்தையிடமோ அல்லது அருட்சகோதரியிடமோ பணத்தை ஒப்படைக்க வேண்டும். அந்த பங்குத் தந்தையோ அல்து அருட்சகோதரியோ அந்தப் பணத்தை எமது பணியகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆக இந்த மூன்று நபர்களும் (குடும்பங்கள், விநியோகஸ்தர்கள், பங்குத்தந்தை அல்லது அருட்சகோதரி ஆகியோர்) உரிய காலத்தில் - கிரமமாக பணத்தை கைமாற்றினால்தான் அந்தப் பணம் எம்மிடம் வந்து சேரும். இதில் பலவித காலதாமதங்கள் ஏற்படும்.

பணம் வந்து சேரவில்லை என்பதற்காக அடுத்த பத்திரிகையை அடிக்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு பத்திரிகைக்குமுரிய அச்சடிக்கும் பணம், அலுவலகப் பணியாளர்கள் சம்பளம், காகிதாதி செலவுகள், விநியோகச் செலவுகள், தபால் செலவுகள் போன்ற அனைத்துச் செலவுகளும் அந்த அந்த மாதம் செலுத்தியே ஆக வேண்டும். பத்திரிகைக்குரிய பணம் உரிய காலத்தில் வந்தால்தானே இவற்றைச் செலுத்த முடியும்?

ஆக, மன்னாரில் இப்பத்திரிகையை அச்சடிக்கக்கூடிய அச்சியந்திர வசதி இல்லாத ஒரு சூழ்நிலையில் - பத்திரிகைக்கென எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் இல்லாத நிலையில் - முதல் மாதப் பத்திரிகைப் பணத்தை நம்பியே அடுத்த மாதப் பத்திரிகையை அடிக்க வேண்டிய சூழ்நிலையில் கடந்த பத்து வருடங்களாக இடைவெளியின்றி மாதா மாதம் தொடர்ச்சியாக இந்தப் பத்திரிகையை வெளிக்கொணர்ந்து வந்துள்ளோம்.

மேற்குறிப்பிட்ட எல்லாவித தடைகளையும், சவால்களையும், நிதி நெருக்கடிகளையும் தாண்டி ஒவ்வொரு பத்திரிகையையும் வெளிக்கொணர்வது என்பது உண்மையில் ஒரு பிரசவ வேதனையே! இந்த வேதனையில் இறைவனின் அருட்கரம் அபரீதமாக எம்மை வழிநடத்தியதை உணர்ந்தோம்.

இந்தப்பிரசவ வேதனையுடன் குழந்தை பிறந்தவுடன் ஏற்படும் மகிழ்ச்சியையும் நாம் அனுபவித்தோம். ஒரு பத்திரிகை அச்சடிக்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டு எமது கைக்கு வந்து சேர்ந்ததும் - அதைக் கையில் எடுத்து ஆசையோடு பிரித்துப் பார்க்கும்போது அனுபவித்த பிரசவ வேதனைகள் காணாமல் போய்விடும். புதிய குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் மனம் பரவசப்படும். அந்த மகிழ்ச்சியே அடுத்த மாத பத்திரிகை வேலைக்கு எம்மை உந்தித்தள்ளும்.
மீண்டும் மறுமடலில் (புதிய பதிப்பாசிரியர் உங்களைச் சந்திப்பார்.

**அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்,**
**பதிப்பாசிரியர் - மன்னா**



# வாசகர் எண்ணங்கள்

## சுகந்தம் வீசும் தென்றலாய் என் இதயத்தை வருடிச் செல்





மன்னா! எனும் மூன்றெழுத்து முத்தாரமே! - நீ
மணிமகுடம் பூண்டு உலகமெல்லாம்
வலம் வருவதன் மாயமென்ன!
மாதமொருமுறை தவங்கிடந்து
மாயாஜால வித்தைகள் காட்டி
புதுப்புது அர்த்தங்களோடே செய்திகளை
இயம்பிடும் ஜாலமென்ன!

உன் வரவு கடவுளின் தரிசனம்போல்
தோன்றிடும் அவதாரம் என்ன!
நீ கூறும் கனிமொழிகளால் - என்
இதயம் பறிபோகும் மோகமென்ன!
உனைக்காண ஏங்கும் விழிகளில்
என் மனம் வலுவிழந்து நிற்கும் கோலமென்ன?

பசியில்லை, தாகமில்லை, ஊன் உறக்கம் எதுவுமில்லை
மாதம் விடிந்ததும் நீ தாமதியாமல் ஓடிவா!
வந்து என் வாசற்படிகளைத் தட்டி
உன் உயிர்மூச்சை எனக்குத் தா - அப்போ
உன் வரவால் மகிழும் எனக்கு
புத்தொளி பிறக்கும், புத்துணர்ச்சி தோன்றும்.
உன் வருகை கண்ட என் நெஞ்சம் உன்னைச் சுற்றி சுற்றி வரும்.

வா! மன்னாவே! தாமதியாமல் என்னருகே வா!
சுகந்தம் வீசும் தென்றலாய் என் இதயத்தை வருடிச் செல்.

*- அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

## அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணத்தால் கடந்த நவம்பர் மாத பத்திரிகை வெளிவரவில்லை. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களை இணைத்ததாக இப்பத்திரிகை வெளிவருகின்றது என்பதை மன்னா வாசகர்களுக்கு தெரியப்படு[illegible]கின்றோம். - பதிப்பாசிரியர்

## அத்தனை அம்சங்களும் அருமை

நீ தரும் அத்தனை அம்சங்களும் மிகவும் அற்புதம். வாசகர் எண்ணங்கள் பகுதி எனக்கு மிக மிகப்பிடித்தது. அதிலும் இன்றைய சூழ்நிலைகளில் அரசியல் அலசல்கள் மிகவும் பிரமாதம். சிந்திக்க வைக்கும் சிந்தனைத் துளிகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள். பவுல் ஆண்டையொட்டிய கட்டுரைத் தொடர் அருமையான அர்த்தமுள்ள கருத்துக்களைச் சுமந்து எமது நெஞ்சை அள்ளிச் செல்கிறது. மேலும் மன்னா விளம்பரப்பலகை திடீரென மறைந்து திடீரெனத் தோன்றியுள்ளது. இதனையும் மறையாமல் வெளியிடுங்கள். தொடரும் காலங்களிலும் உங்கள் பணி தொடர வாழ்த்தும் உங்கள் அன்பு வாசகி,

*- ஞா. கி. குயின்சி, பொன்தீவுகண்டல், அளவக்கை*

## மாதந்தோறும் காத்திருக்கின்றேன்

என் இனிய மன்னாவே, என் இனிய தோழியே!
மாதம் தோறும் புன்னகையோடு காத்திருக்கின்றேன்
நீ சுமந்து வரும் அம்சங்கள் இனிமையிலும் இனிமை
வரிசையாய்த் தரும் வாசகர் எண்ணங்கள்
கவிதைகள் சிறுகதைகள் அனைத்தும் மனதை மகிழவைக்கும்
இனிய மன்னாவே, மீண்டும் உன் அம்சங்களைக் காண ஆசையோடு காத்திருக்கின்றோம்.
உனக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

*பி. கரோலின் மெடோனா, தோட்டவெளி, மன்னார்.*

## இணையற்ற மன்னா ஈர்த்தது உள்ளத்தை



அன்பு என்ற அரும் பொருளை
ஆர்வத்துடன் தேடித் திரிந்தபோது
இணையற்ற மன்னாப் பத்திரிகை
ஈர்த்தது எம் உள்ளங்களை!

உன்னை மாதம் ஒருமுறை காண
ஊக்கத்துடன் காத்திருக்கும் நான்
எப்போ மீண்டும் கையில் தவழ்வாய் என
ஏக்கமுடன் காத்திருக்கின்றேன்.

ஐக்கியமாய் எம் மத்தியில் வருவாய்
அவ்விடம் இருந்து இவ்விடம் வரும்போது
ஒன்று இரண்டு விடயங்களை அல்ல
ஓராயிரம் விடயங்களைச் சுமந்து வருகின்றாய்

செ. ஜெசி, கல்மடுநகர், வட்டக்கச்சி

# கருத்துக் களம்

கருத்துக்களப் பகுதியில் இடம்பெறும் கருத்துக்கள் மன்னாவின் கருத்துக்கள் அல்ல. கருத்துக்களுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே! நீங்களும் உங்கள் கருத்துகளை ஆதரித்தோ மறுத்தோ எழுதலாம். (பதிப்பாசிரியர்).

## திருவழிபாட்டு உதவியாளர்கள் வெள்ளை ஆடை அணிவது கட்டாயமா?

**ச. யேசுராசா – கீரி, மன்னார்**

"கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் இருக்கும் மக்களைப் புறப்பட்டு வரச் செய்" (எசா. 43:8). வெள்ளை ஆடை அணிவதா? எனும் இக்கருத்துக் களத்திற்கு எழுத வேண்டிய தேவை இல்லை என்றே எண்ணியிருந்தேன். ஏனெனில் "வெறும் சொற்களைப் பற்றிச் சண்டையிடுவது பயனற்றது, அது கேட்போரின் அழிவுக்கு ஏதுவாகும் எனக் கடவுள் முன்னிலையில் சான்று பகர்ந்திடு" (2 திமொத் 2:14) என இறைவார்த்தை கூறுகிறது. அது மட்டுமன்றி "உலகப்போக்கிலான வீண் பேச்சுக்களை விலக்கு, ஏனெனில் அதனால் அவர்கள் மென்மேலும் இறைப்பற்று அற்றவர்களாவார்கள்." (2 திமொ.2:16) எனவும் கூறுகிறது. ஆதலால் இது வெறும் சொற்களைப் பற்றியது. உலகப்போக்கிலானது என்பதால் எழுதாமல் விட்டுவிடலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் "அவர்கள் தங்களுக்கு கற்பிக்கப்பட்ட உண்மைச் செய்தியைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் நலந்தரும் போதனையை அறிவுறுத்தவும், எதிர்த்துப் பேசுவோரின் தவறை எடுத்துக் காட்டவும் வல்லவர்களாய் இருப்பார்கள்" (தீத்து 1:9) எனும் இறை வார்த்தை இதை எழுதத்தூண்டியது.

பாடசாலைக்குப் பிள்ளைகள் சீருடையில் வரவேண்டும், மறுப்புக் கிடையாது. தொழிற்சாலைக்கு சீருடையில் வரவேண்டும், எதிர்ப்புக் கிடையாது. ஆனால் திருப்பலியின்போது முன்னுரை, வாசகங்கள், விசுவாசிகள் மன்றாட்டுக்கள், செபங்கள் வாசிக்க வரும்பொழுது வெள்ளை ஆடை அணிந்து வரவேண்டும் என்று ஆலயங்களில் கொண்டுவரப்படும் ஒழுங்குமுறைகளைக் கேட்டவுடன் ஆடையே அணிந்து வரவேண்டாம் என்று கூறப்பட்டதுபோல் சிலர் தாம் தூம் என்று குதிப்பது ஏன்? உலகப் போக்கிலான காரியங்களுக்கு ஒழுங்கு கட்டுப்பாடுகள் தேவை. ஆன்மீகக் காரியங்களுக்குத் தேவையில்லையா?

மறுப்புத் தெரிவிப்போரின் கருத்துக்கள் வழியே சிந்தித்துப் பார்ப்போம். பாடகர் குழாமில் முதுகு யன்னல்கள் இருப்பதால் சேர்ந்து பாடமுடியவில்லையே என்று அங்கலாய்க்கும் இவர்களால் வினோதமான உடைகளுடன் பீடத்தில் ஏறி வாசகம் வாசிப்பதை மட்டும் செவிமடுக்க முடிகிறதா? அலங்கோல ஆடைகள், ஆடம்பர ஆடைகளுடன் வாசகம் வாசிக்கப்படக் கூடாது என்பதற்காகவேதான் வெள்ளை ஆடை எனும் கட்டுப்பாடு கொண்டு வரப்படுகிறது. "ஐயோ! பாவத்தில் விழச்செய்யும் உலகுக்கு கேடு! பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்போருக்குக் கேடு" (மத் 18:7) என்று இறை வார்த்தை கூறுகிறது. பலி செலுத்த வருவோர் பாவத்தில் விழக்கூடாது என்பதற்காகவே வெள்ளை ஆடை அணிந்து வாசிக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது.

வெள்ளை உடுத்தி வந்தால் போதுமா உள்ளம் வெள்ளையாக இருக்க வேண்டாமா? இது நியாயமான கேள்விதான். ஆனால் "நம்முள் ஒவ்வொருவரும் தம்மைக் குறித்தே கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பர்" (உரோ 14:12) என்று இறை வார்த்தை கூறுகிறது. எனவே வாசிப்பவர்களின் உள்ளம் வெள்ளையா, கறுப்பா என்று நாம் ஏன் கவலைப்பட வேண்டும். கவலைப்படவேண்டியவர்கள் அவர்களே. "என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை, மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செய்பவரே செல்வர்." (மத். 7:21) என்று கூறுகிறது. இதனைப் பணி செய்வோர் புரிந்துகொள்ள வேண்டும். நாம் அடுத்தவர்களைக் குற்றம் சாட்டுவதிலேயே குறியாக இருக்கிறோம். "என் இதயத்தைத் தூயதாக்கிவிட்டேன், நான் பாவம் நீக்கப்பெற்று தூய்மையாயிருப்பவன்" என்று யாரால் சொல்லக் கூடும்?" (நீதி மொழிகள் 20:9) என்று இறை வார்த்தை கேட்கிறது.

திருப்பலி ஒப்புக்கொடுக்கும்பொழுது அருட்தந்தையர்கள் மட்டும் சிவப்பு, பச்சை, பொன் என்று நிறங்கள் அணியலாமா? என்று கேட்கிறார் ஒருவர். அதுவும் வழிபாட்டுக் குழுவுக்குத் தலைவராக இருப்பவர். அத்தோடு ஒரு அம்மாவை வாசிக்கக் கூறுகிறார், "என்னிடம் வெள்ளை ஆடை இல்லை" என்று அந்த அம்மா கூறுகின்றார். அவரோ நிற ஆடை அணிந்து வாருங்கள் என்று கூறுகிறார். வாசிப்பவர்களுக்கு வெள்ளை உள்ளம் இல்லை. எதிர்ப்பவர்களுக்கு வெள்ளை மனம் உண்டா?

"அறிவுத்தெளிவுடன் இருங்கள், நேர்மையுடன் நடந்து கொள்ளுங்கள். பாவம் செய்யாதீர்கள், ஏனெனில் உங்களுள் சிலருக்குக் கடவுளைப் பற்றிய அறிவு இல்லை. உங்களுக்கு வெட்கம் உண்டாகவே இதைச் சொல்கிறேன்" (1கொரி 15:34). "வீட்டுக்காரர் உயிரோடு இருப்பதால் நான் வெள்ளை அணிய மாட்டேன்" இளைஞர், யுவதிகளாய் இருப்பதால் வெள்ளை நாகரீகம் இல்லை, நற்செய்தியை அறிவிக்க நிபந்தனை போடுகிறீர்கள், தனி மனித சுதந்திரத்தில் தலையீடு செய்கிறீர்கள் போன்ற சாக்குப் போக்குகளை விட்டொழிப்போம்.

"கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால், எல்லா மக்களையும்விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம்" (1 கொரி. 15:19) எனும் வார்த்தையை நினைவில் கொண்டு திருவழிபாட்டின் பங்காளராகும்போது வெள்ளை ஆடையை அணிவதே சிறந்தது என ஏற்றுக்கொள்வோம்.

“குருக்களின் வாழ்வும் பணியும்” என்ற தொனிப்பொருளில்

# மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு – 2010

மன்னார் மறைமாவட்ட வருடாந்த மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு கடந்த டிசம்பர் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் நடைபெற்றது. “குருக்களின் வாழ்வும் பணியும்” என்ற தொனிப்பொருளில் இம்மாநாடு நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் அனைவரும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட துறவிகள், பொதுநிலையினர் என பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

திருத்தந்தையின் திருமடலின் அடிப்படையில் ‘குருக்களின் ஆண்டைப் பிரகடனம் செய்ததன் நோக்கம்’ பற்றிய உரையை அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி அவர்கள் வழங்கினார்.

“பொதுக் குருத்துவம் - பணிக் குருத்துவத்தின் ஒருங்கிணைப்பு, தெளிவான பார்வை” என்ற தலைப்பில் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எம். வி. ஈ. இரவிச்சந்திரன் அவர்களும், “இறை அனுபவம் - குருத்துவ ஆன்மீகத்தின் அத்திவாரம்” என்ற தலைப்பில் அருட்பணியாளர் கிறிஸ்ரியன் வாஸ் அவர்களும், “குருத்துவத்தின் 3 முக்கிய அருட்பணிகளும் அவற்றை ஆற்றும்போது எதிர்கொள்ளும் சவால்களும்” என்ற தலைப்பில் அருட்பணியாளர் எஸ். எம். செல்வரெட்னம் (கரவையூர்ச் செல்வம்) அமதி அவர்களும் உரை நிகழ்த்தினர்.

உரைகளைத் தொடர்ந்து குழு ஆய்வுகளும் இடம்பெற்றன. இம்மாநாட்டின் செயலராக அருட்பணியாளர் எம். ஜெயபாலன் அடிகளார் செயற்பட்டார். அத்துடன் அருட்பணி. டக்ளஸ் லோகு அடிகளாரும் இணைப்பாளராக செயலாற்றினார். “அன்பிய வாழ்வின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணம்” என்ற மையப்பொருளில் 2007ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுத் திட்டத்தை மன்னார் மறைமாவட்டம் செயற்படுத்தி வருகிறது. இந்த வகையில் இந்த ஆண்டு குருக்களின் ஆண்டாக இருப்பதனால் “குருக்களின் வாழ்வும் பணியும்” என்ற தலைப்பில் மறைமாவட்ட செயற்திட்டங்கள் வடிவமைக்கப்படவுள்ளன. இதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டது.

## குருத்துவப் பொன்விழாக் காணும் முன்னாள் பேராயர்



கொழும்பு மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் தனது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கிறார்.

பொன்விழா நன்றித் திருப்பலியை கடந்த டிசம்பர் மாதம் 14ம் திகதி மாலை 5.00 மணிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் ஒப்புக்கொடுத்தார். இதில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருக்கள் மற்றும் இறைமக்கள் கலந்துகொண்டனர்.

## ஜெனரல் பொன்சேகா ஆயர்கள் சந்திப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா அண்மையில் கொழும்பு பொறளையில் உள்ள ஆயர் பேரவைச் செயலகத்தில் கத்தோலிக்க ஆயர்களைச் சந்தித்தார்.

இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணா நாயக்க, ஜோசப் மைக்கல் பெரேரா, டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மடுத்திருப்பதிக்குள் செல்வதற்கான அனுமதி

மடுத்திருப்பதிக்குள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மட்டும் உள்நுழைவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் (MOD) வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாட்களிலும்கூட காலை 6.00 மணிக்கு உள்நுழைந்து மாலை 6.00 மணிக்கு முன் வெளியேறி விடவேண்டும். யாரும் இரவில் இங்கே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த இரண்டு நாட்களிலும் காலை 9.00 மற்றும் 11.00 மணிக்கு திருப்பலிகள் ஒப்புக் - கொடுக்கப்படும் என மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ் அடிகளார் மன்னாவுக்கு தெரிவித்தார்.

## திருத்தொண்டராக திருநிலைப்படுத்தல் நிகழ்வு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் செ. அன்ரன் தவராஜா (இசைமாலைத்தாழ்வு), மற்றும் வெ. எமில் எழில்ராஜ் (மாந்தை) ஆகியோர் கடந்த நவம்பர் மாதம் 26ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் அருட்சகோ. தவராஜா தாழ்வுபாட்டிலும் அருட்சகோ. எமில் தலைமன்னாரிலும் தற்போது தங்கள் பங்குப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

## மறைந்த மேரி பஸ்ரியன் அடிகளாரின் 25வது ஆண்டு நினைவு

வங்காலைப் பங்கில் பணியாற்றிய வேளையில் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 25ம் ஆண்டு நினைவு எதிர்வரும் ஜனவரி 6ம் திகதி வங்காலையில் சிறப்பாக நினைவுகூரப் - படவுள்ளது.

தமது அன்புக்குரிய அருட்தந்தைக்கு ஆலய வளாகத்தில் சிலை எழுப்பியுள்ள வங்காலை மக்கள், ஒவ்வொரு ஆண்டும் அன்னாரின் நினைவு நாளை வங்காலைப் பங்கில் உணர்வு -பூர்வமாக நினைவுகூர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மறைபரப்பு ஞாயிறு தின நிகழ்வுகள்

ஒவ்வொரு வருடமும் மன்னார் மறை மாவட்டத்தில் மறைபரப்பு ஞாயிறு நிகழ்வுகள் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்படுவது வழக்கம். ஒவ்வொரு பங்குகளிலும் சிறப்பான வியாபாரச் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து வரும் பணமும் மறைபரப்பு நிதியாக பங்குகளில் இருந்து வழங்கப்படுகின்றது.

இவ்வருடம் அனைத்துப் பங்குகளிலும் இருந்து மொத்தமாக ரூபா 1,586,978.00 (பதினைந்து இலட்சத்து எண்பத்தாறாயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டு ரூபாய்) சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பங்கும் சேகரித்த தொகை விபரம் பக்கம் 12ல் இடம்பெற்றுள்ளது.

## செபமாலைத்தாசர் சபைக்கு இரண்டு புதிய குருக்கள்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்கள் கடந்த செப்ரம்பர் 17ம் திகதி யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

யாழ் சில்லாலை புனித கதிரை மாதா ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் இம்மானுவேல் வேதநாயகம் இராஜேஸ்வரன் அவர்களும் யாழ் பேராலயப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் மரியதாஸ் மக்மிலன் அவர்களுமே திருநிலைப்படுத்தப்பட்ட புதிய குருக்களாவர்.

செபமாலைத்தாசர் சபையில் புதிய குருக்களாக மலர்ந்துள்ள இவர்களை மன்னா சார்பாக வாழ்த்தி வரவேற்கின்றோம்.

## மன்னாரில் தமிழ்ச் சங்கம் அங்குரார்ப்பணம்

கடந்த ஒக்ரோபர் மாதம் 4ம் திகதி மன்னாரில் தமிழ்ச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மன்னா பத்திரிகைப் பணியகமான மன்னார் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள ‘பொழிவகம்’ இல்லத்தில் இடம்பெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 100ற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர்.

‘மன்னார் தமிழ்ச் சங்கம்’ என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த அமைப்பானது மன்னார் மாவட்டத்தின் கலை இலக்கியங் - களைப் பேணவும் வளர்க்கவும், கலைஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களை ஒன்றிணைத்து ஊக்கப்படுத்தவும், அவர்களின் ஆற்றல் திறமைகளை வெளிக்கொணரவும் ஒரு உறுதியான செயற்திறன் வாய்ந்த அமைப்பாக இயங்க வேண்டும் என இச்சங்கத்தின் அங்குரார்பணக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னா பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் பதவி நிலைகளுக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் - அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார். பொதுச் செயலாளர் - கவிஞர் வி. எஸ். சிவகரன். பொருளாளர் திரு. தோமஸ் மரியதாஸ். சிரேஷ்ர உபதலைவவர் - திரு. என். ஜெயபாலசிங்கம். உபதலைவர் - ஜனாப் மக்கள் காதர். உதவிச் செயலாளர் ஜனாப் இஸ்சதீன், நிர்வாகச் செயலாளர் - அ. ஜஸ்மின் ஷறோன்

நிர்வாக உறுப்பினர்களாக அருட்பணி. ஜெறோம் லெம்பேட், வைத்தியர் லோகநாதன், திரு. சந்தியா மிராண்டா, திரு. எஸ். சூசைநாயகம் றெவல், திரு. செ. மாசில்லாமணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மன்/நானாட்டான் ம. வி.யின் புதிய அதிபராக அருட்சகோதரர் றெஜினோல்ட் நியமனம்

டிலாசால் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் எஸ். ஈ. றெஜினோல்ட் (மணி) அவர்கள் மன்/ நானாட்டான் மகா வித்தியாலயத் -தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த செப்ரம்பர் மாதம் 8ந் திகதி தனது பணிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

நானாட்டான் பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக பல காலமாக பலரும் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தப் புதிய நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த காலத்தில் இப்பாடசாலை - யின் அதிபராக இருந்த திரு. எஸ். ஜெகநாதன் அவர்களின் சிறப்பான பணியையும் இப்பாடசாலைச் சமூகம் நன்றியோடு நினைவுகூர்ந்தது.

அருட்சகோதரர் றெஜினோல்ட் அவர்கள் கல்வித்துறைசார் நிர்வாகப் பணிகளில் அனுபவம் பெற்றவராக உள்ளார். வங்காலை புனித ஆனாள் ம.வி.யில் ஒன்றரை வருடங்கள் அதிபராகவும், மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் சில காலம் தற்காலிக அதிபராகவும், அடம்பன் பாடசாலையில் இரண்டு வருடங்கள் பிரதி அதிபராகவும் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டவர்.




கலைத்துறைப் பட்டதாரியான (B.A) இவர், கல்வியலில் டிப்ளோமாவையும்,(Dip. in Ed.) ஆங்கில மொழிமூல கல்வியியல் முதுமாணிப் பட்டத்தையும் (M.Ed.) பெற்றுள்ளார்.

அன்பாக, பண்பாகப் பழகும் இனிய சுபாவமும், யாருடனும் இசைந்துபோகும் மேலான நற்குணங்களும், சிறந்த நிர்வாகத் திறமையும் கொண்ட அருட்சகோதரர் அவர்களின் புதிய பணி சிறக்க மன்னா மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றது.

## யாழ் அமலமரித்தியாகிகளுக்கு இரு புதிய குருக்கள்

யாழ் மாகாண அமலமரித்தியாகிகளின் இரு அருட்சகோதரர்கள் றொபேட் றொபின்சன் அமதி (கரம்பொன்), பாக்கியநாதன் கிறிஸ்ரி நிர்மலராஜன் அமதி (சுன்னாகம்) ஆகிய இருவரும் கடந்த டிசம்பர் 14ம் திகதி குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

யாழ் ஆயர் பேரருள்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் அமதிகளின் முதல்வர் பேரருள்திரு வில்ஹய்ம் ஸ்ரெக்கிளிங் அமதி அடிகளாரின் பிரசன்னத்தில் யாழ் மரியன்னை பேராலயத்தில் இவர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். புதிய குருக்களுக்கு மன்னாவின் செபம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.



அருட்பணியாளர்
றொபின்சன் அமதி



அருட்பணியாளர்
நிர்மலராஜன் அமதி

## மன்னார் மறைமாவட்ட செய்திகள்



# முத். ஜோசப் வாஸின் முன்னூறாவது விண்ணகப் பிறப்பு விழா

## பங்குத் தளங்களில் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள்

முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளார் இறைபதமெய்திய 300ஆவது ஆண்டு விழாவையொட்டி முத். யோசப்வாஸ் அடிகளார் தேசிய மன்றத்தின் மன்னார் மறை மாவட்ட இணைப்பாளர் அருட்பணியாளர் ம. க. அருட்பிரகாசம் அடிகளார் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்விழாவையொட்டி பங்குத்தளங்களில் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். அவை பின்வருமாறு:

- ஒவ்வொரு திருப்பலியிலும் நற்கருணை மன்றாட்டின்போது முத். தூய ஜோசப்வாஸ் அடிகளாரை நினைவுகூர்தல்.
- மாதத்தின் ஒரு ஞாயிறு தினத்தில் முத். ஜோசப்வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்த வேண்டிய செபத்தை குருவானவர் தொடக்க மக்கள் எல்லோரும் செபித்தல்.
- பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் என்ற ரீதியில் கருத்தமர்வுகளை நடாத்துதல்.
- கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளை பங்கு மட்டத்தில் நடாத்தி சிறப்பான ஒரு கட்டுரை, ஒரு கவிதை, ஒரு சித்திரத்தை - அருட்பணி. ம. க. அருட்பிரகாசம், புனித செங்கோல் மாதா ஆலயம், முத்தரிப்புத்துறை - என்ற விலாசத்திற்கு 5.5.2010ற்கு முன்னர் அனுப்பி வைத்தல்.
- முத். ஜோசப்வாஸ் அடிகளார் நமது கிராமங்களுக்கு வந்துபோன தடயங்களைக் கண்டறிந்து எமக்கு அறியத்தருதல்.
- மன்னா பத்திரிகைக்கு முத். தூய ஜோசப் வாஸ் அடிகளாரைப் பற்றிய தகவல்கள், அவரது ஆன்மீக செயற்பாடுகள் மற்றும் பணியின் தன்மை போன்ற விடயங்களை பங்கு மக்கள் அல்லது ஆர்வமிக்க எழுத்தாளர்களை ஊக்குவித்து எழுதிப் பிரசுரித்தல்.
- முத். ஜோசப் வாஸ் அடிகளாரின் மன்றங்களை பங்கு ரீதியில் ஆரம்பித்தல் அல்லது மீண்டும் புனரமைப்புச் செய்தல்.
- ஒவ்வொரு பங்கிலும் முத். தூய ஜோசப்வாஸ் அடிகளாரின் பெயரில் வீதியொன்றை உருவாக்குதல்.

## 20 வருட நிறைவில்

# மன்னார் மடுமாதா சிறிய குருமடம்

மன்னார் மறைமாவட்டக் குருக்களை வித்திட்டு உருவாக்கும் மடு அன்னையின் பெயர் கொண்ட மன்னார் மடுமாதா சிறிய குருமடம் கடந்த 10.10.2009 சனிக்கிழமை தனது 20வது வருட திருவிழா நிறைவினை பெருமகிழ்வோடு நினைவுகூர்ந்து கொண்டாடி மகிழ்ந்தது.

அந்நாளின் சிறப்பு நிகழ்வுகள் திருப்பலியோடு ஆரம்பமாகியது. குருமட அதிபர் அருட்தந்தை ஏ. சேவியர் குருஸ் அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் நிகழ்வுகள் அனைத்தும் இடம்பெற்றன. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இரா. யோசேப்பு ஆண்டகையின் தலைமையில் காலை 7.00 மணிக்கு பழைய குருமட அதிபர்கள் ஏனைய குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

அந்தத் திருப்பலியில் ஆயர் அவர்களின் மறையுரையானது எல்லோருக்கும் ஒரு வேண்டுகோளாக அமைந்தது. பவுலின் வாழ்க்கை அனுபவத்திற்கும் இறை அழைத்தலுக்-கும் இடையில் உள்ள தொடர்புகளை மையமாகக் கொண்டு அழைத்தலை நாம் எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்று ஆலோசனைகளும் அறிவுரைகளும் கூறினார்

இந்தத் திருப்பலிக் கொண்டாட்டத்திலே மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளார், குருமட உதவி அதிபர் அருட்தந்தை எல். ஞானாதிக்கம், மன்னார் மறைமாவட்டக் குருக்கள், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், குருமடத்தில் கல்வி பயிற்று - விக்கின்ற ஆசான்கள், நன்கொடையாளர்கள், பழைய மாணவர்கள், மன்னார் வளனார் விடுதி மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மற்றும் அந்நாள் திருப்பலியானது எமது சிறிய குருமடத்திலிருந்து களுத்துறை பெரிய குருமடம் செல்லும் 4 மாணவர்களுக்குமான பிரியா - விடைத் திருப்பலியாகவும் அமைந்தது.

எமது குருமடத்தில் தற்போது 47 மாணவர்கள் கல்வியும் உருவாக்கமும் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் இந்தக் குருமடத்திற்கு ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் தரம் 9-13 வரையில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குத்தந்தை ஊடாகத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

தொடர்ந்து திருப்பலி நிறைவில் காலை உணவு விருந்து உபசாரம் இடம்பெற்றது. பின் வளனார் விடுதி மாணவர்களுக்கும், சிறிய குருமட மாணவர்களுக்கும், மறைமாவட்டக் குருக்கள் அணிக்கும் இடையில் மென்பந்து, உதைபந்து, கரப்பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. பின்னர் மதிய உணவு விருந்து உபசாரம் நடத்தப்பட்டு காலை முதல் மாலை வரை குருமட திருவிழா மிகவும் சிறப்பாகவும், மகிழ்வாகவும் கொண்டாடப்பட்டது.

- செல்வன் ச. லுமன் லோகு -
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.


## மன்னார் கீரி, தாமோதரம் வீதியில்

# புதிய ஆலயத் திறப்பு விழா




திரு. திருமதி. அமிர்தநாதனும், அவர் சகோதரனும் இணைந்து தமது விடாமுயற்சியினால் மன்னார் கீரியில் உள்ள தாமோதரம் வீதியில் ஒரு ஆலயத்தை அமைத்துள்ளனர். இதனை கடந்த ஆவணி மாதம் 19ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் அபிஷேகம் செய்து திறந்து வைத்ததுடன் குருக்களுடன் சேர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் 500க்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். தற்போது ஒவ்வொரு திங்கட்கிழமையும் இந்த ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

## குருமட திருவிழா நிகழ்வுகளின் நிழல்கள்









## பள்ளிமுனைப் பங்கில்

# முதியோர் தின விழா

கடந்த 11.10.2009 ஞாயிறு தினம் அன்று பள்ளிமுனைப் பங்கில் முதியோர் சங்கத்தின் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலை 7.45 மணியளவில் பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி இடம்பெற்றது. மன்னார் மறை மாவட்ட முதியோர் சங்க சமாசத்தின் இயக்குனர் அருட்பணியாளர் அ. செபமாலை அடிகளார் இத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். திருப்பலி முடிந்ததும் முதியோர்களின் ஆசீரைப் பெறுவதற்காக O/L, A/L வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகள் ஆலயத்தின் முற்றத்தில் காத்திருந்து முதியோர்களின் ஆசீரை பெற்று மனநிறைவுடன் சென்றனர். முதியோர்களுக் - கான காலை உணவும் வழங்கப்பட்டது.

பிற்பகல் 4.00 மணியளவில் முதியோர்களை மகிழ்விப்பதற்காக ஆண்கள், பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பிரதம விருந்தினராக அருட்பணி. அ. செபமாலை, திரு. எஸ். எஸ். லெம்பேட் (J.P.) அவர்களும் சிறப்பு விருந்தினராக சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி எஸ். யோகவதி அம்மையாரும் கலந்துகொண்டனர். மற்றும் வேறு பல பிரமுகர்களும் பொதுமக்களும் இவ்விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருந்தனர்.

பள்ளிமுனை முதியோர் சங்கத் தலைவர் திரு. ஆ. ஆனந்தம் றோச் வரவேற்புரை வழங்கினார். சங்கத்தின் உப தலைவர் திரு. ஏ. சூசைதாசன் றோச் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் மன்னார் சமாசத்தின் செயல்பாடுகளையும் செயல் திட்டங்களையும் விரிவாக எடுத்துக் கூறியதுடன் சமூகசேவைகள் பற்றிய விபரங்களையும் விளக்கினார். மன்னார் மாவட்ட மூத்த பிரஜைகள் சங்க சமாசத்தின் செயலாளர் ஜனாப் மக்கள் காதர் அவர்கள் முதியோர் படும் கஷ்டங்களையும் துன்பங்களையும் எடுத்துக் கூறினார். அருட்பணி. செபமாலை அடிகளார் முதியோர்களின் ஆற்றல்களையும் அறிவுத் திறன்களையும் மதிப்பு மரியாதைகளையும் விளக்கிக் கூறினார்.

இதனிடையே செல்வி. M. தர்சி பிகிறாடோ அவர்கள் நெறிப்படுத்திய குழு நடனம் வருகை தந்த அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. இதைத் தொடர்ந்து சிற்றுண்டியும் தேனீரும் வழங்கப்பட்டது. பிற்பாடு பள்ளிமுனை முதியோர் சங்கத்தின் செயலாளர் திரு. ஏ. பத்திநாதர் பிகிறாடோ அவர்கள் நன்றியுரை வழங்க இறுதியாக இறுதிச் செபத்துடன் முதியோர் தின விழா சிறப்புடன் மாலை 6.30 மணியளவில் நிறைவேறியது.

- எம். ஆனந்தம் றோச், பள்ளிமுனை

## நீங்காத நினைவுகள்

### 45ம் நாள் நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 - 05 - 1952 |  | 17 - 11 - 2009 |

**மோசேஸ் மொத்தம் தர்மதாசன்**
பிறப்பு, இறப்பு பதிவாளர்
உயிர்த்தராசன் குளம், முருங்கன்

நாட்கள் 45 ஆனாலும் உம் நேசப் பிள்ளைகள் நாங்கள் நாற்றிசையிலும் தேடுகின்றோம் உங்கள் பாச முகம் பார்வைபட! இதமான புன்சிரிப்பும், கருணை கொண்ட பார்வையும், இதமான பேச்சும் இனி எப்போது காண்போம் - என ஏங்குகிறோம்?

நேற்றுவரை நீங்கள் எம்மோடிருந்து இன்று இறைவனோடு சங்கமித்தாலும் நாளை உங்கள் ஆன்மா எம்மோடு துணை நின்றிட நித்தமும் வேண்டுகிறோம் உங்கள் ஆன்மா சாந்திபெற!

*பிரிவால் துயருறும்,*
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

# கிறிஸ்மஸ் சிறப்பு பொழிவு

## கிறிஸ்து பிறப்பின் நோக்கம் என்ன?

ம. டிலோசியா, திருக்குடும்ப கன்னியர் மடம், தலைமன்னார்

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்த கிறிஸ்துவின் பிறப்பு நாளை அகில உலகமே ஒவ்வொரு வருடமும் கொண்டாடுகின்றது. பலர் பலவிதமான கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுகின்றனர். ஆனால் இயேசுவைத் தம் சொந்த இரட்சகராக ஏற்று "கிறிஸ்தவன்" என்னும் நாமம் தரிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு இந்தக் கிறிஸ்மஸ் விழா கொடுக்கும் அர்த்தம் என்ன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

தேவமகன் ஏன் இப்பூமியில் பிறந்தார்? என்ற நோக்கத்தை அறியாமல் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் எல்லாம் வெறும் அர்த்தமற்ற கொண்டாட்டங்களாகவே அமையும். எனவே அவரது பிறப்பின் நோக்கத்தை உண்மையாக அறிந்து உணர்ந்து இந் நாட்களை அர்த்தமுள்ளதாக்குவோம்.

✝ 1 திமொ 1:15 "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார்"

✝ லூக்கா 19:10 "இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்"

இறைவனைவிட்டுப் பிரிந்துபோனவர்களை, காணாமல்போனவர்களை, பாவிகளை மீட்கவே இயேசு இவ்வுலகில் பிறந்தார். அவர் விலை கொடுத்து எம்மை மீட்டு தனது பணியை நிறைவேற்றி முடித்துவிட்டார். ஆனால் இன்று நாம் பாவிகளாய், சோரம் போனவர்களாய் காணப்படுவோமானால் இயேசு எம்மைத் தேடி வருகின்றார். இவ்வருடத்தின் கிறிஸ்து பிறப்பு விழா எமது மீட்பு விழாவாய் அமையட்டும்.

✝ 1 யோவான் 3:8 "அலகையின் செயல்களை தொலைக்கவே இறைமகன் தோன்றினார்"

ஆதிப்பெற்றோரின் பாவத்திற்கும் அதன் தொடர்ச்சியான விளைவுகளுக்கும் காரணமானவன் அலகை. எனவே அலகையின் செயற்பாடுகளை தன்னோடுகூட சிலுவையில் அறைந்து எமக்கு விடுதலை தந்துவிட்டார் (உரோ6:6). ஆனால் பாவம் செய்கிறவன் அலகையைச் சார்ந்தவன் (1யோவான் 3:8) என்று கூறுவதுபோல் நாம் பாவம் செய்து ஆன்மீக மரணம் அடைந்த நிலையில் இருப்போமானால் இயேசு எம்மை தேடிவருகின்றார். அவர் எம்மில் உருவாக அவருக்கு இடம் கொடுப்போம். இயேசு எம்மில் உருவாகாதவரை அலகையின் செயற்பாடு - களுக்கு நாம் தளம் அமைத்துக் கொடுக்கின்றோம்.

✝ யோவான் 18:37 "உண்மையை எடுத்துரைப் -பதே என் பணி இதற்காகவே நான் பிறந்தேன்"

அன்று இயேசு பிலாத்துவைப் பார்த்து இவ்வார்த்தைகளைக் கூறியபோது உண்மையா அது என்ன? என்று பிலாத்து கேட்டான். இந்தக் கேள்விக்கு நாமும் பதில் காணும்போதுதான் அவர் பிறப்பின் நோக்கம் எமக்குத் தெளிவாகும். உரோ.3:4, தி.பா.31:6 "இறைவனே உண்மையுள்ளவர்" என்று கூறுகின்றது. எனவே இயேசு பிறந்தது தந்தைக்கு சாட்சி கொடுக்க, அவரை வெளிப்படுத்த. எனவேதான், "என்னைக் கண்டவன் என் தந்தையைக் கண்டான்" என்றார். மேலும் இயேசு, "நானே வழியும் உண்மையும் உயிரும்" என்றார். எனவே நாமும் கிறிஸ்துவிற்கு சாட்சிகளாய் இருக்க வேண்டும். "உண்மையை அறிவீர்கள், உண்மை உங்களை விடுதலையாக்கும்" என்று கூறியவர் "உமது வார்த்தையே உண்மை" (யோ17:17) என்றும் கூறுகின்றார். எனவே நாமும் இறைவார்த்தையின் பணியாளர் ஆகி உண்மையாக இருக்கும் இயேசுவின் சாட்சி பகர வேண்டும்.

✝ லூக்கா 12:51 "மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கின்றீர்கள் இல்லை. பிளவு உண்டாக்கவே வந்தேன்"

இயேசு சமாதான பிரபு (எசாயா 9: 6). அவர் சமாதானத்தை ஏற்படுத்த வந்தார். ஆனால் இயேசு இங்கு கூறும் பிரிவினை எது? இறைவார்த்தை வெளிப்பட்டபோது பிரிவினை உண்டானதை தொடக்க நூல் முதல் அதிகாரம் கூறுகின்றது. "வெளிச்சம் உண்டாகட்டும்" என்று இறைவன் கூறியபோது வெளிச்சம் உண்டாகி இருள் பிரிந்தது. இறைவார்த்தையால் நீரும், ஆகாயமும் பிரிந்தது. இதைப்போலவே வார்த்தை மாமிசமான போது உலகிற்கு ஒளியாக வந்தவர் இருளின் ஆட்சிக்குள், அலகையின் ஆட்சிக்குள் இருந்தவர்களைப் பிரித்து எடுத்து ஒளியின் பிள்ளைகள் ஆக்கினார். இதுதான் இயேசு உருவாக்கிய பிளவு. இயேசு கொண்டுவந்த சமாதானம் இறைவனோடு மனிதனை ஒப்புரவாக்கும் சமாதானம். எனவே தேவவசனம் எம்மில், எம் குடும்பங்களில் வரும்போது அன்றே பிரிவினை உண்டாகும். இது ஒரு ஆரோக்கியமான பிரிவினை.

எனவே நாம் உலகத்தில் வாழ்ந்தாலும் உலக காரியங்களிலிருந்து பிரிந்து இறைவனுக்கு உகந்த பாத்திரங்களாக எம்மை அவர் உருவாக்க கிறிஸ்மஸ் விழா உதவியாக அமையட்டும்.

---

இறைவனின் இரக்கத்தாலும் புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# திருவருகைக்காலத் திருமடல்

கிறிஸ்து இயேசுவின் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!



### முன்னுரை

இறைத்தந்தை உலகின்மேல் கொண்ட அன்பின் காரணமாகத் தம் ஒரே திருமகன் இயேசுக் கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி தமது அன்பின் தன்மையை உலகறியச் செய்தார் (1 யோவான் 4:8-9). இந்த வரலாற்று நிகழ்வை கிறிஸ்து பிறப்பு விழாவாகக் கொண்டாட நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டிலே, உலகையே அதிரவைத்த வரலாறு காணாத ஒரு பேரவலம் நிறைந்த போரையும், இடப்பெயர்வுகளின்போது ஏற்பட்ட வார்த்தையால் வர்ணிக்க முடியாத துன்பங்களையும் தாங்கிவந்த எம் அருமையான மக்களையும், எம் எல்லோரையும் அமைதியின் அரசரான இயேசுவின் பிறப்பு விழா நம்பிக்கையில் ஆழமாய் வேரூன்ற அழைத்து நிற்கின்றது. "நீங்கள் மகிழ்ச்சியோடு புறப்படுவீர்கள், சமாதானத்தில் நடத்திச் செல்லப்படுவீர்கள்." (இசையாஸ் 55:12) எனும் ஆண்டவரின் வாக்குறுதியில் நம்பிக்கையைப் புதுப்பித்து தொடர்ந்து பயணிப்போம். இந்த வேளையிலே அங்கவீனர்களாகவும், அனாதைகளாகவும் ஆக்கப்பட்டு உறவினர்களையும், உடமைகள் அனைத்தையும் இழந்து நிற்கதியாய் நிற்கின்ற எமது அருமையான மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது எமது பொறுப்புள்ள கடமையாகின்றது.

இவர்களுக்காக இடைவிடாது உருக்கமாக செபித்து எமது நல் உதவிகளைத் தாராள மனத்தோடு செய்ய இவ்வேளையிலே முன்வர வேண்டும். இதற்காக இந்தத் திருவருகைக் - காலத்தின் ஞாயிறு வாரங்களிலும், கிறிஸ்து பிறப்பு விழாவின்போதும் உங்களின் காணிக்கைகளைத் தாராள மனத்தோடு கொடுத்துதவுமாறும், முடியுமானவர்கள் தனிப்பட்ட முறையிலும் பங்குத் தந்தை மூலம் தமது பங்களிப்பைச் செய்ய முன்வருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

### மறைமாவட்ட யூபிலியைத் தொடர்ந்த ஐந்தாண்டு மேய்ப்புப்பணித் திட்டம்

"அன்பியத்தளங்கள் ஊடாகப் பங்கேற்கும் திருச்சபையை உருவாக்குதல்" என்ற மறைமாவட்டத் திட்டத்திலே, 2007ம் ஆண்டு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினில் பயணிக்கும் எமது மன்னார்த் திருச்சபையில் கடந்த மூன்று ஆண்டுகளாக முறையே செப ஆண்டு, இறைவார்த்தை ஆண்டு, பவுலடியாரோடு நற்செய்தி அறிவிப்பு ஆண்டு என மேய்ப்புப் பணித் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றோம். இந்த வரிசையிலே 2010ம் ஆண்டு நற்கருணை ஆண்டாகத் திட்டமிடப்பட்டிருந்த வேளையில், பரிசுத்த தந்தை இவ்வாண்டை குருக்களின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பது ஓர் அர்த்தமுள்ள நிகழ்வுப் பொருத்தமாகும். நற்கருணையைத் தமது வாழ்வாகவும், நற்கருணைச் சமூகத்தை வளர்ப்பதைத் தமது பணியாகவும் கொண்டவர்களே குருக்கள். எனவே இந்த 2010ம் ஆண்டிலே தைத்திங்கள் தொடக்கம் "குருத்துவ வாழ்வும் பணியும்" என்ற பொருளை மையமாகக்கொண்டு எமது பணித்திட்டங்களை முன்னெடுப்போம்.

### பவுலடியார் ஆண்டின் நிறைவு

திருச்சபையின் ஒப்பற்ற திருத்தூதராம் பவுல் அடியார் பிறந்த இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டை அனைத்துலகத் திருச்சபையுடன் நினைவுகூர்ந்து எமது மறைமாவட்டத்திலும், "பவுல் அடியார் வழி மறைபரப்பாளராவோம்." எனும் கருப்பொருளை மையமாகக் கொண்ட ஓர் மேய்ப்புப்பணித் திட்டத்தை 2009ல் மேற்கொண்டோம்.

இதன்பொருட்டு அவரது அழைப்பு, ஆன்மீகம், பணி ஆகியவற்றை ஆழப்படுத்தி நற்செய்தி அறிவிப்பை சிரமேற்கொள்ள பல்வேறு நிகழ்வுகள் பங்குளில் இடம்பெற்றதை நீங்கள் அறிவீர்கள். கிறிஸ்துவோடு இணைந்து வாழும் பொருட்டு "அனைத்தையும் குப்பை" எனக் (பிலிப்பியர் 3:8-9) கருதி நற்செய்தி அறிவிப்புப் பணிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த பவுல் அடிகளாரின் திருமடல்களில் இழையோடும் ஆன்மீக முத்துக்கள், எம்மை எவ்வளவாய்த் தொட்டுள்ளன என்பதையும், "நற்செய்தியை அறிவிக்காவிட்டால் எனக்கு ஐயோ கேடு' என்ற அவருடைய அர்ப்பணிப்பு, எம்மை எவ்வளவாய் கவர்ந்துள்ளது என்பதையும் தனியாகவும், பங்கு ரீதியிலும் மீளாய்வு செய்துகொள்ள உங்களை அழைத்து நிற்கின்றேன். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

---

## அருட்பணி. பிலேந்திரன் அடிகளாரின்
## 'தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்' நூல் வெளியீடு

யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும், கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத் துறைகளின் தலைவருமான அருட்கலாநிதி ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகளார் இவ்வாண்டு 'தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்' என்ற மற்றுமொரு நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் பல்கலைக்கழக (B.A) வெளிவாரி மாணவர்களுக்கும், கிறிஸ்வ நாகரீகத்தைக் கற்கும் உயர்தர (A/L) மாணவர்களுக்கும் ஏற்றதாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் உள்ளடக்கத்தைப் பற்றி பிலேந்திரன் அடிகளார் இப்படிக் குறிப்பிடுகிறார். "கிறிஸ்தவ மறையைப் பரப்பும் நோக்குடன் தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் ஆக்கப்பெற்றன. ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகள் மொழி பெயர்ப்பு இலக்கியங்களாக முன்னோடி இலக்கியங்களை ஆக்க, றொபேட் டீ நொபிலி அடிகள் ஆக்க இலக்கியங்களைப் படைத்தார். திருவிவிலிய நூல்கள் கிறிஸ்தவத்தின் முக்கிய மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

மக்களின் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப அம்மானை, பள்ளு போன்ற பிரபந்த கிறிஸ்தவ இலக்கியங்கள் புதிய கிறிஸ்தவர்களாலும் மிசனறிமாராலும் ஆக்கப்பெற்றன. பெரும்




எண்ணிக்கையிலான நாட்டுக்கூத்து இலக்கியங்களும், வியாகுலப் பிரசங்கம் என்னும் பக்தி இலக்கியமும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் ஆகிய இலக்கியங்களின் தோற்றம் கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு மேலும் சிறப்பைச் சேர்த்துள்ளன. இவை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன." என்கிறார்.

தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களை ஆராய்ந்து அவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் அடிகளாரின் முயற்சி பாராட்டிற்குரியது.


---

## அருட்பணி. தமிழ் நேசன் அடிகளாரின்
## 'நெருடல்கள்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

மன்னா பத்திரிகையின் ஆசிரியரும் மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் எழுதிய 'நெருடல்கள்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த 28.11.2009 அன்று மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார்த் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் ஜனாப் மக்கள் காதர் தலைமை தாங்கினார். வரவேற்புரையை தமிழ்ச்சங்க செயலாளர் கவிஞர் வி. எஸ். சிவகரன் வழங்கினார். மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, மன்னார் பிராந்திய உதவி உள்ளுராட்சி ஆணையாளர் திரு. எம். ஏ. ஜே. துரம், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. ஆபேல் றெவல் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

ஞானோதய இயக்குனர் அருட்பணியாளர் ஜெரோம் லெம்பேட் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். மன்/ ஆனாள் ம.வி. ஆசிரியர் கவிஞர் தென் புலோலியூர் பரா. ரதீஸ் நூல் பற்றிய மதிப்பீட்டுரையை வழங்கினார். செல்வி தியோஜினி பத்திநாதன் அவர்களின் பரதநாட்டிய நடன நிகழ்வு இடம்பெற்றது. இறுதியாக நூலாசிரியர் தமிழ் நேசன் அடிகளாரின் ஏற்புரை





மற்றும் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன. ஐநூறுக்கும் அதிகமான மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு நூலாசிரியரிட மிருந்து நூல்களைப் பெற்றுக்கொண்டனர்.

பல பேராசிரியர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளனர். தினக்குரல் போன்ற தேசிய பத்திரிகைகள் இந்நூலைப் பாராட்டி மதிப்பீட்டுரை எழுதியுள்ளன. இந்நூலை மன்னார் வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம். படங்களுடன்கூடிய இக்கவிதை நூலின் விலை 250.00 ரூபா.

# திருச்சபைச் செய்திகள்

## உலகப்போர் மற்றும் யூதப்படுகொலைகள் பற்றிய நினைவு அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு நம்மைத் தூண்ட வேண்டும்

### திருத்தந்தை வலியுறுத்து




இரண்டாம் உலகப்போர் மற்றும் யூதப்படுகொலைகள் பற்றிய நினைவுகள் அமைதியைக் கட்டியெழுப்ப நம்மைத் தூண்ட வேண்டும் என திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தெரிவித்துள்ளார். உலகப்போர்கள், யூதப்படுகொலைகள் பற்றிய நினைவுகள் வரலாற்றில் மீண்டும் இத்தகைய கொடுமைகள் நிகழாதிருப்பதற்கான நமது முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் என்று கூறிய திருத்தந்தை, அன்பு மற்றும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளுதலிலிருந்து அமைதிக்கான பயணம் தொடங்க வேண்டும் எனவும் கூறினார்.

மனிதனில் இறைவனின் சாயலை உருக்குலையச் செய்யும் வன்முறை, இனப்பாகுபாடு, சர்வாதிகாரம், தீவிரவாதம் ஆகியவற்றுக்கு எதிராக மன்னிப்பையும் ஒப்புரவையும் ஊக்குவிப்பதில் மதங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என திருத்தந்தை மேலும் தெரிவித்தார்.

## திருமண முன் ஆயத்த வகுப்புக்கள் (Pre Cana Classes)

2010ம் ஆண்டில் மன்னார் மற்றும் முருங்கன் மறைக்கோட்டங்களில் இடம்பெறவுள்ள திருமண முன் ஆயத்த வகுப்புகள் பற்றிய விபரங்களை மன்னார் மறைமாவட்ட குடும்பப்பணி நிலையம் வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| மாதம் | திகதி |
|---|---|
| ஜனவரி | 16 - 17 |
| பெப்ரவரி | 13 - 14 |
| ஏப்ரல் | 17 - 18 |
| மே | 15 - 16 |
| யூன் | 19 - 20 |
| யூலை | 17 - 18 |
| ஓகஸ்ட் | 21 - 22 |
| செப்ரம்பர் | 18 - 19 |
| ஒக்ரோபர் | 16 - 17 |
| நவம்பர் | 20 - 21 |
| டிசம்பர் | 18 - 19 |



## அடிப்படை ஆங்கிலம் மற்றும் கணனி சான்றிதழ் கற்கை நெறி
## Certificate Course In Basic English & Computor

அடிப்படை ஆங்கிலம் மற்றும் கணனி சான்றிதழ் கற்கை நெறியானது 2009ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு ஞானோதயத்தில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 11ம் திகதி காலை 9.00 மணிக்கு இக்கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது. இது 3 மாதங்களுக்கு வார நாட்களில் திங்கள் முதல் வெள்ளிவரை இடம்பெறும். இக்கற்கை நெறி மாணவர்களின் ஆங்கில வாசிப்பு எழுத்து மற்றும் அடிப்படைக் கணனி அறிவை முன்னேற்றுவதற்குரிய முயற்சியாகும். இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இக்கற்கைநெறியில் பங்கெடுக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள ஞானோதயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பயிற்சி இணைப்பாளர் அருட்பணியாளர் எட்வின் வசந்தராஜா அடிகளார் தெரிவிக்கின்றார்.

## கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியின் ஞானப்பிரகாசர் தமிழ்க் கழக கலைவிழா

கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியின் ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகக் கலைவிழா சிறப்பு நிகழ்வுகள் கடந்த டிசம்பர் 5ம் 6ம் திகதிகளில் அம்பிட்டிய தேசியக் குருத்துவக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றன.

5ம் திகதி மாலை 4.00 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது. "இன்றைய சூழ்நிலையில் குருக்கள் எதிர்நோக்கும் சவால்கள்" என்ற தலைப்பில் மன்னா பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இதில் தமிழ்க்கழக உறுப்பினர்கள், குருமட குருக்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அடுத்த நாள் ஞாயிறு காலை 6.30 மணிக்கு தமிழ்ப் பண்பாட்டு முறையிலான திருப்பலி இடம்பெற்றது. இதனை தமிழ் நேசன் அடிகளாரே ஒப்புக்கொடுத்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் மறையுரை ஆற்றினார். இப்பண்பாட்டுத் திருப்பலியில் குருத்துவக் கல்லூரியின் அனைத்து அருட் - தந்தையர்கள், அருட்சகோதரர்கள், ஆசிரியர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

அன்றைய நாளின் மாலை 3.00 மணிக்கு குருமடத்தின் சக்கற் கலையரங்கத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை வருகை தந்திருந்தார்.

ஞானப்பிரகாசர் தமிழ்க்கழக மேலாளர் அருட்பணியாளர் நோயல் இம்மானுவேல் அடிகளாரின் வழிகாட்டலில் தமிழ் அருட்சகோதரர்களின் ஒத்துழைப்போடு இந்நிகழ்வுகள் அனைத்தும் இனிதே இடம்பெற்றன.

## திருச்சபையின் வளர்ச்சி திருநிலையினர் பொதுநிலையினருக்கிடையிலான கயிறு இழுப்புப் போட்டியல்ல

திருச்சபையின் வளர்ச்சி என்பது திருநிலையினருக்கும் பொதுநிலையினருக்கும் இடையிலான கயிறு இழுப்புப் போட்டியல்ல என யாழ் மறைமாவட்டத்தின் மூத்த பொதுநிலையினர் திரு. ஏ. சந்தியாப்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 29ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுநிலையினர் எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது "திருநிலையினரின் உடன் உழைப்பாளிகள் என்ற அடிப்படையில் பொதுநிலையினரை திருநிலையினர் இதயபூர்வமாக ஏற்றுச் செயற்பட வேண்டும்" எனக் கூறினார்.

## யாழ் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் எழுச்சி மாநாடு

கடந்த நவம்பர் மாதம் 29ம் திகதி யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் எழுச்சி மாநாடு யாழ் பத்திரிசிரியார் கல்லூரியில் நடைபெற்றது.

இம்மாநாட்டிற்கு யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ் மறை மாவட்ட பொதுநிலை ஆணைக்குழுவின் புதிய இயக்குனர் அருட்பணி. எம். வி. ஈ. இரவிச்சந்திரன் அவர்கள் இம்மாநாட்டைக் கூட்டி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அவர் தனது உரையில் பொதுநிலையினரின் எழுச்சியும் முதிர்ச்சியுமே திருச்சபையின் வளர்ச்சி என்றும் திருநிலை, துறவுநிலை, பொது நிலையினர் அனைவரும் இணைந்து பங்கேற்கும் திருச்சபையாக மாறவேண்டும் என்றார்.

## குருக்களுக்கு எதிராகக் கடிதம் எழுதும் பழக்கத்தை விடுத்து நேர்மையாகப் பிரச்சினைகளை அணுக வேண்டும்

### குருக்கள் ஆண்டு நிகழ்வில் கண்டி ஆயர்



குருக்களுக்கு எதிராகக் கடிதம் எழுதும் பழக்கத்தை விடுத்து நேர்மையாகப் பிரச்சினைகளை அணுக வேண்டும் என கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார். கடந்த 31.10.2009 அன்று நாவலப்பிட்டி பங்கில் இடம்பெற்ற குருக்களை கௌரவிக்கும் நிகழ்வின் திருப்பலியில் மறையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அன்றைய மறையுரையில் ஆயர் மேலும் கூறியதாவது, "கத்தோலிக்க குருத்துவத்திலேயே குருவும் பலிப்பொருளும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு பலி ஒப்புக்கொடுக்கும்போது குரு தாமே பலியாக மாறவேண்டும். எனவே அவரது வாழ்வு ஆண்டவர் இயேசுவை முன்மாதிரியாகக் கொண்டதாக அமைய வேண்டும். இருந்தும் குருவும் ஒரு மனிதப்பிறவியே. மக்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றிலும் குறைகாணும் பழக்கத்தைவிட்டு சகோதர மனப்பான்மையுடனும் விவிலிய அறிவுரைப்படியும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும். தேவையற்ற விதத்தில் கடிதம் எழுதும் பழக்கத்தை விடுத்து நேர்மையாகப் பிரச்சினைகளை அணுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட எமது குருக்களுக்காக நாம் தினமும் மன்றாட வேண்டும்"

## நாவலப்பிட்டி பங்கில் சேவையாற்றிய குருக்களை கௌரவிக்கும் நிகழ்வு

2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19ம் திகதி முதல் 2010 ஆனி மாதம் 19ம் திகதி வரை குருக்களின் ஆண்டாகத் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் பிரகடனப்படுத்தியதை அடுத்து கண்டி ஆயர் அவர்களின் பணிப்புரையின் பேரில் கடந்த 31-10-2009 அன்று நாவலப்பிட்டி பங்கில் பணியாற்றிய குருக்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இப்பங்கில் இடம்பெற்றது.

காலை 8.00 மணியளவில் நாவலபிட்டி நகரசபை மண்டப முற்றத்தில் இருந்து ஆரம்பமான பவனி நாவலப்பிட்டி புனித மரியாள் ஆலயத்தைச் சென்றடைந்தது. இந்தப் பவனியில் கண்டி மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர் அருட்திரு மில்ரோய் பொன்சேகா, ஆயரின் பதிலாள் அருட்திரு பாலா இராஜேந்திரம், ஏறக்குறைய 25 குருக்கள் மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். நாட்டின் கலாசார நடனக் குழுவினராலும் பங்கின் பேண்ட் வாத்தியக் குழுவினராலும் இவர்கள் அனைவரும் ஆலயத்திற்கு அழைத்து-வரப்பட்டனர்.

அதனை அடுத்து கண்டி மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின்பின் நாவலப் பிட்டி பங்கு மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஷேட கலை நிகழ்வுகளும் பகல் விருந்துபசாரமும் நடைபெற்றன. இந்நிகழ்வினை நாவலபிட்டி பங்குத்தந்தை அருட்திரு திமோத்தி ஞானபிரகாசம் அடிகளார் வெகுசிறப்பாக ஒழுங்குசெய்திருந்தார்.

*A. ஸ்டெனிஸ்லோஸ்*
*போஹில் எஸ்டேட், நாவலபிட்டி*



பவனியில் செல்லும் ஆயர் மற்றும் குருக்கள்

## நானாட்டானில் டிலாசால் அருட்சகோதரர்களின் இல்லம்

நானாட்டான் பங்கில் டிலாசால் அருட்சகோதரர்களின் புதிய இல்லம் கடந்த செப்ரம்பர் மாதம் 20ம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்காலிக வீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த இல்லத்தை மன்னார் ஆயரின் பிரதிநிதியாக வருகை தந்த குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் திறந்துவைத்தார்.

கடந்த 58 வருடங்களாக மன்னார் மண்ணில் குறிப்பாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்விப்பணியாற்றிவரும் டிலாசால் அருட்சகோதரர்கள் தங்கள் பணித்தளங்களை விரிவுபடுத்தி வருகின்றனர். கடந்த 2004ம் ஆண்டு மக்களினதும் மன்னார் ஆயரினதும் வேண்டுகோளுக்கு அமைய அடம்பனில் ஒரு இல்லத்தை நிறுவி அங்கு கல்விப் பணியை மேற்கொண்டு வந்தனர். பின்னர் மக்கள் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தபோது அந்த இல்லம் மூடப்பட்டது. பின்னர் நானாட்டான் பகுதி மக்களினதும் மன்னார் ஆயரினதும் வேண்டுகோளுக்கு இணங்க நானாட்டானில் இவர்கள் தமது மூன்றாவது இல்லத்தை அமைத்துள்ளனர்.

இவ்வில்லத்தின் முதல்வராக அருட்சகோதரர் எஸ். செல்வதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவரோடு பாடசாலையின் அதிபர் அருட் - சகோதரர் றெஜினோல்ட் அவர்களும் இவ்வில்லத்தில் தங்கியிருந்து பணிபுரிகின்றார். அருட்சகோதரர் செல்வதாஸ் அவர்கள் நானாட்டான் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார். இவர் 9 வருடங்களுக்கு மேல் பாகிஸ்தானில் பணியாற்றினார். மன்னார் டிலாசால் இல்லத்தின் முதல்வராகவும், விடுதிச்சாலை பொறுப்பாள - ராகவும், அடம்பன் இல்லத்தின் முதல்வராகவும் பணித்தள அனுபவமுள்ளவர். புதிய இடத்தில் ஆரம்பித்துள்ள டிலாசால் இல்ல சகோதரர்களின் பணிகள் சிறக்க மன்னா வாழ்த்துகிறது.



## தாயக மண்ணின் மறைப்பணி முன்னோடிகளான

# அமலமரித் தியாகிகள் சபை



# மேனிலை முதல்வரின் யாழ் மாகாண விஜயம்

# வருக! வருக!


## எங்கள் உயர் தலைவரே வருக!

**அருட்பணியாளர் ம. போல் நட்சத்திரம்,**
**அமதிகளின் யாழ் மாகாண முதல்வர்**

அமலமரித்தியாகிகள் சபையின் உயர் மேலாளர் அதிவண. வில்ஹெம் ஸ்ரெகிலிங் அமதி. அவர்கள் யாழ் மாகாண அமலமரித் தியாகிகளை மார்கழி 12 – 20ம் திகதி வரை தரிசிக்கின்றார். இங்கு தங்கியிருக்கும் நாட்களில் அவர் அமலமரித்தியாகிகளின் வருடாந்த தியானத்தைப் போதிப்பதுடன் அவர்களின் பணி மையங்களையும் பார்வையிடுவார். புதிதாக நிறுவப்பட்ட சில விசேட பணி மையங்களைத் திறந்தும் வைப்பார்.

பன்னாட்டு ரீதியாக 164 நாடுகளில் பணிபுரிந்து வரும் 4,550க்கும் மேலான அமலமரித் தியாகிகளின் தலைவரான இவர், எளிமையும், பொறுமையும், இரக்கமும் ஆழ்ந்த ஆன்மீகமும் கொண்ட ஒரு ஒப்பற்ற துறவியாவார். ஏழைகள் மட்டில் அளவுகடந்த அக்கறையும் தமது சபையில் உள்ள ஒவ்வொரு அமலமரித் தியாகியின்மேல் தனிப்பட்ட கரிசனையும் கொண்டவர். குறிப்பாக யாழ் மாகாணப் பணி மையங்கள் போர்ச் சூழல்களால் அழிக்கப்பட்டபோதும் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தபோதும் குருக்கள் முகாம்களில் வாடியபோதும் நமது அமல அன்னை அன்பகப் புதல்வர்கள் கதிகலங்கிய போதும் நம்பிக்கையின் தூணாக, பரோபகாரத்தின் அடையாளமாக தம்மை எம்முடன் இணைத்துக்கொண்டவர்.


இறை வல்லமையுடன் யாவற்றையும் சாதித்து விடலாமென்ற இவரது நம்பிக்கை



அபாரமானது. தூரநோக்கோடு காலச் சக்கரத்தின் நெழிவு சுழிவுகளை யதார்த்தமாகப் பார்த்து முடிவெடுக்கும் ஒப்பற்ற தலைவர். குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வில் பங்குகொள்ளும் யாழ் ஆயரையும் குருமடங்களையும் தரிசிக்கும் அதேவேளையில் யாழ் மறைமாவட்ட குருக்கள் துறவிகளுக்காக ஒரு உரையையும் நிகழ்த்தவுள்ளார்.

மார்கழி 21 – 24 வரை மன்னார் மறை மாவட்டத்தைச் சந்திக்கும் இவர், அங்கு அமதிகளையும் ஆயரையும் தரிசித்து குருக்கள் துறவிகளுக்கான உரையையும் நிகழ்த்தவுள்ளார்.

*பேரருள் தந்தையே, மனம் மகிழ உங்களை எம் மண்ணுக்கு வரவேற்கின்றோம்! தீமைகள் அழிந்து புதுவாழ்வு மலரும் ஒரு நிகழ்வாக உங்கள் பிரசன்னம் அமையட்டும்!*



அமதிகளின் மேனிலை முதல்வர்
பேரருட்திரு விஸ்ஹெம் ஸ்ரெக்கிலிஸ் அடிகளார்

# அமலமரித்தியாகிகளின் உயர் மேலாளர் அதிவண. வில்ஹெம் ஸ்ரெக்கிலிங்

## – வாழ்க்கைக் குறிப்பு –

பிரான்சியப் புரட்சியின் விளைவாகப் பூத்த பூவாகிய புனித இயூஜின் டி மசனட் தந்தையின் எண்ணத்தில் உருவான அமலமரித் தியாகிகள், இன்று உலகின் எல்லா பாகங்களிலும் இயேசுவின் நற்செய்திக்கு சான்று பகரும் தூதுவர்களாக வலம் வருவது கண்கூடு.

புனித யோசவாஸ் அடிகளாரின் அதி உன்னத சேவைக்குப் பின்னர் இலங்கைத் திருச்சபையைக் கட்டியெழுப்பிய பெருமை அமதிகளையே சாரும். "ஆண்டவர் இயேசுவை அறியாமலே ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள் இலங்கையில் இறந்து போகிறார்கள்" என்ற செய்தியைக் கேட்டு, அவர்கள்பால் வருத்தமுற்று, அவர்களுக்கு பணிபுரியவென தனது குருக்களை இங்கு அனுப்பினார் புனித இயூஜின்.

அவரை அடியொற்றி, இன்று தமது வாழ்வை இழந்தவர்களாக, தமது வாழ்வில் நம்பிக்கையிழந்தவர்களாக சாவை நோக்கி நடைப்பிணங்களாக வாழும் எமது மக்கள்மீதும், பணிபுரியும் அமதிகள்மீதும் தனக்குள்ள அக்கறையைத் தெரியப்படுத்தி, வாழ்வில் ஒரு நம்பிக்கையை விதைத்து, புதுவாழ்வுக்கு எம்மை அழைத்துச் செல்ல வருகிறார் அமலமரித்தியாகிகளின் உயர் மேலாளர் அதிவண. வில்ஹெம் ஸ்ரெக்கிலிங் அடிகளார்.

இவர் 1947ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி ஜேர்மனியில் படவோன் என்னும் மறைமாவட்டத்தில் வேல் என்னும் இடத்தில் பிறந்தார். அமலமரித்தியாகிகளினால் மேற்கொள்ளப்பட்ட மேய்ப்புப் பணியின்போது இவர் சபையைப் பற்றி அறிந்துகொண்டார். இரண்டாம் நிலைக் கல்வியை முடித்துகொண்டு சிறிய குருமடம் புகுந்தார். பின்னர் 1967ம் ஆண்டு முதல் அர்ப்பணத்தை செய்துகொண்டார். இறையியல் கல்வியைப் பூர்த்திசெய்துகொண்டு 1986-1989 வரையும் பில்கோமையோவின் துணை மாகாண முதல்வராகப் பணியாற்றினார். தன்னுடைய பணியை வெற்றிகரமாக முடித்துகொண்டு உருவாக்கல் பணியில் கால்பதிக்க ஆரம்ப நவசந்நியாச மடத்தை பொறுப்பு ஏற்று கொண்டார்.

1992ம் ஆண்டு இடம்பெற்ற அமதிகளின் பொது அமர்வில் குருக்கள் துறவிகளின் உருவாக்கத்திற்கு பொறுப்பான உதவி உயர் மேலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1998ம் ஆண்டு இடம்பெற்ற பொது அமர்வில் அமலமரித் தியாகிகள் சபையின் பன்னிரெண்டாவது உயர் மேலாளராக (Superior General) தெரிவானார்.

முதலாவது தவணையை நிறைவுசெய்து கொண்டு 2004ல் ஆண்டு நடைபெற்ற பொது அமர்வில் சபையின் உயர் மேலாளராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். இன்றுவரை அதே பதவியில் தன்னை முற்று முழுதாக இறைவனுக்கு கையளித்த அடிகளார் தனது மந்தைகளாகிய இலங்கை வடமாநில அமதிகளையும் அவர்கள் பணியாற்றும் மக்களையும் சந்திக்க வருகிறார். அவரது வருகை எம் எல்லோரது வாழ்வுக்கும் நம்பிக்கை ஒளிதரட்டும்!

## அமைதிகளின் தலைவரே வாழ்க வாழ்க

அறிவொளி புதைந்த கண்கள்
ஆழ்ந்த சிந்தனையின் நெற்றி
திறமையின் தகைமை மின்னும்
தீட்டிய வைரப் பாாவை
உறுதியிற் கடைந்த நெஞ்சம்
உயர்தள பதியின் தீரம்
அமைதியில் நாட்டம் ஓங்கும்
அன்புத் தலைவரே நீர் வாழ்க

தாழ்மைக்கு உருவம் தந்து
ஏழ்மையின் கோலம் பூண்டு
அரியமறை கலையில் மிகுந்து
ஆழ்கடல்போல் அமைதி பொங்க
தவநிலையில் செபத்தில் நிறைந்து
தரணியிலே ஒளியைக் கொடுக்க
அமதிகளின் தலைமைப் பொறுப்பில்
ஆர்வமாயிருப்பவரே வாழ்க

வாடுகின்ற பயிருக்கு மழைபோல்
வதனமலர் கண்டுமனம் பூரிக்க
ஆடுகின்ற மயில்களோ ஆர்ப்பரித்து
ஆனந்தம் பொங்கி நடனங்களாட
சூடுகின்றோம் இதயமலர் மாலைகளை
சொரிகின்றோம் இன்பக் கண்ணீர்
தேடியெம்மை காண்பதற்கு ஓடிவந்த
தெய்வமகனே பல்லாண்டு நீர்வாழ்க

ஏழைகள் குழந்தைகள் சிறையினிலே
ஏங்கிமனம் புண்ணாகி மடிகின்றோம்
வாழவழியின்றி பசியால் வருந்தி
வாழ்வை மாழவைக்கும் எம்நடுவில்
மீண்டும் வாழ்வுதரும் பாதைகாட்ட
மீட்பரவர் தூதுவராய் வருகின்ற
தோழனும்மை வரவேற்கக் கூடுகின்றோம்
தூமணியே நீடுழி வாழ்க வாழ்க

எங்கள் உயிர் வாழ்கவே மண்ணில்
எங்கள் தவம் எங்கள் பலம்
என்றும் ஓங்கி வாழ்கவே
எங்கள் கதி எங்கள் வழி
என்றும் வாழ்கவே வாழ்வில்
எங்கள் துணை எங்கள் தலை
என்றும் நீர் வாழ்க வாழ்கவே

## யாழ் அமதிகள் 2009

(யாழ் மாகாணத்தில்)

| | | |
|---|---|---|
| அருட்தந்தையர்கள் | - | 74 |
| திருத்தொண்டர்கள் | - | 06 |
| அருட்சகோதரர்கள் | - | 01 |
| குருமட மாணவர்கள | - | 19 |
| நவசந்நியாசத்தில் | - | 06 |
| சந்நியாச வாழ்வில் | - | 04 |
| மெய்யியல் கல்வியில் | - | 06 |
| இறையியல் கல்வியில் | - | 24 |

## உலகில் அமதிகள் 2009

| | | | |
|---|---|---|---|
| கருதினால் | - | - | 01 |
| பேராயர்கள் | - | - | 10 |
| ஆயர்கள் | - | - | 31 |
| அப்போஸ்தலிக்க முதல்வர்கள் - | | | 02 |
| குருக்கள் | - | - | 3,095 |
| அருட்சகோதரர்கள் | | - | 407 |
| குருமட மாணவர்கள் | | - | 698 |

## இளைஞனே

உன்னையும் ஆண்டவர்

## அழைக்கிறார்

அ.ம.தியாக மாறி

**இறைபணியில் இணைந்திட**

**தொடர்புகளுக்கு**

அதிபர்,
புனித வளனார் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
.................
அருட்தந்தை விமல், அமதி
அமதி அகம், 26, குட்செட் வீதி,
வவுனியா.
.................
பங்குத்தந்தை
புனித வனத்துச் சின்னப்பர் ஆலயம்,
அப்புத்தளை.

- தொகுப்பு : அமதி இறையியலகம், யாழ்ப்பாணம்

# கலை இலக்கியச் சாளரம்

## தவிக்கின்றோம்

பத்து மாதம் சுமந்து தனது உதிரத்தை
உணவாகக் கொடுத்த தாயைப் பிரிந்து
பிள்ளையின் உயர்வுக்காய்
வியர்வைத் துளிகளையும்
மண் கூடைகளையும்
தூக்கிச் சுமந்த தந்தையை இழந்து
போரின் விழிம்பில்
துப்பாக்கி முனைகளுக்கு
இரையாகிய சகோதரர்களை இழந்து
துப்பாக்கி முனைகளினால்
வீதிகளிலும் வைத்தியசாலைகளிலும்
பரதவித்து உயிர்களை இழந்த
உறவுகளைப் பிரிந்து பரதவிக்கின்றோம்.

*செ. ஜெசி D1, 21 முகாம்*
*அமல அன்னை அன்பகம், வவுனியா*

## மன்னித்து வாழ்!

மன்னிப்பு என்ற பண்பு
மாந்தர் மனதில் வளர்ந்திடட்டும்
மன்னிக்கும் மனமிருந்தால்
மானிலமே போற்றி நிற்கும்!

உன் தவறை உணர்ந்திடு
பிறர் தவறையும் மன்னித்திடு
உறவுகள் உன்னை வாழ்த்திட
உண்மையாய் மன்னித்து வாழ்ந்திடு

மன்னிப்பை ஆடையாய் அணிந்திடு
அதுவே உன் அணிகலனாகட்டும்
இதையே நீ ஒழுகி வாழ்ந்தால்
வாழ்வில் உனக்கு கவலை இல்லை

நண்பர் என்றும் சூழ்ந்திருப்பர்
பகைமை மறந்து சேர்ந்திருப்பர்
உறவும் உன்னை வாழ்த்தி நிற்பர்
ஊரும் உன்னைப் புகழ்ந்திடுவர்

இன்றே இதை நீ உணர்ந்திடு
இனிய சமூகம் படைத்திடு
உன்னைத் தொடரும் இளையோரும்
உலகில் உயர்ந்திட வழிசெய்திடு!

**ஜே. பி. ஜாண்சி, பொன்தீவுகண்டல்**

## நட்பு

உள்ளத்தின் பூரிப்பில் மலரும் வார்த்தைகள்
ஆத்மாவின் துடிப்பை ஆரத்தழுவியபடி
அரங்கேறுவது நட்பு.

நினைவுகளைக்கூட நிசப்தமாய் இரைமீட்டி
கனவுகளை நிஜமாக்கி
கூடவே உணர்வுடன்
இதயத்துடிப்பை இசையென ரசித்து
இன்ப துன்பத்தில் ஒன்றாய் கலந்ததே நட்பு

சோகத்தைக்கூட சுகமாய் மாற்றி
இதயத்தின் நாளத்தில் நாதமாய் ஒலிக்கும்
நிஜமான கீதமே நட்பு.



தேடியும் கண்டுபிடிக்க முடியாத
தேசத்திற்குப்போன பின்னும்
நினைவுகளின் நம்பிக்கையில்
சுவாசங்கள் தூக்கமிழந்து
காத்திருப்பதும் நட்புதான்!

**அ. ரேக்கா, தலைமன்னார் கிராமம்,**
**தலைமன்னார்**

## இறைவா! நீ வருவாயா?

பாசத்திற்காக ஏங்குகின்றேன்
நட்பிற்காகத் தவிக்கின்றேன்
பாசம் காட்ட எனக்கு உறவில்லை
உறவை வளர்க்க, பாசத்தைத் தர
இறைவா நீ வருவாயா?

சோகம் என்னை வாட்டுதம்மா
துன்பம் என்னை வருத்துதம்மா
ஆறுதல் கூறிட யாருமில்லை
அன்பைத்தர எனக்கு எவருமில்லை
ஆறுதல் கூறிவிட அன்பை தந்திட
இறைவா! நீ வருவாயா?

நித்தம் உன்னைக் காண
நித்தம் உன்னுடன் உறவாட
நித்தம் உன் அன்பைப்பெற
வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும்
ஏழையோடு பேசிட
இறைவா! நீ விரைந்து வருவாயா?

*ஏழையின் நெஞ்சம்*

## துளிப்பா

**பூமி**
சுமைகளைத் தாங்கி நிற்கும் அன்புக் கரங்கள்

**மெழுகுவர்த்தி**
மற்றவர்க்காய் தன்னை உருக்கும் தியாக தீபம்

**நண்பன்**
துன்பத்தில் தோள் கொடுக்கின்ற இலட்சியவாதி

**கண்ணீர்**
துன்பத்தின்போது வரும் வெளிப்பாடு.

**தாய்**
வேதனைக்குள்ளும் சாதனையாளனை உருவாக்கும் கருணையுள்ளம்.

**வாழ்க்கை**
ரயில் பாதையூடாகப் பயணிக்கின்ற பேரூந்து.

*பி. மதுஷாளினி D/1, மடுக்கோவில், மடு.*

**அன்பு**
அயோக்கியமானதைச் செய்யாத பொக்கிஷம்

**கல்வி** - இலவசமாகப் பெற்றுக்கொண்டு இலவசமாகக் கொடுப்பது

**நட்பு** - இவ்வுலகினில் நாம் சேர்க்கும் பெரிய சொத்து.

**அமமா** - எம்மை அன்போடு அரவணைக்கும் நெஞ்சம் கொண்டவள்.

**மேன்மை:**
மேன்மையடைய தாழ்மையே சிறந்த வழி.
நல்வாழ்க்கை சில நாள்களே நீடிக்கும்!
நற்பெயர் என்றென்றும் நிலைக்கும்!

*நா. சலோமி*
*இல. 69A, மடுக்கரை, நானாட்டான்.*

## சிரிப்பு(பூ)க்கள்

**ஆசிரியர்** : வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?
**மாணவன்:** திருடியவனுடைய பெயரைச் சொல்லுங்க சார். நான் கண்டு பிடித்துச் சொல்லுகிறேன்.

❖❖❖❖❖❖❖❖

**ஒருவர்** : மாப்பிளை தாலி கட்டும்போது ஏன் இரண்டு முடிச்சுடன் நிறித்திட்டாரு?
**ஒருவர்:** பேசிய சீதனத்தில பாதிதான் வந்திருக்காம். அதுதான்!

❖❖❖❖❖❖❖❖

**ஒருவர்** : ஏன் இவர் முதலாளியுடன் மண்வெட்டியைக் கொண்டு செல்கிறார்?
**மற்றவர்:** அதுவா? கூட இருந்து குழி பறிக்கத்தான்.

❖❖❖❖❖❖❖❖

**ஒருவர்** : நீ உன் மாமியாரை வேண்டுமென்றுதானே கிணற்றுக்குள் தள்ளி விட்டாய்?
**குற்றவாளி:** இல்லை சார் அந்த மாமியாரை வேண்டாமென்றுதான் தள்ளி விட்டேன்.

*கி. ஷாளினி இல. 54, மடுக்கரை,*
*அளவக்கை பங்கு*

**நேர்ஸ்** : டாக்டர் இரண்டு தடவை மயக்க ஊசி போட்டும் அவர் மயங்கி விழவில்லை.
**டாக்டர்:** ஊசியோட விலையைச் சொல்லுங்க உடனே மயங்கி விழுந்துடுவார்.

❖❖❖❖❖❖❖❖

**ரவி:** எங்க அப்பாவைப்போல நானும் ஒரு அதிபராக வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.
**வினோ:** அப்ப உங்க அப்பா அதிபரா?
**ரவி:** அவரும் அதிபராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டாராம்.

*ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு*

**1ம் நபர்** : நீங்கள் ஏன் மீன் சாப்பிடறதில்லை
**2ம் நபர்:** முள்ளு இருக்கிறதால
**1ம் நபர்** : அப்ப செருப்பு போட்டுச் சாப்பிடுங்க

❖❖❖❖❖❖❖❖

**டாக்டர்** : உங்களுக்கு என்ன வருத்தம்?
**நோயாளர்:** சீனி வருத்தம்
**டாக்டர்:** அப்ப நிறைய எறும்புகள் தேடி வருமே

❖❖❖❖❖❖❖❖

**ராணி** : எங்க மாமிக்கு சரியான வாய் நீளம்
**மாலா:** அப்ப எப்படி சமாளிக்கின்றீர்கள்?
**ராணி:** எனக்கு கொஞ்சம் கை நீளம்!

*ஞா. எய்லின் ஸ்ரெபானி,*
*262, ஒல்லிமோட்டை, சாவக்கட்டு*

# வன்னி மக்களுக்கான மனித நேயப் பணிகளில் மன்/ஆதார வைத்தியசாலைச் சிற்றாலய நிர்வாகம்

### அனைவரின் பணிகள் பற்றிய ஓர் பார்வை

திரு. அல்மேடா,
தலைவர், புனித ஆரோக்கிய அன்னை ஆலய சபை,
ஆதார வைத்தியசாலை, மன்னார்.



*வைத்தியசாலை ஆன்மீகக் குரு அருட்பணியாளர் ஜெ. ஜெகானந்தன்*

நடப்பு ஆண்டின் (2009) தொடக்கம் முதலே வன்னியில் நடைபெற்ற உக்கிரமான போர் காரணமாக ஏராளமான வன்னி மக்கள் படுகாயமுற்று மன்னார் பொது வைத்திய - சாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். அவலமுற்ற அந்த மக்களுக்கான பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் முதல் தடவையாக வைத்தியசாலை சிற்றாலயத்திற்கென பிரத்தியேகமான ஆன்மீகக் குருவாக அருட்பணியாளர் ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரை நியமித்தார்.

பணியின் தேவைகள் மேலோங்கியதால் ஆன்மீகக் குருவோடு இணைந்து செயல்படு - வதற்கு அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக பணிகள் பகிரப்பட்டன.

இம்மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய அடிப்படைப் பொருட்களை (பால் மா, சோப், உடைகள், குழந்தைகளுக்கான பொருட்கள் போன்றவற்றை) பங்குகள், வாழ்வுதயம், மார், பிரஜைகள் குழு, லயன்ஸ் கிளப், வை. எம். சி. ஏ., ஓ. எம். ஐ. போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் இன்னும் பல அமைப்புக்களும் வழங்கியிருந்தன.

மேலும் மன்னார் ஆயர் அவர்களின் நிதி உதவியோடு மேலதிக சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு செல்லும் மக்களுக்கும் மிகவும் வறியவர்களுக்கும் கைவிடப் - பட்டோருக்கும் பண வடிவிலான கொடுப்பனவு -களும் வழங்கப்பட்டன.

பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களையும், அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களையும் புனர் வாழ்வு மையங்களிலும், முதியோர் இல்லங்களிலும் சேர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆயர் மற்றும் ஆன்மீகக்குரு அருட்தந்தை ஜெகானந்தன் போன்றோரின் அயராத உழைப்பினால் வைத்தியசாலையிலிருந்து பலர் வெளியே விடுவிக்கப்பட்டனர். முகாமிலிருந்தும் வைத்தியசாலையிலிருந்தும் செயற்கைக்கால் பொருத்துவதற்காக வருகை தந்தவர்களுக்கும் அதனோடு சார்புடைய வைத்தியர்கள் உதவியாளர்களுக்கும் வேண்டிய உதவிகள் வழங்கப்பட்டன.

நோயாளர்களின் உதவியாளர்களுக்கும் வைத்தியசாலை விடுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட நோயாளிகளுக்கும், மூன்று நேர உணவும் வாழ்வுதயத்தினரால் வழங்கப்பட்டது.

அத்தோடு இன்றைய காலகட்டத்து சூழ்நிலைக்கேற்றவாறு, ஆன்மீக ரீதியான சகல வழிபாட்டு முறைகளும் எமது வைத்திய - சாலையில் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை இவ்வாலயத்தில் நடைபெற்றிராத தவக்கால, உயிர்ப்புத் திருவிழிப்பு ஆராதனைகள், உள ஆற்றுப்படுத்தல் ஆராதனை நிகழ்வுகள் போன்றவை வைத்தியசாலையில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் இடம்பெற்றது. இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்தந்தையர்கள் அந்தோனிராஜ், அருட்தந்தை சேவியர் போன்றோராலும் ஏனையக் குருக்களாலும் அருட்பணி. ஜெகானந்தன் அவர்களின் முயற்சியில் இவை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

கைவிடப்பட்டு, மனவிரக்தியுற்ற நிலையில் ஆற்றுப்படுத்தலில்லாமல் அவதியுற்ற மக்களுக்கு எம் சிற்றாலயக் குடும்பத்தினர் அருகிலிருந்து ஆறுதல்படுத்தியதோடு, அவர்கள் வாழ்வு மேம்பட முன்னின்று உழைத்தனர்.

வைத்தியசாலையில் எஞ்சியிருந்த உடல் ஊனமுற்றோரை ஆயரின் உதவியோடு விடுவித்து தங்களின் உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. நிர்க்கதியான நிலையில் இருந்த யாரும் அற்றவர்கள், தமது இல்லிடம் செல்ல முடியாதவர்கள், நடக்க முடியாதவர்கள், இடுப்பிற்கு கீழே செயலிழந்தவர்கள் போன்றவர்கள் கிளறேசியன் குருக்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டனர். இப்படிப்பட்ட நோயாளருக்கான தள்ளு வண்டிகள், ஊன்று கோல்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை வாழ்வுதயத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

படுக்கையிலுள்ள நோயாளர்களை துப்பரவுசெய்து கழுவி, துடைத்து, நீராட்டி சவரம் செய்து, சிகை அலங்கரித்து, சீராக அவர்களைப் பராமரிப்பதற்கு மன்னார் பேராலய ஆண்கள் தோழமைக் குழுவும், மன்னார் சிகை அலங்கார சங்கத்தினரும் ஒவ்வொரு வாரமும் தமது மேலான சேவையை இம்மக்களுக்கு வழங்கியதோடு பல பங்குகளிலிமிருந்து அனேகமான ஆண், பெண் பணியாளர்கள் வந்து சமையல் மற்றும் இடங்களில் துப்பரவு போன்ற பணிகளிலும் ஈடுபட்டார்கள்.

பல பங்குகளிலிருந்து பங்குத்தந்தையரின் முயற்சியால் விறகு, தண்ணீர், மற்றும் சில அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால் அன்றைய தேவைகளை அவ்வப்போது பூர்த்திசெய்ய முடிந்தது.

சிகிச்சை பெற்றுவந்த வன்னி மக்களைப் பராமரிக்க நின்ற உறவுகளின் உதவியோடு ஆன்மீகக் குருவானவரின் பணிமனை புனரமைப்பு செய்யப்பட்டது.

இடம்பெயர்ந்து காயப்பட்டு சிகிச்சைபெற்று வந்த இம்மக்களுக்கு மகத்தான சேவைகளை வழங்கிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மற்றும் வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், வைத்திய சேவைப் பணியாளர்கள் அனைவரும் இந்தத் தியாக பணியிலே தங்களை அர்ப்பணித்தவர்களே!

மேற்காணும் இப்பணிகள் யாவும் மன்னார் ஆயர், குருமுதல்வர், வைத்தியசாலை ஆன்மீகக் குரு, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பொதுநிலைப்பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும்.

ஆன்மீகக் குருவோடு இணைந்து கடந்த பத்து மாதங்களாக முழுநேரப் பணியாற்றிய ஆசிரியர் திரு. கமல், அருட்சகோதரிகள் குமுதினி, யூட்ஸ் மேரி, இனிக்கா, யோசப்பின்மேரி, எலிசபெத், றெஜி மற்றும் பொதுநிலையினர் ஆகியோரின் பணிகள் சிறப்பாக இங்கு நினைவுகூரப்படவேண்டும்.

"என்ன நிகழ்ந்தாலும் நன்றி கூறுங்கள்,
எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்"
என்னும் பவுலடியாரின் மன நிலையில் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

## உங்கள் சிந்தனைக்கு

- கடவுளை அடைந்தவர்கள் பெறும் பயன் பசும் பொன்னைவிட சிறந்தது.
- வெள்ளியைவிட மேலாக கடவுளின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஆயுளை நீடிக்கச் செய்யும்.
- ஞானமுள்ளோர் அறிவை தமக்கே வைத்திருப்பர். மூடர் வாய் திறந்தால் அழிவே வரும்.
- வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும். விடாமுயற்சியுடைய கையோ செல்வத்தை உண்டாக்கும்.


*ச. எவறஸ்ரா - கல்நாட்டி, முருங்கன்.*

புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

கட்டுரைத் தொடர் 09

# கொரிந்தியர் முதல் திருமுகம்

எழுத்துருவாக்கம் ஆயர் செ. சூசைமாணிக்கம்



## 2. கிறிஸ்தவ ஞானம்

### கிறிஸ்தவ அறிவு

ஒழுக்கம் அல்லது நன்னெறி சார்ந்த அறிவே கிறிஸ்தவ அறிவு என ஈண்டுச் சுட்டப்படுகிறது. இறைவெளிப்பாட்டின் வாயிலாகப் பெற்ற உண்மைகளை நன்னடத்தை மூலம் வாழ்வில் செயற்படுத்தத் தெரிந்துகொள்ளும் நடைமுறை அறிவே இது. கிரேக்க மொழியில் 'க்நோசிஸ்' என இது அழைக்கப்படுகின்றது. ஆவியின் அருள் கொடைகளுள் இதுவும் ஒன்று (12:8).

ஞானக் கொடை எதிலும் குறையே இல்லாமல் எல்லா விதத்திலும் வளம் பெற்றிருந்த கொரிந்துக் கிறிஸ்தவர்கள் இத்தகைய அறிவு நிரம்பப் பெற்றவர்களாய் விளங்கியது கண்டு இறைவனுக்கு நன்றி கூறுகிறார் பவுல் (1:4-7). ஆனால் இந்த அறிவு அவர்கள் எல்லாரிடத்திலும் இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறார் (8:7). இந்த அடிப்படையில் அங்கு கருத்து வேறுபாடு எழுந்தது. தங்களுக்கு அறிவு உண்டு என்று இறுமாந்திருந்த சிலர் (8:1) எதையும் செய்ய உரிமை உண்டு (10:23) என்ற எண்ணத்தில், மனம்போல் வாழத் தலைப்பட்டனர். சிலைக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை உண்ணத் துணிந்தனர்; பிற சமயக் கோவில்களிலேயே விருந்தாடத் தொடங்கினர். (8:1). இவர்களை மனவுறுதி படைத்தோர் எனத் திருத்தூதர் அழைக்கிறார். இவர்களுடைய செயல் மன வலிமையற்றோருக்கு இடறலாய் அமைந்தது (8:7-13). இப்பிரச்சினை 8:1-11:1இல் ஆராயப்படுகிறது.

கெட்ட நடத்தை தொடர்பாகவும் கருத்து வேறுபாடு நிலவியது. எதையும் செய்ய உரிமை உண்டு என்ற அடிப்படையில், பாலுணர்வைத் தவறாகப் பயன்படுத்தினர் சுதந்திரப் பிரியர் சிலர் (6:12-13). இதனால் கூடா ஒழுக்கமுள்ளவன் மட்டில் அவர்கள் முறையான நடவடிக்கை எடுக்க முடியாது போயிற்று (5:1-13).

இவ்வாறு கருத்து வேறுபாடு பல கட்சிப் பிளவுகளைத் தூண்டிவிட்டது. மனவுறுதி படைத்தோர் x மனவலிமையற்றோர் (8:10:11) முதிர்ச்சி பெற்றோர் (2:6) x ஊனியல்பினர் (3:1) அறிவாளிகள் (10:15) x அறிவிலிகள், சுதந்திரப் பிரியர் (9:1) பழமை விரும்பிகள் என்று பல பிரிவுகள் அங்கே தலைதூக்கின. இப்பிரிவினைகளுக்கு முடிவுகட்ட முனைந்த ஒன்றிப்பின் திருத்தூதர், "இவ்வறிவு இறுமாப்படையச் செய்யும்; ஆனால் அன்பு உறவை வளர்க்கும்" (8:1) என்று சுட்டிக் காட்டி, அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை விளக்கினார் (8:7-13); 10:23 -33). முதல் பத்து அதிகாரங்களில், குறிப்பாக முதல் நான்கு அதிகாரங்களில் கிறிஸ்தவ அறிவு, ஞானம் பற்றிய விழுமியக் கருத்துகளை எழுத்தோவியமாகப் படைத்தார்.

### கிரேக்க ஞானம்,

அறிவைப் பற்றிப் பேசி வந்தவர் உயரிய அறிவாகிய ஞானத்தின்பால் வாசகரின் கவனத்தைத் திருப்புகிறார். ஞானத்தைக் குறிக்கச் 'சோ.·.பியா' என்னும் கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

நாவன்மை சேர்ந்த மெய்யியலையே கிரேக்கர் ஞானம் என்று போற்றி வந்தனர்; அதை அடைவதையே தங்களது வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இதை உலக ஞானம் என்று பவுல் அழைப்பார் (2:6).

கிரேக்க மெய்யியலில் பவுலுக்கு ஆழ்ந்த புலமை உண்டு. இதனால்தான் எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் ஆகிய மெய்யியல் அறிஞருடன் கலந்துரையாடவும் (திப 17:18), ஏதென்ஸ் நகரில் அறிஞர் நடுவே நற்செய்தியின் உண்மைகளை நாவன்மையோடு எடுத்துரைக்கவும் (திப 17:22-23) அவரால் முடிந்தது; ஏன் அவரது பேச்சைக் கேட்ட லிஸ்திரா மக்கள் நாவன்மை தரும் தெய்வமான எர்மசாக அவரை எண்ணிப் பலி செலுத்தவில்லையா? (திப 14:11-12).

கிரேக்க நாட்டில் கிறிஸ்துவின் ஒளியை ஏற்றிவைத்திடக் கிரேக்க மெய்யியல் பெரிதும் துணை புரியும் என்று அவர் ஒரு காலத்தில் நம்பியிருந்தார். அவர் எதிர்பார்த்தது மனமாற்றம்; எதிர்ப்பட்டதோ ஏமாற்றம் (திப 17:32-34).

### கடவுளின் ஞானம்

ஏதென்ஸ் அனுபவம் அவரது வாழ்வில், குறிப்பாகப் போதனையில் புதியதொரு திருப்பத்தைக் கொடுத்தது. சிலுவையின் பொருளை மென்மேலும் புரிந்துகொள்ளவும், பிறரோடு பகிர்ந்துகொள்ளவும் அது துணை புரிந்தது. அன்றிலிருந்து உலக ஞானத்தை விடுத்து உண்மையான ஞானத்தைப் போதிக்கலானார். (1:17).

இறைவனைப் பற்றிய அறிவு, அதாவது இறைவனுடைய நிறைவான திட்டத்தை – நற்செய்தியிலே பொதிந்து கிடக்கும் மறை உண்மைகளை – அறிந்து அவற்றை விளக்கும் திறனே பவுல் ஈண்டுக் குறிப்பிடும் ஞானம் ஆகும். இந்த ஞானத்தினின்றுதான் மேற்சொன்ன அறிவு பிறக்கிறது. அருள்கொடை என்பதனால் இதுவும் ஒரு சிலருக்கே அருளப்படுகிறது (12:8). காலம் தோன்றும் முன்பே கடவுளின் எண்ணத்தில் உருவாகி, காலாகாலமாக இறைவாக்கினரால் மறைபொருளாக அறிவிக்கப்பட்டு, காலம் நிறைவுற்றபோது இறை மகன் கிறிஸ்து வழியாக வெளியிடப்பட்ட மீட்புத் திட்டமே இறை ஞானம்-மெய்ஞானம். "மறைபொருளாய் இருக்கும் இறை ஞானத்தைப் பற்றியே நாங்கள் பேசுகின்றோம்" (2:7).

இத்திட்டம் கிறிஸ்துவில் வெளியானது; குறிப்பாக கிறிஸ்துவின் இறப்பு - உயிர்ப்பிலே வெளியானது; ஆதலின் கிறிஸ்துவே இறை ஞானம் என முழங்குகிறார் (1:30). இவ்வாறு கிறிஸ்து இயேசுவை இறை ஞானமாக வேற்றினத்தாருக்கு அறிவித்தார்; அதே நேரத்தில் பழைய ஏற்பாட்டின் நிறைவாக யூதருக்கு அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து உலக ஞானத்தை இறை ஞானத்தோடு ஒப்பிடுகிறார் (2:6-16). முந்தியது போலி, பிந்தியது அசல்; முந்தியது பொய்யானது, பிந்தியது உண்மையானது என விளம்புகிறார்.

உலக ஞானத்தை மடமை எனக் குறிப்பிடுகிறார்: "இவ்வுலகில் தங்களை ஞானிகள் என்று கருதிக்கொள்வோர் தாங்களே மடையராகட்டும். அப்போது அவர்கள் ஞானிகள் ஆவார்கள். இவ்வுலக ஞானம் கடவுள்முன் மடமையாய் உள்ளது" (3:18-19). அதே நேரத்தில் கடவுளின் ஞானம், அதாவது சிலுவையின் செய்தி கிரேக்கருக்கு மடமையாகத் தோன்றியதால் அதைக் கடவுளின் மடமை என வஞ்சப் புகழ்ச்சியாகச் சொல்லுகிறார்: "மனித ஞானத்தைவிடக் கடவுளின் மடமை ஞானமிக்கது" (1:25).

### கிறிஸ்தவ ஞானம்

இறை ஞானத்தை எடுத்துரைப்பதில் பவுல் குன்றா ஆர்வம் கொண்டிருந்தார். "சகோதர சகோதரிகளே, கடவுளைப் பற்றிய மறை பொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது மிகுந்த சொல்வன்மையுடனோ ஞானத்துடனோ வரவில்லை. நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத் தவிர அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறு எதையும் அறிய வேண்டும் என்று நினைக்கவில்லை" (2:1-2) ஏனெனில், "சிலுவை பற்றிய செய்தி அழிந்துபோகிறவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை" (1:18) உலக ஞானத்தையே பெரிதும் மதித்துவந்த கிரேக்கருக்கு இறை ஞானமாகிய கிறிஸ்து பற்றிய நற்செய்தி மடமையாகத் தோன்றியது. (1:22-23).

அருங்குறிகளையும் அடையாளங்களையும் செய்து காட்டி, கிறிஸ்து யூதப் பேரரசை நிறுவுவார் என்று பன்னெடும் காலமாகவே கனவு கண்டுவந்த யூதர்கள் திருச்சட்டத்தை ஞானமாகப் போற்றி வந்தார்கள். ஆகவே சிலுவையின் செய்தி அவர்களுக்குப் பழிச்சொல்லாகவும் (கலா 3:13) பலவீனமாகவும் தோன்றிற்று (1:22-24). இதனால் கிரேக்க ஞானிகளையும் யூத மறைநூல் அறிஞரையும் கடவுள் புறம்பே தள்ளிவிட்டார். "கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த, மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார்" (1:27).

"தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம்" (லூக் 10:21) என்னும் இயேசுவின் வாக்கு இங்கு நோக்கற்பாலது.

தூய ஆவியார்தாம் இறை ஞானத்தை மனிதருக்கு வெளிப்படுத்துபவர் (2:10). ஆகவே அவரோடு கொண்டுள்ள உறவைப் பெறுவதே ஒருவர் ஞானத்தைப் பெற வழியாகும்.

இவ்வாறு ஞானத்தில் வளர்ச்சி அல்லது முதிர்ச்சி பெற்றவர்கள் (2:6) ஆவிக்குரியவர்கள் (2:13) எனவும் தொடக்க நிலையில் உள்ளவர்கள் ஊனியல்பினர், கிறிஸ்தவ வாழ்க்கையில் குழந்தைகள்(3:1), மனித இயல்பால் மட்டும் இயங்கிடுவோர் (2:14) எனவும் பெயர் பெறுகின்றனர்.

அருள்வாழ்வைப் பொறுத்த மட்டில் கொரிந்துக் கிறிஸ்தவர்கள் வளர்ச்சி அடையாத நிலையிலேயே இருந்தார்கள். அவர்கள் நடுவே நிலவிய கட்சிப் பூசலே இதற்குச் சான்று. "சகோதர சகோதரிகளே, ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல நான் உங்களிடம் பேச முடியவில்லை. மாறாக நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும், கிறிஸ்துவோடுள்ள உறவில் குழந்தைகள் எனவும் எண்ணிப் பேசுகிறேன். நான் உங்களுக்குத் திட உணவை அல்ல, பாலையே ஊட்டினேன். ஏனெனில் திட உணவை உங்களால் உண்ண முடியவில்லை. இப்போதும் அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் ஊனியல்புக்கேற்பவே நடக்கிறீர்கள். ஏனெனில், பொறாமையும் சண்டையும் சச்சரவும் உங்களிடையே உள்ளன. நீங்கள் ஊனியல்புக்கேற்ப நடந்து மனிதப் போக்கில்தானே வாழ்கிறீர்கள்?" 3:1-3)

எனவே கொரிந்தியர் தங்களது ஆன்மீகச் சிறுபிள்ளைத்தனத்தை விடுத்து, அதாவது தங்களை அறிவாளிகள் எனவும், ஞானிகள் எனவும் எண்ணி உரிமை பாராட்டுவதைத் தவிர்த்து ஆவியில் வாழுமாறு, ஞானத்தில் வளருமாறு, ஞான வளர்ச்சிக்காகப் பாடுபடுமாறு, அன்பில் சிறந்தோங்குமாறு வேண்டுகோள் விடுக்கிறார். (தொடரும்)

# திருவருகைக்காலத் திருமடல்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

### குருத்துவ வாழ்வும் பணியும்

பங்குக் குருக்களின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியான்னி அடிகள் இறைவனடி சேர்ந்ததன் 150வது ஆண்டு யூபிலி விழா இவ்வாண்டு அமைவதையொட்டி நம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர், குருக்களின் வாழ்வையும், பணியையும் புதுப்பித்து ஆழப்படுத்துகின்ற ஓர் அரிய காலமாக இந்த ஆண்டைக் குருக்களின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். "தம்மோடு தங்கி இருக்கவும், அனுப்பப்படவும் அவர்களை அழைத்தார்" (மாற்கு 3:31). என்ற மாற்கு நற்செய்தியாளரின் கூற்றிலே ஒவ்வொரு குருவின் வாழ்வும் பணியும் பொதிந்து கிடக்கின்றது. புனித ஜான் மரிய வியான்னி நற்கருணை ஆண்டவர் முன் நீண்ட நேரம் அமர்ந்திருந்து பெற்றுக்கொண்ட ஆற்றலால் தூங்கிக் கொண்டிருந்த தம் பங்கை ஓர் அற்புதமான தலத்திருச்சபையாக உருமாற்றினார் என்பதைத் திருத்தந்தை எமக்குச் சுட்டிக்காட்டி, குருக்கள் அனைவரையும் புனித வாழ்வு வாழ அழைக்கின்றார். இன்றைய உலகில் நற்செய்திக்கு மிக உறுதியுடனும், தெளிவாகவும் சான்று பகர்வதற்கான உள்ளார்ந்த புதுப்பித்தலைத் தினமும் தேடுகின்ற குருக்கள் திருச்சபைக்கு அதிகம் தேவைப்படுகின்றனர் என்று அவர் அறைகூவல் விடுக்கின்றார். "குருத்துவம் என்பது இயேசுவின் திரு இருதயத்தின் அன்புச்சுடர்" என்ற புனித மரிய வியான்னியின் வார்த்தைகளுக்கு உருக்கொடுத்து "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று மொழிந்த இயேசுவின் வழியில் தியாக உள்ளத்துடனும், முழுமையான அர்ப்பண உணர்வுடனும் வாழத் தம்மை அர்ப்பணித்துள்ள எம் குருக்கள் அனைவருக்கும் இவ்வாண்டு சிறப்புமிக்கதோர் அருளின் ஆண்டாக அமைய நாம் அனைவரும் உழைப்போம்.

"இறைவனின் புனித மக்களை அன்பினால் காத்து அருள்வாக்கினால் உணவூட்டி, திருவருட்சாதனங்களால் புத்துயிர் அளிப்பதே குருக்களின் பணியாகும். இதனால் இவர்கள் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை இறைமக்களாகவும், திருக்கோயிலாகவும் உருவாக்கி வளர்க்கின்றார்கள்" (குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கு). இவற்றைச் செய்யும்போதெல்லாம் "பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரிவதற்கே வந்த" (மாற்கு 10:45) கிறிஸ்துவின் மனநிலையையும், "ஆயனில்லா ஆடுகள்போல் அலைக்கழிக்கப் - பட்டுச் சோர்ந்து நின்ற மக்கள்மேல் பரிவு கொண்ட" (மத். 9:35-37) நல்லாயனின் இதயத்தையும் தாங்கிச் செயற்பட குருக்கள் இறைவனால் அனுப்பப்பட்டவர்கள்.

### இறைமக்களின் உடனிருப்பு:

இறைமக்கள் "தேர்ந்தெடுக்கப்பட்ட இனமா -கவும், அரச குருத்துவத் திருக்கூட்டமாகவும், தூய மரபினராகவும், இறைவனுக்குச் சொந்தமானவர்களாகவும்" (1பேதுரு 2:9) திகழ்கின்றவர்கள். இவர்களிடம் இருந்தே குருக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கடவுளைச் சார்ந்தவற்றிற்கென இவர்களின் சார்பாக ஏற்படுத்தப்படுகின்றார்கள். இதனால் இறைமக்கள் குருக்களின் வாழ்வோடும், பணியோடும் நெருங்கிய தொடர்பும், இறுக்கமும் கொண்டவர்கள்.

இந்த வேளையிலே எமது மறைமாவட்ட இறைமக்கள் குருக்கள்மேல் கொண்டுள்ள பக்தியையும் குருத்துவ அழைத்தல்களை வளர்ப்பதில் காட்டும் ஆர்வத்தையும் மகிழ்ச்சியோடு நினைவுகூருகின்றோம். நற்கருணைச் சமூகமாக நாம் வளர முன்னெடுக்கப்படும் மேய்ப்புப் பணித்திட்டத்திலே எமது குருக்களோடு கரம்கோர்த்து நிற்கும் அவர்களின் உயரிய அர்ப்பணத்தையும் நினைந்து நாம் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இந்த உயர் பண்புகளிலே எமது மக்கள் ஒவ்வொருவரும் மேலும் வேரூன்றி வளர்ச்சி பெறவும், குருக்களுக்காக அன்போடு அன்றாடம் செபிக்கவும் இவ்வாண்டிலே ஒரு விசேட அழைப்பை இறைவனிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொள்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் மையமாக்கொண்டு இவ்வாண்டு மார்கழித் திங்களில் மறைமாவட்ட மேய்ப்புப்பணித்திட்டமிடல் மாநாடு மன்னாரில் இடம்பெறுகின்றது. இதற்காகக் குருக்கள் மட்டத்திலும், பங்கு மட்டத்திலும் கலந்தாலோசனைகள் நடாத்தப்படும். இவை மேலும் கூர்மைப்படுத்தப்பட்டு மறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேய்ப்புப்பணித்திட்டங்கள் முன்வைக்கப்படும். இந்தத் திட்டங்கள் பங்கு மட்டத்திலும் அன்பியங்கள், குடும்பங்கள் மட்டத்திலும், செயல்முறைப்படுத்தப்படும்.

### முடிவுரை

குருக்களின் அன்புத் தாயாகத் திகழ்ந்து அவர்களுடைய வாழ்வையும் பணியையும் தமது இடைவிடாத பரிந்துரைகளால் அன்போடு தாங்கிவருகின்றவரும், பயணமாகும் திருச்சபையைத் தாயன்போடு பேணி வளர்த்து வருபவருமான மீட்படைந்தோரின் தாய் மரியாள், குருக்களின் ஆண்டிலே நாம் முன்னெடுக்கும் எமது முயற்சிகளில் எமக்கு முன்நின்று வழிகாட்டுவாராக!



## கிறிஸ்மஸ் சிறப்புப் பொழிவு

# வியாபாரச் சந்தையில் 'நத்தார் தாத்தா'

அருட்சகோதரி ம. சாந்தனா (அ.கா)

உறவுகள் அனைத்தும் வியாபாரமாக மாறிக்கொண்டிருக்கும் உலகில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். பணத்திற்காக உறவுகளை, உணர்வுகளை வித்து அதிலே சவாரி செய்யும் உலகையே நாம் இன்று காண்கின்றோம். அனைத்துமே வியாபாரமாக மாறிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் நாம் ஒரு நத்தார் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

நத்தார் என்றால் 'நத்தார் தாத்தா' எம் மனக்கண் முன்னே தோன்றுவதை மறுக்க முடியாது. நத்தார் காலங்களில் சிவப்பு நிற நீண்ட அங்கியும் வெண் தாடியும் கொண்ட ஒருவரைக் கண்டால் குதூகலித்து அவர் ஏதும் எமக்குத் தருவாரா? என்று அவரை உற்று நோக்குவோம். இப்படியானவரிடம் நாம் எதை எதிர்பார்க்கின்றோம். இப்படியான எதிர்பார்ப்பை கிறிஸ்தவர்களிடம் தூண்டியவர் யார்? இதனுடைய காரண கர்த்தா யார்? என்று நாம் நோக்க வேண்டியுள்ளது.

நத்தார் தாத்தா என்றும் சாண்டா குளோஸ் என்றும் அழைக்கப்படுகின்றவர் ஒரு பரிசுத்தமான மனிதர். இவரின் பெயர்தான் புனித நீக்கிலஸ். இப்பெயரின் பொருள் 'மக்களின் வெற்றி' என்பதாகும். இவர் மைரா (Myra) என்ற நகரின் ஆயராகப் பணியாற்றியவர். இவர் தமது பணிக்காலங்களில் மக்கள்மேல் அன்பும் கரிசனையும் கொண்டவராகவும் சிறப்பாக ஏழைகள்பால் மிகவும் இரக்கம் கொண்டவராகவும் காணப்பட்டார். இவர் ஏழைகளைத் தேடிச்சென்று அவர்களுக்கு உதவிபுரிந்து அவர்கள் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தைக் காண வழிகாட்டியாக விளங்கினார். இவருடைய இப்பணியின் தனித்தன்மை என்னவென்றால் உதவி வழங்கப்படும் ஏழைகள் தமக்கு யார் இந்த உதவியைச் செய்பவர் என்றே கண்டறியாத விதத்தில் தனது இறைபணியை இரகசியமாகச் செய்து முடித்தார்.

இவருடைய இரகசியப் பணி குறித்து இவரைப்பற்றிய வரலாற்று நூல் சான்று பகர்கையில் இவ்வாறு கூறுகின்றது. ஒரு தடவை மூன்று இளம் பெண்களுக்கு திருமணம் செய்துகொடுக்க முடியாமல் இருந்த தந்தையின் கஸ்ரத்தை கண்டறிந்த இவர், அத்தந்தையினது ஏக்கத்தையும் கவலையையும் தீர்க்க முன்வந்தார். இந்த இளம் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க இவர்களுக்கு உதவ முயன்றார். இந்தச் சூழ்நிலையில் இவர்களது துன்பத்தைப் போக்க மூன்று உறைகளில் தங்க நாணயங்களை நிறைத்து யாருக்கும் தெரியாதபடி அவர்களின் வீட்டினுள் எறிந்தாராம். பாரம்பரியங்களின்படி இவ்வுறைகள் வெவ்வேறு காலங்களில் எறியப்பட்டதாகவும் 3ம் உறையை வீசியபோது அந்த ஏழைக் குடியானவர் இவருடைய செயல்களைக் கண்டறிந்ததாகவும் வரலாறு சான்று பகர்கிறது.

புனித நீக்கிலஸ் கி.பி 270ஆம ஆண்டில் விசியா மாகாணத்தில் (தற்போதைய துருக்கிய அனடோலியா) பட்டாரா எனும் இடத்தில் பிறந்தார். இவரது இளமைப் பருவத்தைப் பற்றி வரலாறு ஏதும் கூறாதுவிட்டாலும், இவரது பணியின் தடங்களை விரிவாகக் கூறுகின்றது. 73 ஆண்டுகள் இறைபணியில் குருவாக ஆயராகப் பணியாற்றி பலரையும் கவர்ந்த ஒரு புனிதர் இவர். இவர் மார்கழி 6ம் திகதி மைரா எனும் இடத்தில் இறைவனிடத்தில் இணைந்தார். இவரது திருவுடலின் எச்சங்கள் இஸ்லாமிய படையெடுப்பாளர்களுக்கு பயந்து தென் இத்தாலியில் உள்ள பாரி என்ற இடத்திற்கு 1087ல் கொண்டுவரப்பட்டது. இவர் இரஸ்சிய மக்களாலும் மிகவும் நேசிக்கப்பட்டார். இதனாலே இம்மக்கள் இவரைப்பற்றி கூறும்போது, "கடவுள் இறந்துபோனாலும்கூட எங்களுக்கு புனித நீக்கிலாஸ் இருக்கின்றார்" என்று பெருமையுடன் கூறிக்கொள்வார்களாம்.




இவர் கடலோடிகளின் பாதுகாவலர் என அழைக்கப்படுகின்றார். இவர் தனது பணிக்காலத்தில் மத்திய தரைக் கடலின் ஊடாகப் பயணம் செய்யும்போது ஒரு மாலுமியைக் கடல் அனர்த்தத்திலிருந்து காப்பாற்றினார். இதனால் இன்றுவரை இவர் கடலோடிகளின் பாதுகாவலராகப் போற்றப்படுகின்றாா. ஐரோப்பாவில் ஒல்லாந்து நாட்டில் அம்ஸ்டடம் தலைநகரில் இவருக்காக ஒரு பேராலயம் அமைக்கப்பட்டுள்ளது. நெதர்லாந்து மற்றும் கீறிஸ் தேசங்களின் பாதுகாவலராக இவர் போற்றப்படுகின்றார். புரட்டஸ்தாந்து மறையினர்கூட போற்றும் புனிதராக இவர் காணப்படுகின்றார்.

இறைவனை ஏழைகளில் காண முற்பட்ட இவரது பணியானது இன்றும் தொடர்ந்து ஆற்றப்படுகின்றது. ஆனால் எந்தளவில் இப்பணி அர்த்தத்துடன் நினைவுகூரப்படுகின்றது என்பது கேள்விகுறியாக இருக்கிறது.

கிறிஸ்மஸ் காலங்களில் ஏழைகளும் இறைவனின் அன்பின் வெளிப்பாட்டைக் கொண்டாட வேண்டும் என உணர்ந்தார் புனித நீக்கிலஸ். இவரது அன்பின் வெளிப்படுத்தலைக் கண்ட இவரை நாளடைவில் தாத்தா என்று அன்போடு அழைத்தார்கள். இந்த அன்பின் அழைப்பானது நாளடைவில் மருகி கிறிஸ்மஸ் தாத்தா என்ற பெயராக மாறியது. இதனாலே இன்றும் கிறிஸ்மஸ் காலங்களில் பரிசுப்பொருட்களை வழங்கும் ஒருவரை நாமும் கிறிஸ்மல் தாத்தா என அழைக்கின்றோம்.

இத்தகைய புனிதமும் மனித நேயமும் கொண்ட ஒருவரை இன்றைய வியாபார யுகத்தில் சந்தைப் பொருளாக மாற்றியிருப்பது கவலைக்குரிய விடயமாகும். கிறிஸ்மஸ் ஆரவாரங்கள் தொடங்கிவிட்டால் கிறிஸ்மஸ் தாத்தாவின் உருவங்களை வைத்து பணம் சம்பாதிக்கும் பண முதலைகள் எம் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கிலும் பெருகிவிட்டனர்.

எந்த நீக்கிலஸ் ஏழைகளுக்காக உழைத்தாரோ, அவர் பெயரும் உடையும் ஏழைகளைச் சுரண்டும் பண முதலைகளின் முதலீடாக மாறிவிட்டது. கிறிஸ்மஸ் விழாவை வியாபாரத்திற்கான ஒரு விற்பனைப் பொருளாக மாற்றிவிட்டார்கள். இன்று பலவகையான சுப்பர் மார்க்கட்டுகளில் வேலை செய்யும் இளைஞர் யுவதிகளுக்குக்கூட சாண்டாகிளாஸ் உடுப்பு அணிவித்து வியாபரத்தை மும்முரமாக முன்னேற்றும் பலரைப் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

புனித நீக்கிலஸ் ஆரம்பித்த இந்த புனித பணிக்கு களங்கம் விளைவிக்கும் இவர்கள் வியாபார உலகில் இருந்து விடைபெற வேண்டும். இவரது பணியானது புனிதமான இடங்களில் ஆழ்ந்த அர்த்தத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இவர் பணம் திரட்டுபவராகவோ அல்லது பணத்திற்கு உண்டியலை நீட்டுபவராகவோ காணப்படவில்லை. அதேவேளை திரட்டப்படும் பணம் ஏழைகள் வாழ்வதற்காகப் பயன்படுத்தப்பட்டால் நன்மையானதாக அமையும். இப்புனிதரின் புனித பணியின் அர்த்தத்தை உணராத பலரும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். நத்தார் தாத்தா என்றவுடன் நீண்ட நிறச் சிவப்பு உடையுடனும் தாடியுடனும் கையில் பணம் சேகரிக்கும் பேணியுடன் வரும் ஒருவராக நாம் கற்பனை செய்கிறோம். பகிர்ந்து கொடுக்கும் ஒருவராகவும் மகிழ்ச்சியை அனைவரோடும் பகிர்ந்துகொள்ளும் ஒருவராகவுமே இவரை நாம் காண வேண்டும்.

புதிய சிந்தனைகளையும் புதுமைப் போக்கையும் நாடி நிற்கும் நாம் கிறிஸ்மஸ் தாத்தாவின் உயரிய பணியை ஆற்ற முன்வர வேண்டும். எம் பகிர்வில் ஏழைகள் வாழ்வு காணட்டும்.

# பாலகனின் பிறப்பு பாரிற்கு அமைதி தரட்டும்

இ.அ.அமலரட்ணம், புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்

## முகவுரை

2009 ஆண்டுகளுக்கு முன் இடம்பெற்ற ஒரு உன்னதமான நிகழ்வை மீண்டும் ஒரு முறை நினைத்து மகிழ்வோடு கொண்டாடுகின்றோம். கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதும் பெருமகிழ்வோடும் பல முன்னெடுப்புக்களோடும் நினைவு கூரப்படுகிறது. "இதோ கன்னி கருவுற்று ஒரு ஆண் மகனைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்." (எசாயா 7:14) என்ற எசாயா தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பு தூய கன்னி மரியாள் வழியாக இங்கே நிறைவேறியதை நாம் காணுகின்றோம். கிறிஸ்துவின் பிறப்பால் பாவ இருள் நீங்க ஒளி வீசியது. இதனால் பெருமகிழ்வு எங்கும் உண்டாயிற்று. இறையருள் உலகிலே பிரசன்னமாகி நாம் இறைவனுக்கு உரியவர்களாக மாறியுள்ளோம். விண்ணுலக மகிமை விண்விட்டு மண் வந்ததால் அனைவருக்கும் அமைதி ஏற்படுவதோடு தீமைகளில் இருந்து விடுபட்டு ஒளிவாழ்வில் மகிழ்ந்திருக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

## நம்பிக்கையின் விழா

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசாயா 9:2) என்ற இறைவார்த்தை எமக்கு நம்பிக்கையைத் தருகிறது. நாம் வாழும் எமது தமிழ் மண் என்றும் இல்லாத வகையில் மனித அவலங்களைச் சந்தித்துள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர் இழப்புக்களுக்கு மத்தியில், எண்ணிலடங்காத மக்களின் சொத்து இழப்புக்களுக்கு மத்தியில், எண்ணிலடங்காத மக்கள் உறுப்புக்களை இழந்து ஊனர்களான நிலையில் தப்பிப் பிழைத்தவர்கள் முகாம் வாழ்க்கையில் துன்புற்று வாழ்கின்ற சூழலில் நம்பிக்கையின் கீற்றாக பாலக யேசுவின் பிறப்பு அமைகின்றது. பாவ இருள் சூழ்ந்திருந்த உலகுக்கு ஒளியையும், அடிமைத்தனத்தில் வாழ்ந்திருந்த மக்களுக்கு உரிமை வாழ்வையும் பாவத்தின் பிடியில் சிக்குண்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு விடுதலையையும் பெற்றுக்கொடுத்தது. ஆண்டவன் யேசுவின் மனித அவதாரம் நம்பிக்கை தருகின்ற ஒரு மகிழ்ச்சியின் விழாவாக அமைய இம்மகிழ்ச்சி எல்லா மக்களுக்கும் கிடைக்க இம்முறை அர்த்தமுள்ள விழாவாக முன்னெடுக்க முற்படுவோம்.

## எளிமையின் விழா

"இறைவன் நம்மை எவ்வளவு அன்பு செய்தார் என்றால் நாம் வாழ்வு பெறும் பொருட்டு தம் ஒரே பேறான திருமகனை உலகிற்கு அனுப்பினார்" (1யோவான் 4:9) எனும் தூய யோவானின் கூற்று இறைவனின் அன்பின் ஆழத்தை எடுத்துச் சொல்கின்றது. இரத்த ஆறும் கண்ணீரும் கலந்து ஓடிய எமது மண்ணில், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களினம் வாழ்கின்ற எமது தாய்நாட்டில் இம்முறை நாம் சந்திக்கும் இவ்விழாவை எளிமைக்கு முதல் இடம் கொடுத்து நினைவுகூருவோம். "விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்." (லூக். 2:7) தாவீதின் அரசன், மூவுலகை ஆளும் இறை மைந்தன் மாடடைக் குடிலில் எளிமையாகப் பிறந்திருக்கிறார். பஞ்சு மெத்தையில் தவழ வேண்டியவர் தீவனத் தொட்டியில் தரிசனம் தருகின்றார். காலம் காலமாகக் காத்திருந்த மக்களான புறந்தள்ளப்பட்ட எளிய இடையருக்குக் காட்சி தருகின்றார். (லூக் 2:8-12) எனவே நாமும் எளிய மனம் கொண்டோராய் கிறிஸ்து பிறப்பைச் சந்திப்போம்.

## பகிர்தலின் விழா


"பகிர்தல்" என்பது கிறிஸ்தவ மதிப்பீடுகளில் மிக உன்னதமான செயற்பாடாகவும், உண்மையான களங்கமற்ற அன்பின் வெளிப்பாடாகவும் உள்ளது. "நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனிதநேயமும் கிறிஸ்துவின் பிறப்பிலே வெளிப்பட்டது" (தீத்து 3:4) பகிர்தல் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது என்பதால் இம்முறை கிறிஸ்து பிறப்புவிழா பகிர்விற்கு எம்மை அழைக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொண்டு பகிர்ந்து வாழ முற்படுவோம்.

பெரும் எண்ணிக்கையான மனித உயிர்களை காவுகொண்ட கொடிய யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது, நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டது என்பது ஒரு மாயையாகவே உள்ளது. பல தேவைகளோடு எமது அயலிலும் பங்கிலும் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மீண்டும் தம் சொந்த இடங்களில் மீளக்குடியமரும் மக்கள் எம்மிடமிருந்து பலவிதமான உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். உணவுத் தேவை மட்டுமல்ல பல்வேறு விதமான அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது.

ஆண்டவன் இயேசு இறைத்தன்மையில் இருந்து இறங்கி வந்து ஏழையாகப் பிறந்தார். நம்மைத் தேடிவந்த இறைவன் நம்முடனே வாழ்கின்றார் என்ற நம்பிக்கை நிதர்சனமாக வேண்டுமெனில் போரின் கொடுமையால் ஏழைகளாக்கப்பட்ட மக்களிலே பாலக யேசுவைக் காண முற்படுவோம். அவரின் அன்பையும், இரக்கத்தையும், மனித நேயத்தையும் கொடுக்க முன்வருவோம். எமக்கான கிறிஸ்து பிறப்பு விழாவின் செலவுகளின் ஒரு பகுதியை தியாகம் செய்து இவ்வாறான மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக எம் உள்ளங்களில் பாலக யேசுவுக்கு குடில்அமைத்து அவரை வரவேற்போம்.

நம்பிக்கையின் விழாவாக எளிமையின் விழாவாக பகிர்தலின் விழாவாக அமையும் கிறிஸ்து பிறப்பு விழா "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:14) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுப்பதாக அமையட்டும்.

# மன்னார் ஜே. ஆர். எஸ். அமைப்பின் பன்முகப் பணிகள்



"ஒன்றே செய், நன்றே செய், அதை இன்றே செய்" என்ற கூற்றிற்கு இணங்க இயேசு சபை அகதிப்பணியினர் என்னும் ஜே. ஆர். எஸ். (JRS) மன்னார் நிறுவனமானது காலத்தின் தேவைக்கேற்ப மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவும், "அகதி எனும் சொல் இவ்வுலகில் இருத்தல் ஆகாது" எனும் JRS அமைப்பாளரின் கூற்றிற்கு இணங்கவும் இனம், மொழி, மதம், பால் போன்றவற்றை மறந்து தமது இன்னோரன்ன பணிகளை ஆற்றி வருகின்றது.

## 1) கல்விப்பணியிலே JRS...

### • மாணவர் கலைவிழா

JRS மன்னாரானது மாணவர்களிடையே 'கல்லாமை' இருள் அகற்றி வருகின்றது. கல்லாமை என்ற கூற்று வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமல்லாது கலை, ஒழுக்கம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளும் இதில் அடங்கும். எனவே இதன் அடிப்படையில் ஒக்டோபர் மாதத்தில் உலக சிறுவர் தினத்தினையும், JRS வருடாந்த கலைவிழாவினையும் கருத்தில்கொண்டு ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள சில மையங்களை இணைத்து வலய ரீதியாக **சமத்துவம்** எனும் கருப்பொருளுக்கிணங்க கலைவிழா ஒன்றினை முன்னெடுத்தது. இக்கலைவிழாவிலே அப்பங்கினுடைய பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இந்து மதத்தலைவர், பௌத்த மதத்தலைவர், JRS தேசிய இயக்குனர், மன்னார் மாவட்ட இணைப்பாளர் அருட்பணி. இராஜநாயகம் அடிகளார், கல்வித்திட்ட இணைப்பாளர், வலய இணைப்பாளர்கள், சமூக உளவளத் துணையாளர்கள், கிராம பிரமுகர்கள், பெற்றோர், இளைஞர்கள், மாணவர்கள், கிராம மக்கள் போன்றோர் கலந்து சிறப்பித்தனர்.

☞ கலைவிழா நடந்தேறிய திகதியினையும், இடங்களையும், கலந்துகொண்ட கிராமங்களையும் இங்கே நோக்கலாம்.

| இல. | திகதி | இணைக்கப்பட்ட மையங்கள் | நடைபெற்ற இடங்கள் |
|---|---|---|---|
| 1. | 16.10.2009 | தம்பணைக்குளம் | தம்பணைக்குளம் |
| 2. | 17.10.2009 | பொற்கேணி, மருதமடு, சிலாவத்துறை, அரிப்பு கொக்குபடையான். | அரிப்பு |
| 3. | 18.10.2009 | பெரியகுஞ்சுக்குளம், பெரியமுறிப்பு | பெரியகுஞ்சுக்குளம் |
| 4. | 19.10.2009 | வாழ்க்கைப்பெற்றான்கண்டல் | வாழ்க்கைபெற்றான்கண்டல் |
| 5. | 22.10.2009 | மாளிகைப்பிட்டி | மாளிகைப்பிட்டி |
| 6. | 23.10.2009 | சமயபுரம் | சமயபுரம் |
| 7. | 23.10.2009 | பேசாலை ORC, சிறுத்தோப்பு மீள்குடியேற்றதிட்டம், காட்டாஸ்பத்திரி. | சிறுத்தோப்பு |
| 8. | 24.10.2009 | பள்ளிமுனை, சாவற்கட்டு, பெரியகமம், சாந்திபுரம், எழுத்தூர் | அலுவலகம் |
| 9. | 24.10.2009 | மடுக்கரை, 100 வீட்டுத்திட்டம், 150 வீட்டுத்திட்டம் | மடுக்கரை |
| 10. | 31.10.2009 | தோட்டவெளி, எருக்கலம்பிட்டி, ஓலைத்தொடுவாய் | தோட்டவெளி |

தொடர்ந்து 23.10.2009 அன்று சிறுத்தோப்பு கிராமத்தில் கலைவிழா நடைபெற்ற அன்று பேசாலை சிறுத்தோப்பு கிராமத்தில் மாணவர்களின் தேவை கருதி கட்டப்பட்ட மாலை நேரக் கல்வி கொட்டகை ஒன்று எமது மாவட்ட இணைப்பாளர் அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து 17.10.2009 அன்று அரிப்பு பிரதேசத்தில் இயங்கி வருகின்ற மையங்களுக்கு காகிதாகிகள், விளையாட்டுப் பொருட்கள் என்பனவும் நிகழ்வின்போது வழங்கப்பட்டது. மேலும் இக்கலைவிழாக்கள் நடைபெற்ற நாட்களிலேயே மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கியதுடன், கல்வி மையங்கள் நடாத்திய பரீட்சைக்கேற்ப புள்ளிகள் அடிப்படையில் பரிசில்களும் வழங்கப்பட்டது.

### • ஆசிரியர் வதிவிடப் பயிற்சியும், ஆசிரியர் தின விழாவும்

JRS மன்னாரானது 27 கிராமங்களில் மாலை நேர மையங்களை நடாத்தி வருகின்றது. அத்தோடு 07 முன்பள்ளிகளையும் நடாத்தி வருகின்றது. எனவே அவற்றில் கல்வி புகட்டும் 70 ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மெருகூட்டி, பாடசாலைக் கல்வியினை வலுப்படுத்தி மாணவர்களை புதிய கல்வித்திட்ட நடைமுறைக்கேற்ப வழிநடாத்தி செல்ல வேண்டும் என்பதற்காகவும், ஆசிரியர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வளர்ச்சியைக் காண்பதற்காகவும் அவர்களை ஒன்றிணைத்து JRS மாவட்ட அலுவலகத்தில் 07.10.2009 தொடக்கம் 10.10.2009 வரையான காலப்பகுதிகளில் வதிவிடப்பயிற்சியை நடாத்தியது.

இதில் வலயக்கல்விப் பணியக "ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி" உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. மேவின் அவர்களும், மன்னார் ஆதார வைத்தியசாலை வைத்தியர். திரு. றோய் அவர்களும், மன்/ எழுத்தூர் பாடாலையில் ஆங்கிலப் பாடத்தினைக் கற்பிக்கின்ற ஆசிரியர் திரு. நிதி மொறாய்ஸ் அவர்களும், மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி கணித பாட ஆசிரியர் திரு. யோன்சன் அவர்களும், மன்/ எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலய விஞ்ஞான பாட ஆசிரியர் திரு. றெக்ஸ் பீரிஸ் அவர்களும், மன்னார் மாவட்ட கல்வித்திட்ட இணைப்பாளர் திரு. மோயீஸ் அவர்களும் வளவாளர்களாக செயற்பட்டனர். அத்துடன் இவ்வாசிரியர்களுக்கு முன்பள்ளிக்கான புதிய போக்கு, நடத்தை மாற்றம், ஆங்கிலப் பாடம், கணித பாடம், விஞ்ஞான பாடம், மாணவர்களுடனான அணுகுமுறை போன்ற தலைப்புக்களில் மேற்குறிப்பிட்ட வளவாளர்களால் முறையே பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் JRS சமூக உளநல உதவியாளர்களால் தியானப்பயிற்சியும், திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 10.10.2009 அன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளாரும், சிறப்பு விருந்தினராக JRS மன்னார் மாவட்ட இணைப்பாளர் அருட்பணி. இராஜநாயகம் அடிகளாரும் கலந்துகொண்டனர். மேலும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின பரிசில்களும் ஆசிரியர் பயிற்சியினை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



## 2) அவசரகாலப் பணியில் JRS...

JRS மன்னாரானது செட்டிகுளம் ஆனந்தகுமாரசுவாமி (வலயம் 1) நலன்புரி முகாமில் தனது பணியினை ஆற்றி வருகின்றது. அங்கே குறிக்கப்பட்ட பகுதிகளில் 04 முன்பள்ளிகளை நடாத்தி வருகின்றது. இதில் 600 சிறுவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர். இம்மாதத்தில் ஒரு முன்பள்ளியில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது.. மற்றும் ஆசிரியர்களின் பணியினைப் பாராட்டி அவர்களுக்கு பரிசில்களையும் பாராட்டி வழங்கியுள்ளது. தொடர்ந்து அச்சிறார்களுக்கு தேவையான புத்தகப்பை, காகிதாகிகள், விளையாட்டுப் பொருட்கள், சத்துணவு போன்றன தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வருடத்தில் க.பொ.சாதாரண தர பரீட்சையினை எழுதவுள்ள மாணவர்களின் பயிற்சிக்காக பயிற்சிப் பொருட்களையும், கடந்த கால வினாத்தாள் அடங்கிய புத்தகம் (புதிய பாடத்திட்டத்திற்கமைய பாஸ் பேப்பர்) பரீட்சைக்கான அனைத்து பொருட்களையும் 800 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. (புத்தகப்பை, சீருடை, காகிதாகிகள், ஏனைய பொருட்கள்) தொடர்ந்து பல்வேறு நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கான உலர் உணவுப் பொருட்கள், பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் போன்றவையும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## 3. உளநலப் பணியில் JRS...

**" நிகழ்வுகள் மனிதர்களை குலைப்பதில்லை; மாறாக அதைப் பற்றிய எண்ணங்களே"** மன்னார் மறைமாவட்டத்தில் JRS சமூக உளநலப் பிரிவில் தற்போது 05 சமூக உளநல பணியாளர்கள் உளநலப் பணியினை சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்கின்றனர். எமது விசேட பணியாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து உடல், உள ரீதியாக பாதிப்புற்று வைத்திய சிகிச்சை பெற்று வந்த எமது வன்னிவாழ் உறவுகளை சந்தித்து ஆற்றுப்படுத்துவதோடு, முதியோர் இல்லங்கள் (பட்டித்தோட்டம், பேசாலை) மீள்குடியேற்றத் திட்டங்கள் (தம்பனைக்குளம், சிறுத்தோப்பு, பேசாலை ORS) JRS மாலை நேர கற்கை மையங்கள், மற்றும் பின்தங்கிய கிராமங்கள், JRS சுய உதவிக்குழுக்கள், கிராம அபிவிருத்தி ஒன்றியங்கள், தையல் பயிற்சி மையங்கள் போன்ற இடங்களில் எமது ஆற்றுப்படுத்தல் பணியானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றது.

### • உலக உளநல தினம்

உலக உளநல தினத்தை ஒட்டி "ஒக்டோபர் 10" அன்று Dr. றோய் அவர்களால் எமது JRS மாலை நேர கல்வி 70 ஆசிரியர்களுக்கு "உளநலம்" என்ற தலைப்பில் கருத்தமர்வு நடாத்தப்பட்டது. மேலும் 27.10.2009 அன்று பள்ளிமுனைக் கிராமத்தில் யுவதிகளுக்கும், உயர்தர மாணவிகளுக்குமான "உளநலம்" பற்றிய கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இதில் 24 யுவதிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். தொடர்ந்து 20.10.2009 அன்று தம்பனைக்குளம் கிராமத்தில் பெற்றோர்களுக்கான "உளநலம்" பற்றிய கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இதில் 23 பெற்றோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவற்றை எமது உளநலப் பணியாளர்களே நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

### • உலக முதியோர் தினம்

உலக முதியோர் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக பட்டித்தோட்டம், பேசாலை, வங்காலை போன்ற முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களை மகிழ்விக்கும் வகையில் இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. அன்றைய தினம் முழுவதும் அவர்களுடனே எமது பணியாளர்கள் தமது பொழுதைக் கழித்தனர்.

## 4. மனிதவள அபிவிருத்திப் பணியில் JRS...

"பெண்களே இந்நாட்டின் கண்கள்" எனும் அடிப்படையில் பெண்களின் சமூக, பொருளாதார, ஆளுமைகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் பெண்களுக்கான பல எழுச்சித்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். அவற்றின் பதிவுகள் இதோ...


### • தையல் பயிற்சி தொடக்க விழா

16.10.2009 அன்று மடுக்கரை கிராமத்திலே JRS மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை. இராஜநாயகம் அடிகளாரின் தலைமையில் தையல் பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது. இதில் JRS திட்டப் பொறுப்பாளர், வலய இணைப்பாளர், JRS ஆசியர்கள், கிராமத்தின் பிரமுகர்கள் பயிற்சி பெறவுள்ள 28 பெண்கள் கலந்துகொண்டு இத்தொடக்கவிழா நிகழ்வை சிறப்பித்தனர்.

### • சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பாசறை

13.10.2009 அன்று சாவற்கட்டு சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 37 பேருக்கு "முரண்பாட்டு முகாமைத்துவம்" எனும் தலைப்பில் சமூக உளவளத்துணைப் பணியாளர்களால் கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இதனால் அவர்கள் குழுக்களின் ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

## ஜே.ஆர்.எஸ் நிகழ்வுகளின் நிழல்கள்







## யாழ் திருமறைக்கலாமன்றத்தின் முதுபெரும் கலைஞர்

# ஜி. பி. பேர்மினஸ் ஆளுநர் விருது பெறுகிறார்

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் முதுபெரும் கலைஞர்களில் ஒருவரான திரு. ஜி. பி. பேர்மினஸ் அவர்கள் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர்களுக்கான உயர் விருதான ஆளுநர் விருதினை கடந்த 10.10.2009 அன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். மன்னா சார்பாக இவருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறகோரி பிலிப் பேர்மினஸ் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும், 1950 முதல் 1960 வரை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விகற்ற வேளை 1956இல் 'ஒரு புகையிரத நிலையம்' என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் கல்லூரியின் வாழ்வில் தனது கலைவாழ்வை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரியால் நடாத்தப்பட்ட இயேசுவின் திருப்பாடுகள் நிகழ்வில் 1958, 1960களில் முக்கிய பாத்திரமான கைப்பாஸ் பாத்திரத்தில் நடித்தார். அவ்வேளை கல்லூரியில் அருட்பணி. நீ. மரியசேவியரின் அறிமுகம் இவருக்கு ஏற்பட்டது. அப்போது "அன்ரனியோ" என்ற இத்தாலிய படம் மொழிமாற்றம் செய்யப்பட்டபோது முக்கிய பாத்திரத்திற்கு குரல் கொடுக்க மரியசேவியர் அடிகளாரால் தெரிவுசெய்யப்பட்டு இவர் குரல் கொடுத்தார். அதன்பின் சமூக நாடகங்கள் பலவற்றில் நடிக்கத் தொடங்கினார்.

1966இல் உரும்பிராயில் திருப்பாடுகளின் காட்சி மேடையேறியபோது மரியசேவியர் அடிகளாரின் விசேட அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்தில் இருந்து பங்குகொண்டார். திருமறைக்கலாமன்றம் உருவானபோது அன்றே இணைந்துகொண்டு மரியசேவியர் அடிகளாரின் முக்கிய சீடருள் ஒருவனாய் இன்றுவரை உள்ளார். இவ்வாறு கடந்த ஐம்பது ஆண்டுகளாக இவர் நாடகத்துறையில் ஈடுபட்டுழைப்பவர். திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான இவர் திருமறைக் கலாமன்றம், நாடக அரங்கக் கல்லூரி போன்றவற்றில் பயிற்சி பெற்று பல்வேறு நாடகங்களிலும் நடித்தவர். பல நாடகங்களையும் நெறியாள்கை செய்தவர்.

திருமறைக் கலாமன்றத்தின் அன்பில் மலர்ந்த அமரகாவியம், களங்கம், பலிக்களம்.... போன்ற பல்வேறு திருப்பாடுகளின் காட்சிகளில் நடித்திருப்பதோடு அவற்றினை நெறிப்படுத்தியும் வந்துள்ளார். முதல் வீடியோ திரைப்படமான பலிக்களத்திலும் நடித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி புதுக்குடியிருப்பு, அளம்பில், ஹப்புத்தளை, மன்னார் போன்ற இடங்களிலும் நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். அது மட்டுமன்றி பல்வேறு நவீன நாடகங்களையும் நெறிப்படுத்தியுள்ளார். கொழும்பில் சிங்கள நாடகக் கலைஞர்களுடன் இணைந்து இயக்குநர் மரியசேவியர் அடிகள் கலைப்பாலம் அமைத்தபோது காலம் சென்ற பேராசிரியர் எதிர்வீர, சரத்சந்திரா, மொராண்டா ஹேமலதா போன்ற பல சிங்களக் கலைஞர் குழுவுடன் இணைந்து 'அசோகா' 'தர்ஷனா' போன்ற வார்த்தைகளற்ற நாடகங்களின் உதவி நெறியாளராக பணியாற்றியும், ஆடை அமைப்பினை மேற்கொண்டும், நடித்தும் தென்னிலங்கையில் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றிருப்பவர்.

அவ்வாறே நாடக அரங்கக் கல்லூரியின் புகழ்பெற்ற நாடகங்களான 'புதியதொரு வீடு' 'பொறுத்தது போதும்' 'உறவுகள்' 'கூடி விளையாடு பாப்பா' 'தியாகத் திருமணம்' 'சங்காரம்' 'வெறியாட்டு' 'கோடை' போன்ற நாடகங்களில் தாசீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம், மௌனகுரு, கவிஞர் முருகையன் போன்ற பிரபல்ய நெறியாளர்களின் கீழ் நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். நாட்டுக்கூத்து, இசை நாடகம், நவீன நாடகம், இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், யதார்த்த நாடகம், மௌன நாடகம், வீதி வழி நாடகம், சிறுவர் நாடகம், வட்டக்களரி போன்றவற்றில் நடித்து, நெறியாள்கையும் செய்துள்ளார்.

இவற்றுடன் 1974இல் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் திருமறைக் கலாமன்றம் சார்பாக நாடகத்தில் பங்கு கொண்டார். மாபெரும் புறப்பாடாகிய 1995 ஒக்டோபர் 30இன் நிகழ்வை திரு. ஜி. எஸ். அல்பிறற் எழுதிய "சாகாத மனிதம்" என்ற



நாடகத்தில் நடித்தும், நெறிப்படுத்தியும் உள்ளார். இந்நாடகம் பலரது உள்ளத்தை உருக்கியது. களப்பயிற்சி, நாடகப் பயிற்சிகளை மறையாசிரியர்கள், பாடசாலைகள், குருமட மாணவர்களுக்கு வழங்கி வந்தார். அது மட்டுமன்றி சிறைகாவலதிகாரியாக கடமையாற்றிய இவர், சிறையில் இருந்த கைதிகளைப் பயன்படுத்தியே 'சங்கிலியன்' 'சீர்திருந்திய கைதி' போன்ற நாடகங்களை நெறியாக்கம் செய்து முறையே வெலிக்கடை, யாழ் சிறைச்சாலை, யாழ் வீரசிங்கம் மண்டபம், குருநகர், அரியாலை போன்ற இடங்களில் மேடையேற்றி கைதிகள் மத்தியில் நல்லெண்ணத்தினை வளர்த்தவர். தான் சார்ந்த சமூகத்திலும் பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றியவர். திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட வெளிநாட்டு கலைப்பயண வேளை 1973இல் இந்தியாவிற்கும் 1997, 1998இல் ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப் பயணங்களிலும் இணைந்து சென்று ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், சுவிஸ், ஹொலண்ட் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் புலம்பெயர் மக்கள் மத்தியில் கலைப்பணியாற்றி அதிக வரவேற்பைப் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி பிரபல சிங்களக் கலைஞரான தர்மசேன பத்திராஜாவின் 'In Search of a Road' என்னும் ஆவணத் திரைப்படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தும், அசோக ஹந்தகமவின் 'Take this Road' (இவ்வழியால் வாருங்கள்) தொலைக்காட்சித் தொடரிலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நாடகத்துறையோடு அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதுடன் நடிப்பு, நெறியாள்கை, வேட உடை விதானிப்பு, ஆவணம் பேணுகை, களப்பயிற்சி வழங்குதல் என அரங்கோடு தொடர்புடைய பல்துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகின்ற ஜி. பி. பேர்மினஸ், திருமறை நிர்வாக செயற்பாடுகளிலும் பல்வேறு சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி பலரும் பல்வேறு விருதுகளை வழங்கியுள்ளனர்.

03.12.2000 அன்று திருமறைக் கலாமன்றத்தால் 'அரங்க வாரிதி' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கலாநிதி எஸ். Dr. சிவலிங்கராஜா அவர்களால் கௌரவிக்கப் -பட்டார். 20.09.2002 அன்று யாழ். கலாசார பேரவையால் 'யாழ். ரத்னா' என்ற பட்டம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரால் வழங்கப்பட்டது.

18.11.2002 அன்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலைஞான கேசரி' பட்டம் வழங்கி வீரமணி ஐயர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 04.02.2004 அன்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் 'கலாபூஷண விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


12.04.2008 அன்று திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால உருவாக்கத்திலிருந்து இன்று வரை அர்ப்பணத்துடன் செயற்பட்டு வரும் மூத்த உறுப்பினர்களுக்கு திருமறைக் கலாமன்றத்தினால் வழங்கப்படும் அதிஉயர் விருதான 'கலைஞான பூரணன்' விருது இயக்குநர் தந்தையால் வழங்கப்பட்டு மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விதமான பல விருதுகளைப் பெற்ற அவர் தனது கலைவாழ்விற்கு முன்னோடிகளாக இருந்த ஆசான்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளை தன் அனைத்து உயர்ச்சிகளுக்கும் காரணமான இறைவனுக்கே எல்லாப் புகழும் என்று கூறுகின்றார்.

## 1999 - 2009 வரையிலான தசாப்தத்தின்

# தேசிய சாதனையாளன்

மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. ப. ஞானராஜ் அவர்கள் ஒரு தசாப்தத்தில் 10 முறை தேசிய மட்டத்தில் இக்கல்லூரி உதைபந்தாட்டத் துறையில் தொடர் வெற்றிகளை தக்கவைக்கச் செய்து சாதனை படைத்துள்ளார். கடந்த 16.09.2009 அன்று இவ்வாண்டு தேசிய மட்டத்தில் 17 வயது உதைபந்தாட்ட அணி 2ம் இடத்தைப் பெற்றமைக்கான வீரர்களைப் பாராட்டும் நிகழ்வில் அதிபராலும், வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்களாலும், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜயந்த விக்ரமசிங்க அவர்களாலும் பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



இவர் இக்கல்லூரியின் பழைய மாண - வனாகவும் இக்கல்லூரியின் முன்னாள் பிரதம மாணவத் தலைவனாகவும் உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் திகழ்ந்தவர் என்றும், இவரது தலைமைத்துவத்தின்கீழ் அதிபராகிய தனக்கும் விளையாட சந்தர்ப்பம் கிடைத்தது தனக்கு பெருமை தருவதாகவும் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் தெரிவித்தார்.

இவர் வவுனியா கல்லூரியில் உடற்கல்வி பயிற்சி நெறியை நிறைவுசெய்து 1999ம் ஆண்டு ஜனவரியில் இக்கல்லூரிக்குள் ஆசிரியராக காலடி பதித்தார். காலடி பதித்த முதல் வருடத்திலேயே இவர் கல்லூரிக்கு தேசிய மட்டத்தில் ஒரு பெயரை பொறித்தார்.

### இவரது தொடர் சாதனைகள் வருமாறு:

| இல. | ஆண்டு | | அணி | இடம் | மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | 1999 | - | 19 வயது | 2ம் இடம் | தேசிய மட்டம் |
| 02. | 1999 | - | 17 வயது | 3ம் இடம் | தேசிய மட்டம் |
| 03. | 2000 | - | 19 வயது | 1ம் இடம் | தேசிய மட்டம் |
| 04. | 2000 | - | 17 வயது | 3ம் இடம் | தேசிய மட்டம் |
| 05. | 2001 | - | 19 வயது | 1ம் இடம் | தேசிய மட்டம் (மைலோ கப்) |
| 06. | 2001 | - | 17 வயது | 2ம் இடம் | தேசிய மட்டம் |
| 07. | 2002 | - | 19 வயது | 1ம் இடம் | தேசிய மட்டம் (மைலோ கப்) |
| 08. | 2003 | - | 19 வயது | 1ம் இடம் | தேசிய மட்டம் |
| 09. | 2003 | - | 19 வயது | 1ம் இடம் | தேசிய மட்டம் (சமாதான கப்) |
| 10. | 2004 | - | 19 வயது | 4ம் இடம் | சர்வதேச மட்டம் (தென் கொரியா) |
| 11. | 2009 | | 17 வயது | 2ம் இடம் | தேசிய மட்டம் |

இவர் பொறுப்புடன் பணிகளைச் செய்பவர். அத்துடன் தமிழ், ஆங்கிலம், சிங்களம், ஆகிய மொழிகளிலும் திறமை உள்ளவர். உதைபந்தாட்டத்திற்கென தன்னை அர்ப்பணித்து செயற்படும் இவர், ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற 'B' தரமுடைய பயிற்றுவிப்பாளர். IIந் தரமுடைய வட மாகாணத்தைச் சேர்ந்த முதலாவது சிறந்த மத்தியஸ்தர். அத்துடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினதும், இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனத்தினதும் மன்னார் மாவட்ட இணைப்பாளராக 2002ம் ஆண்டு முதல் செயற்படுகிறார்.

இலங்கை வரலாற்றிலே இவரைப்போல் இத்தனை தடவை யாரும் சாதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் சாதனைப் பயணம் தொடர மன்னாவும் இவரை மகிழ்வோடு வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு சேகரிக்கப்பட்ட


# மன்னார் மறைமாவட்ட மக்களின் காணிக்கை

| | | | |
|---|---|---|---|
| அரிப்பு பங்கு | 38,210.00 | தரணிக்குளம் பங்கு | 10,040.00 |
| செட்டிகுளம் பங்கு | 40,000.00 | தாழ்வுபாடு பங்கு | 101,000.00 |
| கற்கடந்தகுளம் பங்கு | 20,000.00 | தோட்டவெளிப் பங்கு | 117,000.00 |
| குஞ்சுக்குளம் பங்கு | 40,000.00 | வஞ்சியன்குளம் பங்கு | 36,290.00 |
| கீளியன்குடியிருப்பு பங்கு | 38,000.00 | வவுனியா பங்கு | 104,070.00 |
| கோமரசங்குளம் பங்கு | 3,780.00 | வேப்பங்குளம் பங்கு | 42,200.00 |
| மன்னார் பங்கு | 450,000.00 | எழுத்தூர் பங்கு | 60,000.00 |
| நானாட்டான் பங்கு | 85,750.00 | இலுப்பைக்குளம் பங்கு | 6,030.00 |
| பள்ளிமுனை பங்கு | 15,000.00 | உயிலங்குளம் பங்கு | 60,000.00 |
| பேசாலை பங்கு | 15,430.00 | அளவக்கை பங்கு | 40,290.00 |
| வங்காலை பங்கு | 115,908.00 | முருங்கன் பங்கு | 21,600.00 |
| தலைமன்னார் பங்கு | 101,380.00 | குடும்பப் பணி மையம் | 25,000.00 |
| | | மொத்தம் | 1,586,978.00 |

## 5ம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை

மன்/ ஓலைத்தொடுவாய் றோ.க.பாடசாலையில் சித்திபெற்றுள்ள

# செல்வன் ஏ. சந்திரன் சுலக்ஷன்



மன்/ ஓலைத்தொடுவாய் றோ.க. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்களின்பின் முதன் முறையாக 2009ம் வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் செல்வன் ஏ. சந்திரன் சுலக்ஷன் என்ற மாணவன் 5974887 என்ற சுட்டிலக்கத்தில் 146 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இன்னும் இரு மாணவர்கள் வெட்டுப்புள்ளியை அண்மித்துப் புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு அதிபர், ஆசிரியர்கள் தமது பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக் -களையும் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

இவர்களுக்கு மன்னா சார்பாக எமது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

# கிறிஸ்மஸ் சிறப்புக் கவிதைகள்

# Merry Christmas



## உள்ளம் எனும் குடிதனிலே



இருளான உலகிற்கு
ஒளியினைத் தந்திடவே
இயேசு பாலகனே
எம்மண்ணில் பிறந்துவாரும்.

அடிமை வாழ்வுதனை அகற்றி
உரிமைகளைத் தந்திடவே
எம்மண்ணில் பிறந்துவாரும்.

வாழ்க்கையிலே பற்றின்றி வாழ்கின்ற
எம்மவர்க்கு நம்பிக்கை தந்திடவே
எம்மண்ணில் பிறந்து வாரும்

உறவிழந்து அழுகின்ற ஒவ்வொரு
உள்ளத்திற்கும் தேற்றுதல் தனை வழங்க
பாலகனே பிறந்துவாரும்.

இடம்விட்டு இடம்பெயரும் மக்களின்
துயர்நீக்கி நிம்மதி வாழ்வைத்தர
பாலகனே பிறந்துவாரும்

எளிமையைக் கடைப்பிடித்து
பகிர்ந்துமே வாழ்ந்திட
பாலகனே பிறந்து வாரும்

பாவந்தனைக் களைந்து புனிதமாய் வாழ
ஞானஒளி தந்து நலம்தனை ஈர்ந்திட
பாலகனே பிறந்துவாரும்

வார்த்தையின் மறுவடிவே
நிலைவாழ்வின் நல்வழியே
உள்ளமெனும் குடிதனிலே பிறந்துவாரும்

இ. அ. அமலரட்ணம்
புனித மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

## பாலன் பிறப்பது....!

பாவக் கறைகளைப் போக்கிட - இப்
பாரினிலே உதிக்கும் பாலன் பிறப்பது
பாடும் நெஞ்சிலா! பாட்டியின் மடியிலா..!

அழுவோரை அரவணைக்கவும்
விழுவோரைத் தாங்கிடவும்
இப்பூவுலகில் பிறப்பது
அந்நியர் வீட்டிலா! அகதி முகாமிலா!

கள்வரைத் திருத்தவும் - நாம்
கண்ணியமாய் வாழவும் அவர் பிறப்பது
சிறைச்சாலையிலா! சின்ன மனதிலா!

காலனை வெல்லவும்
கண்ணியமாய் வாழவும் அவர் வந்துதிப்பது
கடிகார முள்ளிலா! கண்ணீர்த் துளியிலா!

அன்போடு மகிழவும் - எம்மை
அரவணைத்துக் கொள்ளவும் அவர் பிறப்பது
அநாதை மடத்திலா! அகிம்சை வழியிலா!

பண்போடு வாழவும் பரிசுத்தம் கொள்ளவும்
பாலன் பிறப்பது பணப் பையிலா!
பழைய துணியிலா!

கவலையெல்லாம் மறக்கவும்
களைப்பாறி மகிழவும் கர்த்தர் பிறப்பது
கடற்கரையிலா! கனத்த மனதிலா!

உறவுகளை வளர்க்கவும்
உவப்புடன் வாழவும் உன்னதர் பிறப்பது
கடித உறையிலா! காவிய நெஞ்சிலா!

கனியும் உள்ளத்தோடு காலமெல்லாம்
வாழ கருணை தெய்வம் பாரிலே பிறப்பது
மாடடைக் குடிலிலா! மரியின் மடியிலா!


மனிதம் மலரவும்! மனித மாண்பு பேணவும்
மனிதனாய் உதித்த மகராசன்
பிறப்பது எங்கே.......?

அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்

## மெழுகினை ஏற்றி மேய்ப்பனைத் தொழுவோம்

மொட்டுகள் போன்று மார்கழிப் பனித்துளி
மாட்டிடை குடில்தனை மலர்களாய் விரிந்தது
அட்டமும் இருள்தனில் மூழ்கிய பொழுது
ஊரெலாம் கண்களை மூடியே உறங்கின.
பட்டொளி போன்று பாலன் இயேசு
வைக்கோலில் இறைமகனானார்
மட்டிலா மகிழ்விலும் வானவர் மைந்தனை
மெழுகொளி ஏற்றியே தொழுதெழுவோம்
- அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா

## பாலகனே வருவீரே



அகதி முகாம்களில் தவிக்கின்றோம்
அச்சத்துடனே வாழ்கின்றோம்
அமைதி வாழ்வை வழங்கிடவே
அன்பனே நீர் வருவீரே!

ஆடையின்றி நிற்கின்றோம்
ஆதரிப்பாரின்றி அழுகின்றோம்
ஆனந்தம் எமக்கு அளித்திடவே
ஆளும் வேந்தே வருவீரே!

இன்னல் பல பட்டு வந்தோம்
இடர்கள் பல தாண்டி வந்தோம்
இன்பம் தன்னைத் தொலைத்துவிட்டு
இறைஞ்சுகின்றோம் வருவீரே!

ஈன இரக்கம் ஏதுமின்றி
ஈனர்களால் தாக்கப்பட்டோம்
ஈடில்லா எம் துன்பம் நீக்கிடவே
ஈசனே நீர் வருவீரே

உறவுகள் எல்லாம் இழந்திட்டோம்
உள்ளத்து வேதனை நீக்கிடவே
உத்தமரே நீர் வருவீரே

- திருமதி டக்ஷினி தர்மசீலன்,
கற்கிடந்தகுளம், முருங்கன்.

## பாலனுக்கு ஒரு பரிசு



சின்னச் சின்ன பாலனே
சிரித்து மகிழும் பாலனே!
சின்னப் பிள்ளை நான் - உமக்கு
சிறிய பரிசு தருகிறேன்

எளிய இடையர் அளித்திட்ட
இனிய பரிசை ஏற்ற நீர்
எனது ஆசை தீர்த்திட
எனது பரிசை ஏற்பீரே!



என்ன பரிசு என்று நீர்
என்னிடம் கேட்பது புரியுது
என்ன பரிசு தெரியுமா! உன்
கன்னக் குளியில் நான் தரும்
முத்தம் தானே என் பரிசு!

நல்ல சின்ன இயேசுவே - நான்
தந்திட்ட பரிசை ஏற்றீரே
சின்னப் பிள்ளை நானுமே
சிறப்பாய் வாழச் செய்யுமே!

செ. ஜொய்ஸ்ரன் மெரினோ,
ஆவணம், நானாட்டான்.


## மெல்ல மெல்ல தவழ்கின்றார்

மகிழ்ந்திரு மானிடா - நம்
இயேசு பிறந்துவிட்டார் - என்று சொல்லி
மகிழ்ந்திரு மானிடா
விடுதலையின் வீரன் - நம் மீட்பின் இறைவன்
உண்மையின் உறைவிடம் - நம்
உள்ளத்தில் வருகின்றார்
ஏழையின் நண்பர் அவர்
இரக்கத்தின் தேவன் உலக நீதிக்காய்....
மெல்ல மெல்லத் தவழ்கின்றார்



ஆடுகளின் ஆயன் - நம்
அருள் வாழ்வின் ஊற்று
நேர்மையின் தூதுவன் - உள
தூய்மைக்கு இலக்கணம்
துன்பத்தைப் போக்கும் மருந்து - அவர்
துயரத்தில் நடப்போருக்கு நண்பன்
பொல்லார்க்கும் நல்லார்க்கும்
வாழ்வு தர... மெல்ல மெல்லத் தவழ்கின்றார்.

பாவங்களை - மனித பாவங்களை போக்கும்
பரமன் அவர் - நம்
பரலோக தந்தையின் அன்பு அவர்
துதியும் புகழும் அவருக்கே - நல்
மனத்தோர்க்கு அமைதி அவரே
ஏழையர் வாழ்வில் இன்பமாய் உதித்தார்
ஏழ்மையைத் தன் வாழ்வாக்க...
மெல்ல மெல்லத் தவழ்கின்றார்.



மாற்றங்கள் செய்திடு - மன
மாற்றங்கள் செய்திடு
பூமியில் உதித்திட்ட - நம்
பொன் மைந்தன் இயேசு
மெல்ல மெல்லத் தவழ்கிறார்
தீவனத் தொட்டியிலே

அருட்சகோ. சொ. வரதன் குரூஸ் OMI
டி மசனட் இறையியலகம்
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

# மரங்களும் மனிதர்களும்

## மன்னாரின் மரவளம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

- மக்கள் காதர் -

ஆங்கிலேயன் எம்மை ஆண்டபோது மரங்களைப் பெரிதும் நேசித்தான். அதன் விளைவாக மன்னாரில் மாதம் மும்மாரி மழை பெய்யாவிட்டாலும் வருடத்தில் ஐப்பசி முதல் மார்ச் வரைக்கும் மழை பெய்தது. குளங்கள், ஓடைகள், வருடம் முழுவதும் நீர் நிரம்பி வழிந்தன. இதனால் மன்னார் செழித்து மக்கள் கஸ்ரமின்றி, கடனின்றி, நோயின்றி வாழ்ந்தனர்.

ஆங்கிலேயன் மன்னாருக்குப் பல்வேறு அபிவிருத்திட்டங்களையும் முன்னெடுத்தான். அதன் விளைவுதான் இலங்கையின் இரண்டாவது பெரிய குளமான கட்டுக்கரைக் குளமாகும். 1902ல் இக்குளம் மன்னார் மக்களின் விவசாயத் தேவைக்காகத் திறந்துவைக்கப்பட்டது. இதன் விளைவாக சுமார் 35 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் நீர் பெற்றன. இதன் விளைவாக சுமார் 35 விவசாயக் கிராமங்கள் கட்டுக்கரையைவிட்டு வெளியேற்றப்பட்டன.

மன்னார் பட்டினத்தைத் தலைநகராக்கி இலவசமாக மின்சாரத்தையும், குழாய் நீரையும் வழங்கினான். தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பித்தான். தலைமன்னார் கொழும்பு தொடரூந்து சேவையை ஆரம்பித்தான் ஏ-4 பாதையைச் சீர்செய்து இலகு போக்குவரத்துக்கு வழிசமைத்தான். அப்பாதையின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களையும் கனிதரும் மரங்களையும் நட்டிவைத்தான். போர்த்துக்கேய, ஒல்லாந்தரின் புராதனச் சின்னங்களைப் பாதுகாத்தான். அதுபோல் அல்லி ராணிக் கோட்டை, அரேபியன் மினாரா, பெருக்கு மரங்கள் போன்றவற்றையும் பராமரித்தான். எல்லாவற்றிற்கும் மேலாக குஞ்சுக்குளம் என்ற இடத்தில் பீரிட்டுப் பாயும் அருவி ஆற்றின் நீரைத் தேக்கி உல்லாசச் சூழலை உருவாக்கினான். அன்று அவன் அமைத்த தேக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ள தொங்கு பாலத்தையும், நீரோட்டத்தையும் இன்னும் மறக்க முடியாது. ஓங்கி வளர்ந்த மரக்காட்டில், இதமான சூழலில் அன்று பெருமளவிலான உல்லாசப் பிரயாணிகள் (ஆங்கிலேயர் உட்பட) உள்ளூர் மக்களும் வந்து தங்கி உண்டு மகிழ்ந்தனர். அவன் அன்று மரங்களை நேசித்ததன் விளைவாக மன்னார் செழித்தது.

மன்னாரில் சுமார் 35 இலட்சம் பனை மரங்கள் சுமார் 25 இலட்சம் தென்னை மரங்கள், பல இலட்சம் பாலை, வேம்பு, முதிரை, பலா, கமுகு, புளியமரங்கள், பல்லாயிரம் ஏக்கரில் மர முந்திரிகைக் காடுகள், கட்டாக்காலிகளாக வளர்ந்துள்ள உடை மரங்கள், கற்றாழை, பெருக்கை, எருக்கை, கண்ணாப் பற்றைகள் இப்படி ஏராளமாகக் கூறிக்கொண்டே போகலாம்.

மன்னார் மாவட்டத்தின் சனச்செறிவு தற்போது சுமார் ஒரு இலட்சமாகும். அன்று மரங்களின் தொகை பல இலட்சங்களாகும். அதாவது ஒரு மனிதனுக்கு பத்து மரங்கள் அதாவது ஒரு குடும்பத்திற்கு ஐம்பது மரங்கள்! இனியென்ன கவலை? நாம் எவருமே வெளியில் போகாமல், வேலை தேடாமல், வீட்டிலிருந்தவாறே நன்கு உண்டு உறங்கி மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கி வாழமுடியும்.

அத்தனை வளமும் வசதியும் இம்மரங்களுக்குண்டு. இம்மரங்களால் நாட்டில் நல்ல மழை வீழ்ச்சி கிடைத்தது. குளங்கள், சிறு ஓடைகள், தேக்கங்கள் அனைத்தும் நிரம்பி வழிந்தன. வயல் நிலங்கள் இருபோக நெற் செய்கைக்குத் தயாராக இருந்ததால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பெரும்போக விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. மக்களின் உயிர் காக்கும் சுவை மிகுந்த அரிசியை நாடு முழுவதும் வழங்கின. நாட்டின் உயர் குளிர் வலயப் பிரதேசங்களில் விளையக்கூடிய பெறுமதியும் சுவையுமிக்க 'பாஸ்மதி' அரிசியை எமது மாந்தை விவசாயிகள் உற்பத்தி செய்து சாதனை படைத்தனர்.


அன்று மன்னார் மக்களின் வாழ்வியலே மிகவும் விசித்திரமானது. "பரவன் உடுத்திக் கெட்டான் - சோனகன் உண்டு கெட்டான்" எனும் முதுமொழிக்கேற்ப மிகவும் ஆடம்பரமாகவும் விருந்தோம்பலுடனும் இரு சமூகங்களும் வாழ்ந்து வந்தன. அதற்கு மற்றுமோர் உவமையும் சொல்வார்கள் இப்படி, "பிட்டும் தேங்காய் பூவும்போல" என்று. அவ்வளவுக்கு பிரிக்க முடியாத, ஒற்றுமையாக வாழ்ந்த சமூகம் - தற்போதும் வாழும் சமூகம் எமது தமிழ் முஸ்லிம் சமூகமாகும்.

விருந்தோம்பலுக்குப் பேர் போனது எமது மன்னார் மாதலம். வருடம் முழுதும் இங்கு விருந்துதான். பிறந்த நாள் வந்தால் விருந்து, பொருட்கள் வந்தால் விருந்து, சாமத்திய வீட்டில் விருந்து 'சுன்னத்' வீட்டில் விருந்து, திருமண வீட்டில் விருந்து, முஸ்லிம்களின் விலிமா விருந்து, உறவினர்களின் விருந்து, நண்பர்களின் விருந்து, கல்வியில் பேறுபெற்றால் விருந்து, விளையாட்டில் வெற்றி பெற்றால் விருந்து, கோயில் விசேடங்களில் விருந்து, மரண வீட்டில் விருந்து, முஸ்லிம்களின் 'மௌலூதும்' 'ஹந்தூரி' 'மீலாத்' விருந்துக்கள் என வருடம் முழுவதும் மன்னாரில் விருந்தோம்பல் மணம் கமகமக்கும். வீட்டிற்கு வரும் உறவினர்களையும், நண்பர்களையும், வைத்து விருந்து கொடுத்து உபசரிக்கும் பண்பு மன்னார் மக்களிடம் இருந்துதான் மற்றைய உலகம் கற்றுக்கொண்டதோ?

ஆனால் இன்று மன்னாருக்கு என்ன நடந்துவிட்டது? நடந்து முடிந்த நாட்டின் 30 வருட யுத்தம் மன்னாரின் மர வளத்தை முற்றாக அழித்துவிட்டது. ஆங்கிலேயர் மன்னாரை எம்மிடம் ஒப்படைத்தபோதே இந்த மரஅழிப்பு ஆரம்பமானது. தற்போது அது முற்றாக அழிக்கப்பட்டு இன்று மன்னார் பாலை நிலமாகிவிட்டது. மக்களுடன் சேர்ந்து இலங்கை இராணுவமும் பல இலட்சம் பனைமரங்களையும் காட்டு மரங்களையும் அழித்து முடித்தன.

இந்த இடைப்பட்ட காலங்களில் நாம் மண்ணையும் மரத்தையும் அழித்து முடித்தோம். மண்ணை பல்லாயிரம் டொன் கணக்கில் முருங்கனில் இருந்து காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலைக்குத் தினமும் அனுப்பிவைத்தோம். தலைமன்னார் முதல் மன்னார் வரையுள்ள ஏ - 14 பாதையின் இரு மருகிலுள்ள சுத்தமான குருமண்ணை இரவும், பகலும் அள்ளி கொள்ளை விலைக்கு விற்று மன்னாரைப் புதை குழியாக்கினோம். அதைப்போல அனைத்து மரங்களையும் வெட்டிச் சாய்த்தோம். பலகையாகவும், கதவுகளாகவும், நிலைகளாகவும், வீட்டின் உட்புற சாமான்களாகவும் விற்று முடித்தோம். வெளி மாவட்டங்களுக்கு கள்ள மரங்களைக் கொண்டு சேர்த்தோம். மிகுதியை விறகாக்கி எரித்து சாம்பலாக்கினோம். இதில் விடுதலை இயக்கங்கள், அரச படைகள் கள்ள வியாபாரிகள் எனப் பேதமில்லாமல் அனைவரும் ஒன்று திரண்டு மர அழிப்புப் போராட்டத்தில் வெற்றி பெற்று மன்னாரைப் பாலைநிலமாக்கினோம். இதன் விளைவாக இன்று மன்னார் மழையை எதிர்பார்த்து வானைப் பார்த்த பூமியாகிவிட்டது. பதிலாக மழையை எதிர்பார்த்து இறை தியானங்களிலும் இறங்கிவிட்டோம். இறைவன் எதையும் கேட்டவுடன் தருபவனில்லையே? அவன் பொறுத் - திருந்துதான் தருவான்.

நாம் மன்னாருக்கும், மரத்திற்கும் செய்த பாரிய துரோகத்திற்கு தண்டனையாக இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ அந்த இறைவனுக்கே வெளிச்சம்!



குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

# வரலாற்றில் திருநிலைக் குருத்துவம்



### முன்னுரை

அருள்பணியாளர்களின் தான்மை, பணி, வாழ்வு முதலியன புரிந்துகொள்ளப்படும் விதத்தில் சிக்கல்களும், தெளிவற்ற, குழப்பம் மிகுந்த நிலையும் இன்று நாம் காணுகின்ற எதார்த்தம். இந்நிலையை நெருக்கடி நிலை (Period of Crisis) என்று சொல்லலாம். இந்த நெருக்கடி நிலையின் வெளிபாடுகள் அருள்பணியாளர்களின் தனிப்பட்ட வாழ்வு, உறவு, பணி என்று பல்வேறு தளங்களில் உணரப்படுகிறது. தங்கள் அழைப்பு, வாழ்வு பற்றிய தெளிவின்மையாக, அந்த வாழ்வில் பிடிப்பின்மையாக, மக்களோடும், தங்களுக்குள்ளும் சீர்குலைந்த, சிதைந்த உறவுகளாக, பணியில் இலக்குத் தெளிவின்மையாக, உள்ளீடற்ற, மேலோட்டமான பணி வாழ்வாக நெருக்கடி நிலையின் வெளிப்பாடுகளை அனுபவத்தில் பார்க்கின்றோம்.

தனிமனித மற்றும் சமூக வாழ்விலும், நிறுவனம் மற்றும் இயக்கத்தின் வளர்ச்சியிலும் நெருக்கடி நிலை என்பது அவசியமாய் வரக்கூடிய ஒன்று. வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் தவிர்க்கப்பட முடியாத ஒரு நிலை இது. நாம் சந்தித்துக்கொண்டிருக்கும் நெருக்கடி நிலை இருளாகத் தோன்றும் நிழல்தான். ஒளியில்லாமல் நிழல் சாத்தியப்படுமா? நிழல் இருக்கிறதெனில் ஒளி அருகில் இருக்கிறது என்பதுதானே பொருள். ஒளியைத் தேடுகிற முயற்சியில் நமக்குத் துணையாக இருக்க வேண்டியவை விவிலியம் (இறைவார்த்தை), மரபு (வரலாறு), இன்றைய காலச் சூழல் (இன்றைய நம் அனுபவங்கள்) முதலியன. அருள்பணிநிலை பற்றிய வரலாற்று அறிவு அருள்பணி பற்றிய நம் புரிதலுக்கு எவ்விதம் உதவ முடியும்? அல்லது ஒளியைத் தேடுகிற முயற்சியில் வரலாற்று அறிவு எவ்விதத்தில் உதவுகிறது? என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### பன்னிருவர் குழுவும் பணியும்

இயேசு தம் பணி தொடர தேர்ந்தெடுத்த பன்னிருவரும் உயிர்ப்பின் ஒளியில் சமூகங்களைக் கட்டுகின்றவர்களாக, வழிநடத்துகின்றவர்களாக, நெறிப்படுத்துகின்ற வர்களாக இருந்திருக்கிறார்கள். இப்பன்னிருவர் குழுவில் தலைமைத்துவம் பேதுரு - வினுடையதாக இருந்திருக்கிறது. பேதுருவின் தலைமைத்துவம் ஒருங்கிணைக்கும் பொறுப்பாக இருந்திருக்கிறது. தலைமைத்துவப் பொறுப்பிலிருந்த பேதுருவுக்கும் மற்றச் சீடருக்குமிடையே பணிசார்ந்த அடிப்படை வேறுபாடோ, படிநிலையோ இருந்ததாகத் தெரியவில்லை.

அருளடையாளப் பணி (ஆலயப் பணி) செய்வது மட்டுமே குருக்களின் பணி என்ற குறுகிய புரிதலை அடிப்படையாகக் கொண்டால், திருத்தூதர்கள் (சீடர்கள்) அருள்பணியாளர்கள் என அழைக்கப்பட முடியுமா என்பது கேள்விக்குறியே. அருளடையாளப் பணிகள் செய்திருந்தாலும் முக்கிய பணியாக, திருத்தூதர்களுக்கே உரிய பணியாக இருந்தது இறைவேண்டல் பணியும், இறைவார்த்தைப் பணியுமே. இப்பணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டபோது புதிய பணி நிலையை உருவாக்குகின்றனர். புதிய சூழல் உருவாகியபோது, தேவைகளினடிப்படையில் அவசியம் எழுந்தபோது திருத்தொண்டர் என்ற பணி நிலையை உண்டாக்கிப் பணியைப் பகிர்ந்து தங்களின் பணியில் தொய்வு ஏற்படா வண்ணம் செயல்படுகின்றனர் (திப. 6:4).

திருத்தூதர்களின் இறைவாக்குப்பணி சமூகங்களைக் கட்டுகின்ற, வழிநடத்துகின்ற, நெறிப்படுத்துகின்ற பணியோடு பிரிக்கப்பட வியலாமுறையில் தொடர்புடைய பணியாக இருந்தது. கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்குகின்ற திருத்தூதர்களின் பணியில் அவர்களோடு இணைந்து பணியாற்றிய இன்னொரு குழுவும் இருந்தது. திருத்தூதர்களில் சிலரைப்போல எங்கேயும் நிரந்தரமாய் தங்கிவிடாது பல இடங்களுக்கும் செல்லுகின்ற நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த அப்போலோ, பர்ணபா, தீத்து போன்றவர்கள் இக்குழுவைச் சேர்ந்தவர்களே. உருவாக்கப்பட்ட சமூகங்களைத் தொடர்ந்து வழிநடத்த திருத்தூதர்களால் ஏற்படுத்தப்பட்ட மூப்பர்கள், கண்காணிப்பாளர்கள் அதற்கடுத்த நிலையில் இப்பணியைச் செய்தனர்.

### கண்காணிப்பாளர்கள், மூப்பர்கள் காலம்

தாங்கள் உருவாக்கிய சமூகங்களை வழிநடத்தும் பணிக்கென திருத்தூதர்களால் ஏற்படுத்தப்பட்டவர்களே கண்காணிப்பாளர்கள் மற்றும் மூப்பர்கள். தொடக்க காலத்தில் கண்காணிப்பாளர்கள் (ஆயர்கள்), மூப்பர்கள் (அருள்பணியாளர்கள்) இருவருக்குமிடையே தெளிவான, வரையறுக்கப்பட்ட வேறுபாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் புதிய ஏற்பாடு கண்காணிப்பாளர் என்ற சொல்லையும் (Episcopos) மூப்பர்கள் என்ற சொல்லையும் (Presbyteroi) வேறுபாடின்றி ஒன்றின் இடத்தில் மற்றொன்றைப் பயன்படுத்துகிறது (திப. 20: 17, 28; 1திமோ 3:2; 5:17; தீத்து 1:5, 7; 1 பேதுரு 5:1-3) திருத்தூதர்களின் மறைவுக்குப்பின் கண்காணிப்பாளர்கள் பணி பரவலாகி மூப்பர் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படும் நிலையை கண்காணிப்பாளர் பெற்றிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவர்கள் தங்களின் அதிகாரத்தை திருத்தூதர்களின் அதிகாரத்தில் ஊன்றப்பட்ட அதிகாரமாகவே புரிந்துகொண்டனர். திருச்சமூகத்தைக் கண்காணிக்கின்ற பணி இவர்களின் தலைமைப் பணியாகக் கருதப்பட்டது. (திப. 2028-32) கடவுளின் திருச்சபையைக் கவனமுடன் கண்காணிக்கின்றவர்களாக, மந்தையைச் சிதைக்கும், திசை திருப்பும் ஓநாய்களிடமிருந்து காக்கின்றவர்களாக இருக்க அழைக்கப்பட்டவர்கள் இவர்கள். கோட்பாடுகளை, மரபை, உண்மையைக் காத்து, உருவாக்கப்பட்ட சமூகத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய அனைத்துக் காரணிகளையும் கவனமுடன் விலக்குகின்ற பணி இவர்களுடையதாய் இருந்திருக்கிறது.

### சொல்லாட்சியும் இறையியலும்

தொடக்கத் திருச்சபை திருநிலையிலுள்ளவர்க -ளைக் குறிக்கக் கண்காணிப்பாளர்கள், மூப்பர்கள் என்ற சொற்களைப் பயன்படுத்தியது. இச்சொற்களில் கண்காணிப்பாளர் (Episkopos) என்ற சொல் கிரேக்கப் பின்னணியிலிருந்தும், மூப்பர்கள் (Presbyteroi) என்ற சொல் யூதப் பின்னணியினின்றும் தேர்வுசெய்யப்பட்டவை. கிரேக்க, யூத சமூக அமைப்பில் சமூகப் பணிகளை மேற்பார்வையிட்டவர்களைக் குறிக்கத் தொடக்கத் திருச்சபையால் தேர்ந்துகொள்ளப்பட்டன.

இத்தேர்வு ஏதோ தற்செயலாக அல்லது சொல் பற்றாக்குறையினால் ஏற்பட்டது என்று எண்ண வேண்டியதில்லை. பழைய ஏற்பாட்டு ஆலயம், வழிபாடு, பலி, குருத்துவ அமைப்புமுறை இவைகளோடு நேரடியாகத் தொடர்பற்ற, அன்றாட வாழ்வில், சமூக அமைப்பில் வழக்கத்திருந்த சொற்களைத் தேர்வு செய்ததில் ஏதோ ஒரு நோக்கம் இருந்திருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு அருள்பணியானது வழிபாடு, ஆலயம், பலி சார்ந்த ஒன்றாக மட்டுமே குறுகிவிடக்கூடாது என்பதனை மனதில் கொண்டு தொடக்கத் திருச்சபை தீர்க்கமாக எடுத்த முடிவே இச்சொல்லாட்சித் தேர்வு என்று எண்ண இடமிருக்கிறது. பயன்படுத்தும் சொற்கள்கூட பழைய ஏற்பாட்டு ஆலயம், பலி, வழிபாடு இவைகளோடு புதிய ஏற்பாட்டுத் திருநிலைகளைத் தொடர்புபடுத்திவிடக் கூடாது என்ற அளவுக்கதிகமான எச்சரிக்கைக்கு என்ன காரணம் இருக்க முடியும் என்பதை ஆய்வது அவசியமானது.

தொடக்கத் திருச்சபையின் இத்தேர்வுக்கு வரலாற்று அடிப்படையிலான காரணமும் இருந்திருக்க வேண்டும். யூதர், புதிய நெறியைச் சார்ந்தோர் இவர்களிடையே எழுந்த மோதல் பற்றி நற்செய்திகளில் இறுதியாக எழுதப்பட்ட யோவான் நற்செய்தியிலே குறிப்புக்கள் காணப்படுகின்றன. யோவான் 9ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் பிறவியிலேயே பார்வையற்றவர்களுக்கும், யூதர்களுக்கும் இடையிலான உரையாடல், விவாதம் இம்மோதலுக்குச் சிறந்த உதாரணம்.

இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ளும் எவரையும் தொழுகைக்கூடத்திலிருந்து விலக்கிவிட வேண்டும் என்று யூதர்கள் ஏற்கெனவே தங்களிடையே உடன்பாடு செய்திருந்தார்கள். (யோவா9:22) என்ற குறிப்பு இயேசுவை ஏற்றுக்கொண்ட புதிய நெறியைச் சார்ந்தவர்களுக்கும், யூத நெறியைச் சார்ந்தோருக்கும் இடையே இருந்த மோதலைச் சுட்டிக்காட்டும் குறிப்பே. "நீ அந்த ஆளுடைய சீடனாக இரு. நாங்கள் மோசேயின் சீடர்கள்" (யோவான் 8:28) என்ற வார்த்தைகள் அவர்கள் இயேசுவையோ இயேசுவை ஏற்றுக்கொண்ட புதிய நெறியைச் சார்ந்தவர்களையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை உணர்த்துகின்றன. அதன்படி செபக்கூடத்திலிருந்து பிறவியிலேயே பார்வையற்றவரையும், அவரது பெற்றோரையும் ஒதுக்கிவைத்து, வெளியேற்றுகின்றனர்.

இம்மோதலுக்குப் புதிய நெறியைப் பின்பற்றியோர் கொண்டிருந்த யூத மரபுக்கு மாறுபட்ட சிந்தனைகளே காரணம் என்று எண்ணவும் இடமிருக்கிறது. குறிப்பாக யூத நெறியைப் பின்பற்றியோர் ஆலயம், பலி, சட்டம் இவைகளைப்பற்றிக் கொண்டிருந்த சிந்தனைகளுக்கு மாற்றான சிந்தனைகளைப் புதிய நெறியைப் பின்பற்றியோர் கொண்டிருந்தது இம்மோதலுக்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம். திருத்தூதர் பணியில் வாசிக்கும் ஸ்தேவானின் போதனைகள் பழைய ஆலயம், சட்டம், சமய நிறுவனங்கள், இவற்றிற்கெதிராகப் புதிய நெறியைப் பின்பற்றியோர் கொண்டிருந்த மாறுபட்ட, புரட்சிகரமான சிந்தனைகளையே கோடிட்டுக் காட்டுகின்றன. இப்பின்னணியில்தான் ஸ்தேவானின் கொடூரமான கொலையில் அவர்களின் பங்கும் புரிந்துகொள்ளப்பட வேண்டும் இம்மோதலும், மோதலின் விளைவாக உண்டான கசப்பான அனுபவங்களும் தொடக்கத் திருச்சபை யூதர்களின் ஆலயம், வழிபாடு, பலி இவற்றோடு தொடர்புடைய சொற்களை விலக்கக் காரணமாக இருந்திருக்கலாம்.

### படிநிலை அமைப்பிற்கான அடித்தளம்

திருத்தூதர்கள், நாடோடிப் போதகர்கள். இவர்களின் காலத்திற்குப்பின் கண்காணிப்பாளர், மூப்பர் பணி நிலைகள் தெளிவான வரையறுக்கப்பட்ட பணிநிலைகளாகின்றன. தொடக்க காலத்தில் வேறுபாடற்று இருந்துவந்த இவ்விரு பணிநிலைகளும் வேறு வேறு பணிநிலைகளாகவும் கண்காணிப்பாளர் பணிநிலை முக்கியத்துவம் மிக்கதாகவும் மாறுகின்ற சூழல் ஏற்படுகிறது. திருநிலைகள் ஆயர்நிலை, அருள்பணிநிலை, திருத்தொண்டர்நிலை என்ற மூவகை நிலைகள் கொண்ட அமைப்பாகிறது.

2ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இவ்வரையறை செய்யப்பட்ட படிநிலைப் பணிமுறை இருந்தது என்பதனைப் புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாரின் கடிதங்கள் உறுதிசெய்கின்றன. ஆயர் முதல் நிலையிலும், குருக்கள் இரண்டாம் நிலையிலும், திருத்தொண்டர்கள் மூன்றாம் நிலையிலும் இருந்ததை அவரது எழுத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன. இப்படி நிலை அமைப்பை நிலைநிறுத்துகின்ற இறையியல் அடித்தளம் பணிநிலை பற்றி உண்டாகின்ற புதிய புரிதலின் வழியாக அளிக்கப்பட்டது. இப்புரிதல் அருள் பணியை திருச்சமூகத்திடமிருந்து அந்நியப்படுத்தித் திருநிலையிலுள்ளோருக்கு மட்டுமே உரியதாக ஆக்குகின்ற முயற்சிக்கும் அடித்தளம் அமைத்துத் தந்தது.

### பணிநிலை பற்றிய புதிய புரிதல்

இரண்டாம் நூற்றாண்டில் திருப்பணிகள் பற்றிய புரிதலில் மிக முக்கிய மாற்றம் ஏற்படுகிறது. இம்மாற்றம் படிநிலை அமைப்பை நியாயப்படுத்தி, நிலைநிறுத்துகின்ற பிற்கால இறையியல் வளர்ச்சிக்கு அடிப்படையை இட்டது எனலாம்.

அருள்பணித் தன்மை கொண்டிருந்த தொடக்கக் கிறிஸ்தவ சமூகம் அருங்கொடைச் சமூகமாக இருந்தது. திருச்சமூகத்தின் வாழ்விலும் வளர்ச்சியிலும் அருங்கொடைகள் மிக முக்கிய பங்கு வகித்தன. தூய ஆவியாருக்கும் அவரது அருங்கொடைகளுக்கும் தொடக்கத் திருச்சபை அதிக அழுத்தம் கொடுத்தது என்பதனைப் பவுலின் கடிதங்கள் உறுதிசெய்கின்றன (1கொரி. 12:1-31).

படிநிலை அமைப்பு வளரத் தொடங்கி, இறுக்கமாக ஆரம்பித்த இரண்டாம் நூற்றாண்டில் ஆவியின் அருங்கொடைகளுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறையத்தொடங்கியது.

திருப்பணிகள் ஆவியின் கொடைகளோடு தொடர்புபடுத்தப்பட்டு வந்த நிலை மாறி, கிறிஸ்துவோடு மட்டுமே தொடர்புபடுத்தப்பட்ட நிலை உருவானது. இக்காலத்திய திருச்சபைத் தந்தையர்களின் எழுத்துக்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார், "கிறிஸ்துவே திருச்சபையில் உள்ள எல்லா திருப்பணிகளுக்கும் அடித்தளம். அவரே அவற்றுக்கு முன்மாதிரி; அவரே அவற்றின் இறுதி நோக்கம்" (Letter to the Trallians, 2) என்று குறிப்பிடுகிறார். ஆவியின் அருங்கொடைகளால் திருச்சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டிருந்தவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் திருப்பணியில் பங்குபெற்றவர்கள் எனும் நிலைமாறி, படிநிலை அமைப்புக்குள் உள்ளவர்கள் மட்டுமே திருப்பணி செய்பவர்கள் எனும் நிலை உருவாகிறது.

### புதிய இஸ்ரயேல் கருத்தாக்கம்

திருப்பணிகள் பற்றிய கிறிஸ்து மையப் புரிதல் உருவாகி வளர்ந்ததைத் தொடர்ந்து இன்னொரு வளர்ச்சியாகப் புதிய இஸ்ரவேல் பற்றிய கருத்தாக்கம் வளர்கிறது. இவ்வளர்ச்சியின் விளைவாகப் பழைய ஏற்பாட்டு ஆலயம், வழிபாடு, பலி இவற்றோடு தொடர்பற்ற சொற்களைத் தேர்வுசெய்து வழக்கில் வைத்திருந்த தொடக்கத் திருச்சபை, 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பழைய ஏற்பாட்டு வழிபாட்டுத் தொடர்புடைய சொற்களைப் புதிய ஏற்பாட்டுத் திருப்பணிகளைக் குறிக்க பயன்படுத்தத் தொடங்குகிறது.

பழைய ஏற்பாட்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் புதிய இஸ்ரயேலில் நிறைவுறும் என்ற சிந்தனை பிறக்கிறது. தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவர்கள் தங்களைப் புதுப்பிக்கப்பட்ட இஸ்ரயேலாகவே (Renewed Israel) எண்ணினர். வீடுகளில் இறைவார்த்தையைப் பகிர்வதற்கும், அப்பம் பிடுவதற்கும் கூடினாலும் ஆலயத்திற்கும், செபகூடங்க -ளுக்கும் செல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் (திப. 2:46;21:26) என்ற திருத்தூதர் பணிகள் தரும் குறிப்புகள் இதனை உறுதிசெய்கின்றன. புது ஆலயம், புதுப்பலி, புதுச்சட்டம் உண்டு என்ற இறையியல் உருவாக்கப்படுகிறது. இப்புதிய இஸ்ரயேல் - களுக்கிடையே ஒப்புமையையும் உருவாக்குகிறது,

புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேல் என்பது எப்போது புதிய இஸ்ரயேல் என்று மாறியதோ அப்போதே பழைய ஏற்பாட்டுக் குருத்துவத் - தோடு புதிய ஏற்பாட்டு அருள்பணியை ஒப்பிடுவதும் தொடங்குகிறது.

பழைய இஸ்ரயேலின் தலைமைக் குருவோடு புதிய இஸ்ரயேலின் கண்காணிப்பாளரும் (ஆயரும்) பழைய இஸ்ராயேலின் குருக்களோடு புதிய இஸ்ரயேலின் மூப்பர்களும் (அருள்பணி யாளர்களும்) ஒப்புமைப்படுத்தப்படுகின்றனர். இவ்வொப்புமை ஹிப்போலிட்டஸ் போன்ற திருத்தந்தையர்களின் எழுத்துக்களில் காணக்கிடக்கின்றது. "திதாக்கே" தொகுப்பில் காணப்படும் ஆயர் திருநிலைப்பாட்டுச் செபமும் இதனை உறுதிசெய்கிறது. மோசே மூப்பர்களைத் தனக்கு உதவியாளர்களாக நியமித்ததைப் போன்று அருள்பணியாளர்கள் ஆயர்களுக்குத் துணையாளராய் நியமிக்கப்படுகின்றனர் என்றும் புரிந்துகொள்ளப்பட்டது. ஆயரின் முதன்மை நிலையை நிலைநிறுத்துகிற, நியாயப்படுத்துகிற முயற்சிகளுக்கும் வலுவான அடித்தளம் இப்புதிய வளர்ச்சியில் அளிக்கப்பட்டது எனலாம்.

(அடுத்த இதழில் தொடரும்)

# எழுதுகோலினால் மன்னாவை எழுச்சியுறச் செய்த

# அருட்சகோதரி கனிசியஸ்

**அருட்பணியாளர் தமிழ் நேசன்**



எழுத்து என்பது ஆற்றல் வாய்ந்த ஒரு ஆயுதம். "என்னிடம் 26 வீரர்களைக் கொடுங்கள். நான் இந்த உலகத்தை மாற்றிக் காட்டுகிறேன்" என்றார் சோசலிசக் கொள்கையை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய ஜேர்மன் நாட்டு அறிஞர் கால் மாக்ஸ். அவர் கூறிய அந்த 26 வீரர்கள் யார் என்றால் ஆங்கில மொழியில் உள்ள 26 எழுத்துக்கள்தான். ஆம், இந்த ஆற்றல் வாய்ந்த ஆயுதமாகிய எழுத்தை அருட்சகோதரி கனிசியஸ் அவர்கள் நன்கு பயன்படுத்தினார். அதனால் மற்றவர்களும் பயன்பெறும்படி செய்தார். நோயினால் அவருடைய உடல் தளர்வுற்றிருந்தாலும் உள்ளம் தளர்வடையவில்லை. கால்கள் நடக்க மறுத்தாலும் அவருடைய எண்ணங்கள் சிறைப்பட்டுக் கிடக்கவில்லை. கைகள் இயங்க மறுத்தாலும் அவருடைய எழுதுகோல் இயங்க மறுக்கவில்லை. அவருடைய எழுத்துக்கள் மன்னா மூலமாக உலகை வலம்வந்தன. சக்கர நாற்காலியில் இருந்தபடியே சர்வதேசத்துடனும் தொடர்புகளைப் பேணிய சாதனையாளர் அவர்.

திரைமறைவில் இருந்துகொண்டு மன்னா பத்திரிகைப் பணிக்காக அருட்சகோதரி அவர்கள் அற்புதமான பணிகளைச் செய்தார். அவருடைய எழுத்துக்களால் மன்னா பத்திரிகை வளர்ச்சி பெற்றது, வாசகர்கள் எழுச்சி பெற்றனர். அவருடைய பணிகள் கால வெள்ளத்தால் கரைக்கப்பட முடியாதவை. வார்த்தைகளினால் உரைக்கப்பட முடியாதவை. அவருடைய அரும்பணிகளுக்காக 'நன்றி' என்ற ஒரு வார்த்தையை மட்டும் நெஞ்சம் நிறைந்த உணர்வுகளோடு கூறுகின்றேன். வார்த்தைக்குள் அடங்காத வலியோடு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

## முயற்சியோடு மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணிகள்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை. மொழிகளை நன்கு தெரிந்திருந்தால் மட்டும் இந்த மொழிபெயர்ப்புப் பணியைச் செய்துவிட முடியாது. மொழியறிவு முக்கியமானதுதான். ஆனால் தொடர்ச்சியான பயிற்சியே ஒருவரைச் சிறந்த மொழிபெயர்ப்பாளராக்கும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பார்கள். திருச்சபை சார்ந்த செய்திகளில் பல - குறிப்பாக உலகத் திருச்சபைச் செய்திகள், இலங்கைத் திருச்சபைச் செய்திகள் போன்றவை ஆங்கில ஊடகங்கள் வாயிலாகவே வெளிவருகின்றன. அவற்றில் முக்கியமானவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றைச் சூட்டோடு சூடாக மொழிபெயர்த்து மன்னாவில் பிரசுரிக்க வேண்டும். இதற்குத் தரமான, திறமான மொழிபெயர்ப்பாளர் தேவை.

"பத்திரிகைப் பணியை ஆற அமர இருந்து ஒருபோதும் ஆற்ற முடியாது. அவசர அவசரமாக எப்போதும் ஆற்றப்படவேண்டிய ஒரு பணியே பத்திரிகைப் பணி." என 'பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்' என்ற நூலில் அருட்பணியாளர் ரூபன் மரியாம்பிள்ளை குறிப்பிடுகின்றார். அப்படிப்பட்ட அவசரப் பணியில் மொழிபெயர்ப்பாளர்களும் பத்திரிகை ஆசிரியரோடு ஒத்துழைத்து உதவவேண்டும். என்னுடைய வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அருட்சகோதரி கனிசியஸ் அவர்கள் நான் வழங்கிய ஆங்கிலச் செய்திகளை உடனுக்குடன், துல்லியமாக தமிழில் மொழிமாற்றம் செய்து தந்தார்.

இலங்கையின் ஒரேயொரு ஆங்கிலக் கத்தோலிக்க வாரப் பத்திரிகையான மெசஞ்சர் (Messenger) பத்திரிகை, ஆசிய கத்தோலிக்க மாதாந்த சஞ்சிகையான வேல்ட் மிசன் (World Mission) போன்றவற்றில் வரும் திருச்சபை சார்ந்த முக்கிய செய்திகள், திருத்தந்தை மற்றும் ஆயர் மன்றத்தினால் வெளியிடப்படும் திருமடல்கள், அறிக்கைகள் போன்றவற்றை அவர் உடனுக்குடன் மொழிபெயர்த்துத் தந்தார்.

## திறமையோடு தயாரித்துத் தந்த குறுக்கெழுத்துப் போட்டிகள்

ஒருவரின் அறிவாற்றலை அளவிடும் போட்டியாக குறுக்கெழுத்துப் போட்டி உள்ளது. மன்னா வாசகர்கள் விவிலியத்தை வாசிக்கத் தூண்டும் முகமாகவே மன்னாவில் விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டியை ஆரம்பித்தோம். சரியான விடை எழுதுவோரில் குலுக்கல் மூலம் மூன்று பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். அவர்களுக்கு பணத்தொகைகளும் பரிசாக அனுப்பிவைக்கப்படும். சரியான விடை எழுதுவோரில் 50 அதிஸ்ரசாலிகளின் பெயர்கள் மன்னாவில் பிரசுரமாகும். தங்கள் பெயரைப் பத்திரிகையில் பார்த்து மகிழும் நோக்கத்தோடும், விவிலியத்தைப் புரட்டிப் படிக்க ஒரு வாய்ப்பு என்ற அடிப்படையிலும் பலர் இப்போட்டியில் பங்கெடுத்தனர். நாம் எதிர்பார்த்ததைவிட ஒவ்வொரு மாதமும் மன்னா வாசகர்களில் பலர் இக்குறுக்கெழுத்துப் போட்டியில் மிகவும் ஆர்வத்தோடு கலந்துகொண்டமை எம்மை ஆச்சரியப்படவைத்தது.

இக்குறுக்கெழுத்துப்போட்டியை கடந்த பல ஆண்டுகளாக எமக்கு எழுதித் தந்தவர் அருட்சகோதரி கனிசியஸ் அவர்களே. ஒரு வருடத்திற்குரிய போட்டிகளை முன்னதாகவே தயாரித்துத் தந்துவிடுவார். இதனால் நேரகாலத்தோடு நாம் இப்பகுதியை கணனியில் பதிவுசெய்து வடிவமைத்து வைப்பதன் மூலம் இறுதிநேர வேலைப்பளுவைத் தவிர்க்கக்கூடியதாக இருந்தது. 2009ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வைத்திய சிகிச்சைக்காக கொழும்புக்குச் சென்றிருந்த வேளையில்தான் அருட்சகோதரி இறைவனடி சேர்ந்தார். சிகிச்சைக்காக கொழும்பில் உள்ள திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் தங்கியிருந்த வேளையில் 2010ம் ஆண்டு யூலை மாதம் வரையிலான குறுக்கெழுத்துப் போட்டிகளை அவர் தயாரித்து தயார் நிலையில் வைத்திருந்ததாக அக்கன்னியர் இல்லத்தைச் சேர்ந்த அருட்சகோதரி கலா அவர்கள் என்னிடம் கூறினார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் தனது எழுத்துப் பணிகளை இறுதி மட்டும் அவர் தொடர்ந்தாற்றினார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

## வாஞ்சையோடு எழுதப்பட்ட வாழ்க்கைக் குறிப்புகள்

மற்றவர்களில் உள்ள நன்மைத்தனங்களைப் பார்க்கவும், அவற்றைப் பாராட்டவும் எல்லோரும் முன்வரமாட்டார்கள். ஆனால் அருட்சகோதரி கனிசியஸ் அவர்களிடம் மற்றவர்கள் நன்மைகளைப் பார்த்துப் பாராட்டும் பண்பு மிகவே இருந்ததை நான் கண்டேன். மன்னா பத்திரிகையும் மற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தி ஊக்குவிப்பதை தனது கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தது. மன்னாவின் இந்தக் கொள்கையோடு உடன்பாடுள்ள பண்பைக் கொண்டவராக அருட்சகோதரி கனிசியஸ் அவர்கள் விளங்கினார்

திருச்சபையில் பணிசெய்த - பணிசெய்து கொண்டிருக்கும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், மற்றும் இல்லறப் பணியாளர்கள் போன்றவர்களுடைய 25வது வெள்ளிவிழா, 50வது பொன்விழா, 60வது வைரவிழா போன்ற யூபிலி நிகழ்வுகளின்போது அல்லது அவர்கள் இறைவனடி சேர்ந்தபோது அவர்களைப் பற்றிய குறிப்புகளை இவர் மன்னாவில் எழுதினார். மற்றவர்களின் நன்மைத்தனங்களை, நற்பண்புகளை. அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகளை அவர் தெளிவாக பதிவுசெய்தார். ஒவ்வொருவரைப் பற்றிய சரியான மதிப்பீட்டை அவர் கொண்டிருந்தார் என்பதற்கு அவருடைய எழுத்துக்கள் சான்றுபகரும்.

இதனால் பாராட்டப்பட்டவர்களும் அவர்களின் அன்புக்குரியவர்களும் உளம் பூரித்தனர். அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னாவும் மனமகிழ்ந்தது.

## வரலாறுகளைப் பதிவு செய்தவர் வரலாறாகவே மாறினார்

"இன்று செய்திகளாக எழுதப்படுபவை நாளை சரித்திரமாகப் பதியப்படுகின்றன. நாளைய சரித்திரத்திற்கான இன்றைய பதிவுகள்தான் செய்திகள்." என்று கூறப்படுகின்றது. இந்த வகையில் அவர் எழுதிய, மொழிபெயர்த்துத் தந்த செய்திகள் நாளைய வரலாறாக அமையப்போகின்றது. பலருடைய வாழ்க்கையை வரலாறாகப் பதிவு செய்து தந்தவர், இன்று தானே வரலாறாக மாறியிருக்கின்றார் என்பதை நினைக்கும்போது நெஞ்சம் நெகிழ்கின்றது.

எனினும் மனித வாழ்வின் நியதிகளை யார்தான் மாற்ற முடியும்? "இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான் இதை இருப்பவனும் எண்ணிப் பார்க்க மறந்திட்டான்" என்ற கவியரசர் கண்ணதாசனின் கவி வரிகள் நம் ஒவ்வொருவரின் இறுதிக் கதியைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

## வாழும் மறைசாட்சியத்திற்கு மாதிரியாகத் திகழ்ந்தார்

"வாழும் மறைசாட்சியம்" (Living Martyrdom) என்பது வாழும்போதே துன்பங்கள், துயரங்கள், வருத்தங்கள், வியாதிகள், வாழ்க்கைப் போராட்டங்களை ஏற்றுக்கொண்டு இறையரசுக்காக அனைத்தையும் தாங்கிக்கொண்டு இயேசுவின் சிலுவைப் பாடுகளில் பங்கெடுப்பதாகும். திருச்சபையின் தந்தையர்கள் பலர் இந்த வாழும் மறைசாட்சியத்தைப் பற்றிப் பேசியுள்ளார்கள்.

குறிப்பாக திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இதைப்பற்றி நிறைய இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய சொந்த வாழ்வே இளமை முதற்கொண்டு இறக்கும்வரையிலும் துன்பங்கள், துயரங்கள், வியாதிகள், போராட்டங்கள் நிறைந்த வாழ்வாகவே உள்ளதை அவருடைய வீரவரலாறு நமக்குச் சொல்லும். திருச்சபையில் 'இரத்த மறைசாட்சியம்' (Blood Martyrdom) என்பது கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தி மரிப்பது – வேதசாட்சியாவது. இந்த இரத்த மறைசாட்சியத்திற்கு எந்த விதத்திலும் குறைவற்றதாகவே வாழும் மறைசாட்சியமும் உள்ளது.

கடந்த 2000 ஆண்டுகால திருச்சபையின் வரலாற்றில் இரத்த சாட்சிகளாக மரித்த எண்ணிறந்த புனிதர்கள் இருக்கும் அதேவேளை இரத்த மறைசாட்சிகளாக மரிக்காமல் வாழும் மறைசாட்சிகளாகத் திகழ்ந்து புனிதர்களாக உயர்த்தப்பட்டவர்களின் பட்டியல் மிக நீண்டது. 'மௌனப் புன்னகையாள்' என்று சிறப்பிக்கப்படும் சிறு மலர் சின்னத் தெரேசாள், இந்தியாவின் முதல் பெண் புனிதர் என்ற பெருமையைத் தனதாக்கிக்கொண்ட புனித அல்போன்சா போன்றவர்கள் தங்கள் உடலிலும் உள்ளத்திலும் பலவித நோய்களைச் சுமந்துகொண்டு இறுதி மட்டும் உறுதி தளராமல் இயேசுவிற்காக வாழ்ந்தவர்கள்.

இவர்களின் அடிச்சுவட்டில் இன்று நாம் வாழும் காலத்திலும் பல இறை மனிதர்கள் இப்படிப்பட்ட வாழும் மறைசாட்சியத்திற்கு உருக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே அருட்சகோதரி கனிசியஸ் அவர்களும் அடங்குவார் என்றே நான் கருதுகின்றேன். கடந்த 30 ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்ட நிலையில் - அதிலும் கடந்த 10 வருடங்களாக நடக்க முடியாத நிலையில், கைவிரல்கள் முதலாக அசைக்க முடியாத நிலையில், சக்கர நாற்காலியில் இருந்துகொண்டு தனது பணிகளைத் தொடர்ந்தார். வாழும் மறைசாட்சியத்தை வாழ்ந்தோர் வரிசையில் இவரும் நம் காலத்து வாரிசாக எண்ணப்படத்தக்கவராக விளங்கினார்.

## நிறைவுரை

முடக்கப்பட்ட நிலையிலும் அவருடைய பணி மும்முரமாக இடம்பெற்றது. சாதாரணமாக நடமாடித்திரியக்கூடிய நிலையில் அவர் இருந்து செய்திருக்கக்கூடிய பணிகளைவிட சக்கர நாற்காலியில் இருந்தபடியே அவர் அதிக் பணிகளைச் செய்தார் என்றே நான் நினைக்கின்றேன்.

இந்த மண்ணில் மலர்ந்த மனிதர்கள் மாமனிதர்களாய்ப் பயணித்து தங்கள் பாதப் பதிவுகளை, எண்ணக் குவியல்களை, வாழ்வின் பாடங்களை நமக்கு விட்டுச்சென்றிருக்கின்றார்கள். அந்த வகையில் அருட்சகோதரியின் வாழ்வும் பணியும் நமக்கெல்லாம் பல வாழ்க்கைப் பாடங்களைச் சொல்லுவதாய் உள்ளது.

"இலையுதிர் காலம் என்பது மரணமல்ல. இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம். அஸ்தமனம் என்பது மறைவு அல்ல இன்னொரு உதயத்திற்கான பதுக்கம்" என்கின்றார் கவிப்பேரரசு வைரமுத்து. இதைத்தான் திருவிவிலியமும் நமக்கு நம்பிக்கையின் செய்தியாகத் தருகின்றது.

"ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர். ஆம் அவர்கள் தங்கள் உழைப்பில் இருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும்" (திருவெளிப்பாடு 14:13).


## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவு

மலர்வு 28 07 1965



உதிர்வு 25 11 2009

அமரர் சூசைப்பிள்ளை பசில் அன்டனி (விஜி)

பெரியபண்டிவிரிச்சானை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சூசைப்பிள்ளை பசில் அன்ரனி கனடாவில் அகால மரணமடைந்தார். அன்னார் திரு. திருமதி. சூசைப்பிள்ளையின் பாசமிகு மகனும் டெசியின் அன்பு நிறைந்த கணவனும் லர்ஷாவின் பாசமிகு தந்தையும் பிலோமினா (லண்டன்) குணாதி, இந்திராணி (பிரான்ஸ்) இக்னேசியஸ், ஆசிரியர் கெலன், சாள்ஸ், காலஞ்சென்ற ரொபட் அன்ரனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கடந்த 05.12.2009 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சாள்ஸ் (கண்டி) 0774000299




## தெரிந்துகொள்ளுங்கள்!

- அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத் திறக்கும்.
- மனம் மகிழ்ந்தால் முகமும் மலர்ந்திருக்கும்.
- எமது வாழ்வை நாம் மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது.
- தன்னம்பிக்கைதான் பெரிய சொத்து.
- உன்னை விரும்புகின்ற அனைவரையும் நீ எதிரியாக நினைத்தால் நீ விரும்புகிறவரை தெய்வமே எதிரியாக்கும்.
- முயன்று தோற்பது கௌரவம். முயலாமல் இயலாது என்பது கேவலம்.
- சோம்பல் எல்லா விஷயத்தையும் கஷ்டமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிதாக்கும்.

*விஜயதாஸ் நிறோஜ், செம்மண்தீவு, முருங்கன்*

# மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக் குழுவின் கடந்த மூன்று மாதகாலச் செயற்பாடுகள்

1. தலைமன்னார் பங்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வு.
2. பள்ளிமுனைப் பங்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வு.
3. வேப்பங்குளம் பங்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வு.
4. பம்பைமடுப் பங்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வு.
5. உயிலங்குளம் பங்கு இளைஞர்களுக்கான கருத்தமர்வு.
6. பங்குகளில் இடம்பெற்ற தேசிய மட்ட ஓவியப்போட்டி
7. பங்குகளில் இடம்பெற்ற தேசியமட்ட இளைஞர் தின நிகழ்வுகள்

### தலைமன்னார் பங்கு இளைஞர் கருத்தமர்வு

இக்கருத்தமர்வு ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற காரணத்தினால் அன்றைய பங்குத் திருப்பலி அனைத்துப் பங்கு மக்களின் பங்களிப்பில் இளைஞர்களினால் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலி முடிவில் பங்குத் தந்தை அருட்திரு விக்ரர் அவிதப்பர் அவர்கள் அன்றைய இளைஞர் நிகழ்வுபற்றி விபரித்துக் கூறினார்.

காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகிய கருத்தமர்வு பிற்பகல் 3.00 மணிவரை நீடித்தது. நிகழ்வினை ஆரம்பித்து வைத்த மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு பி. ஜேசுறாஜா அவர்கள் "இளைஞனும் தலைமைத்துவமும்" என்ற கருப்பொருளில் இடம்பெறவிருந்த கருத்தமர்வின் முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்தி அனைத்து இளைஞர்களும் யுவதிகளும் முழுநாள் நிகழ்வுகளிலும் முழுமையாகப் பங்கெடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தார்.

அன்றைய நிகழ்வின் வளவாளராக அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்தந்தை ஜெறாட் றொசாயிறோ அவர்கள் செயற்பட்டமை ஓர் விசேட அம்சமாகும். கருத்தமர்வின் கருப்பொருளுக்கமைய உரைகள் குழு ஆய்வு, விளையாட்டுக்கள், கலந்துரையாடல்கள் யாவும் அமைந்தன. இடம்பெற்ற விளையாட்டுக்களில் ஒன்று இளம் சமுதாயத்திற்குச் சிறந்த படிப்பினையைச் கற்றுக்கொடுத்தது. பங்கெடுத்த 59 இளைஞர்களும் இரு குழுக்களாக்கப்பட்டனர். இரு குழுவினரும் அவர்களிடமுள்ள துணிகளை ஒன்றோடொன்றாகத் தொடுத்துக்கொண்டு போகவேண்டுமெனவும் விளையாட்டின் இறுதியில் எக்குழுவினரின் துணித் தொடுப்பு அதிக நீளமாக உள்ளதோ அக்குழுவினரே வெற்றிக்குரியவர்கள் என்பதுதான் நிபந்தனை. அதற்கமைய இரு குழுவினரும் தம்மிடமிருந்த கைக்குட்டைகளைத் தொடுக்கத் தொடங்கினர். தொடர்ந்து யுவதிகள் சிலர் தமது கழுத்துக்களில் அணிந்திருந்த சால்வைகளைக் கழற்றித் தொடுத்தனர். இளைஞர்கள் பலர் தமது சேட்டுகளைக் களற்றித் தொடுத்தனர். போட்டி மும்முரமாக நடந்தது. ஐந்து நிமிடங்கள் என வரையறுக்கப்பட்ட போட்டியில் ஒரு நிமிடம் மட்டுமே எஞ்சியிருந்த வேளையில் ஒரு குழுவினர் வெற்றியைத் தமதாக்கிக்கொள்ளும் நோக்கோடு தமது பெனியன்களைக்கூடத் தியாகம் செய்து வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். இவ்விளையாட்டினூடாக இளைஞர் சமுதாயம் கற்றறிந்த பாடம் யாதெனில் ஒவ்வொருவரது அர்ப்பணிப்பிலும்தான் முழுச் சமுதாயத்தின் வெற்றி தங்கியுள்ளது என்பதாகும். இந்நிகழ்வின் அனைத்து ஒழுங்குகளையும் பங்குத்தந்தை செய்திருந்தார்.

### பள்ளிமுனைப் பங்கு இளைஞர் கருத்தமர்வு

இந்நிகழ்வு காலைத் திருப்பலியுடன் ஆரம்பமாகியது திருப்பலியை இளைஞர்கள் சிறப்பித்தனர். கருத்தமர்வின் வளவாளராக வவுனியா கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருவாளர் சொர்ணறாஜ் அவர்கள் செயற்பட்டார். இக்கருத்தமர்வின் மையப்பொருள் "உளவள ஆற்றுப்படுத்தல்" ஆகும். உரைகள், கலந்துரையாடல்கள், மற்றும் விளையாட்டுக்களுடாக நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் சிறப்பான சில பயிற்சிகளும் இடம்பெற்றன. பங்கெடுத்தோர் அனைவரும் நிகழ்வின் ஆரம்பத்தில் மேடைக்கூச்சத்துடன் இருந்தபோதிலும் நிகழ்வின் இறுதிக்கட்டத்தில் மேடைக்கூச்சம் என்ற தடையைத் தாண்டி முன்வந்து செயற்பட்டமை பாராட்டுக்குரியதாகும். அனைத்து ஒழுங்குகளையும் பங்குத்தந்தை ச. கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் மேற்கொண்டிருந்தார். மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. பி. ஜேசுறாஜா அவர்கள் நிகழ்வின் இறுதியில் அன்றைய நிகழ்வின் மீளாய்வை நடாத்தினார். காலை 9.00 மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகள் பிற்பகல் 2.30 மணியளவில் நிறைவுபெற்றது.

### வேப்பங்குளம் பங்கில் கருத்தமர்வு

58 இளைஞர், யுவதிகள் பங்கெடுத்த இக்கருத்தமர்வு காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 3.00 மணியளவில் நிறைவடைந்தது. உளவியல் சம்பந்தமான இக்கருத்தமர்வை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஓர் பிரிவின் இணைப்பாளர் திருவாளர் அலெக்ஸ் நிக்சன் நடாத்தினார். ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இக்கருத்தமர்வில் அனைவரும் உற்சாகத்துடன் செயற்பட்டனர்.

உரைகள், குழு ஆய்வுகள், விளையாட்டுக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ஊடாக கருப்பொருளின் உட்கிடக்கைகள் வெளிக்கொணரப்பட்டன. பங்குத்தந்தையர்களான அன்ரன், முரளி, ஆகியோர் அனைத்து ஒழுங்குகளையும் செய்திருந்தனர். மதிய உணவு டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் வழங்கப்பட்டது.

### பம்பைமடுப் பங்கில் கருத்தமர்வு

45 இளைஞர், யுவதிகள் பங்கேற்ற இக்கருத்தமர்வு மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. பி. ஜேசுறாஜா அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியுடன் காலை 9.00 மணிக்கு வேப்பங்குளம் பங்கில் இடம்பெற்ற அதே பாணியில் அதே தலைப்பில், அதே வளவாளரினால் நடாத்தப்பட்டது. ஆரம்பத்தில் மௌன விரதம் காத்த இளைஞர், யுவதிகள் இறுதிக்கட்டத்தில் முழுமையான அர்ப்பணிப்புடன் பங்கெடுத்தமை இங்கு குறிப்பிட வேண்டியதாகும். இங்கு இடம்பெற்ற விளையாட்டொன்றில் இரு குழுவினருக்கான போட்டியாக ஒவ்வொருவரும் அவரவர் வாயில் வைத்திருந்த குச்சியில் ஒருவர் பின் ஒருவராக வளையம் கோர்க்கும் நிகழ்வு நடைபெற்றது. வளையமானது நிலத்தில் விழாதவாறு நேர்வரிசையில் நிற்கும் குழுவினரின் இறுதி நபரைச் சென்றடைய வேண்டுமென்பதுதான் விளையாட்டின் நிபந்தனை. இவ்விளையாட்டினூடாக நிதானம், விவேகம், சுறுசுறுப்பு போன்ற பண்புகளைக் கற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்தது. இறுதி நிகழ்வான மீளாய்வை அருட்திரு. பி. ஜேசுறாஜா அவர்கள் நடாத்தினார். பங்குத்தந்தை சவுல் நாதன் அவர்கள் அனைத்து ஆயத்தங்களையும் செய்திருந்தார். மதிய உணவு டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் வழங்கப்பட்டது.

### உயிலங்குளம் பங்கில் இளைஞர் கருத்தமர்வு

"இளமையும் உறவும்" என்னும் கருப்பொருளில் இக்கருத்தமர்வில் 41 இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர். அன்றைய நிகழ்வுகள் பற்றி மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுறாஜா அவர்கள் விபரித்ததையடுத்து பங்குத்தந்தை இ. டெனி கலிஸ்ரஸ் அடிகளார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அன்றைய கருத்தமர்வின் வளவாளர்களாக வவுனியா அமைதித் தென்றல் நிலைய இயக்குனர் அருட்தந்தை ச. மரிய செபஸ்ரியன் (அமதி) அடிகளார் மற்றும் அவரின் பணியாளர்கள் நடாத்தினர். இளமை எதிர்கொள்ளும் சவால்கள், அவைகளைக் கையாளும் முறைகள், உறவும் உறவை வளர்க்கும் வகைகளும் போன்ற உபதலைப்புக்களில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றன. பங்குத் தந்தை இ. டெனி கலிஸ்ரஸ் அவர்கள் நிகழ்வுக்கான அனைத்து ஆயத்தங்களையும் செய்திருந்தார். பங்குபற்றியோருக்கான மதிய உணவு பங்கு மக்களால் வழங்கப்பட்டது.

தேசிய மட்ட ஓவியப்போட்டி பங்குகளில் இடம்பெற்றது. "கிறிஸ்துவாகிய ஒளியால் நிரம்பி அமைதியின் தூதுவராவோம்" என்ற கருப்பொருளில் இப்போட்டியானது இடம்பெற்றது. அதேபோன்று தேசியமட்ட இளைஞர் தின நிகழ்வுகளும் பங்குகளில் இடம்பெற்றது. சில பங்குகள் தமது பங்கிலேயே திருப்பணி விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் மூலம் தினத்தைச் சிறப்பித்தனர். சில பங்குகள் அயல் பங்குகளுடன் இணைந்து நிகழ்வுகளை நடாத்தின.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி – 78

கொரிந்தியருக்கு எழுதிய 2ம் திருமுகத்தின் பகுதிகளிலிருந்து தெரிவிக்கப்பட்ட வினாக்கள் நிறைவுற்றமையால் நாம் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்துக்குள் செல்கின்றோம். கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் ஆறு அதிகாரங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனாவின் கடலோர நகரமான செசாரியாவிலிருந்து வடக்கு நோக்கிப் பயணம் செய்து தாலமாய், தீர் சீதோன் என்னும் நகரங்களையும் தாண்டி வடக்கு நோக்கிச் சென்றால் சிரியாவின் அந்தியோக்கியா நகரத்தை அடைவோம். இது ஜெருசலேமிலிருந்து அண்ணளவாக 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இங்கிருந்து இன்னும் சிறிது வடக்கு நோக்கிச் சென்று மத்தியதரைக் கடலோரமாக மேற்கு நோக்கிச் சென்றால் சிலிசியாவின் தர்சு நகரம் வரும்- இதுவும் கடலோர நகரம்தான். இங்கிருந்து மேற்கு நோக்கி இன்னுமொரு 50 கி. மீ. பயணித்தால் கலாத்தியாவின் தெருபைகிஸ்தீரா இக்கோணியா ஆகிய நகரங்கள் வரும். இவை கடலோர நகரங்கள் அல்ல. இங்கு வாழ்ந்த ஆதித்திருச்சபையினருக்கு எழுதப்பட்ட கடிதங்களே கலாத்தியருக்கு எழுதப்பட்ட திருமுகங்களாகும்.

இப்பிரதேசத்தைப் புனித பவுல் தனது 2ம் 3ம் தூதுரைப் பயணங்களின்போது தரிசிக்கின்றார்.

இனி நமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் கலாத்தியர் 1ம் 2ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

### சரியான விடைகளைத் தெரிந்து எழுதுக.

1. தம் மகனைப் பற்றிய நற்செய்தியை பிற இனத்தவருக்கு அறிவிக்குமாறு அவரைப் பவுலுக்கு வெளிப்படுத்தியவர் யார்?
அ. திருத்தூதர்கள் ஆ. கடவுள் இ. திருவெளிப்பாட்டு நூல்கள்

2. புனித பவுல் தாம் அழைக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஜெருசலேமுக்குச் சென்றார். ஏன் சென்றார்?
அ. இயேசுவின் சீடர்களைச் சந்திக்க
ஆ. திருச்சபையினரோடு கலந்து பேச
இ. கேபாவைப் பார்த்துப் பேச

3. புனித பவுல் யாருக்கு உகந்த பணியாளனாக இருக்க விரும்பினார்?
அ. கிறிஸ்துவுக்கு உகந்த பணியாளனாக
ஆ. தான் நற்செய்தி அறிவிக்கும் மனிதருக்கு உகந்த பணியாளனாக
இ. தன்னைத்தானே திருப்திப்படுத்தும் பணியாளனாக

4. தன் நற்செய்திப் பணியின் 14 ஆண்டுகளுக்குப்பின் பவுலடியார் யார் யாருடன் ஜெருசலேமுக்குச் சென்றார்?
அ. தீத்துவுடனும் பர்ணபாவுடனும்
ஆ. பேதுருவுடனும் தீத்துவுடனும்
இ. யாக்கோபுடனும் பர்ணபாவுடனும்

5. புனித பவுல் இரண்டாம் முறையாக ஜெருசலேமுக்குச் சென்றபோது அங்கு எத்தனை நாட்கள் தங்கி இருந்தார்?
அ. 51 நாட்கள் ஆ. 15 நாட்கள் இ. 40 நாட்கள்.

6. நற்செய்தி அறிவிப்புப் பணியில் புனித பவுலோடு இணைந்து பணியாற்றிய தீத்து எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ. ஆசியர் ஆ. மசிதோனியர் இ. கிரேக்கர்

7. பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிப்புப் பணி புனித பவுலுக்கு வழங்கப்பட்டதுபோல் யூதருக்கு நற்செய்தி அறிவிக்கும் பணி யாருக்கு வழங்கப்பட்டது?
அ. புனித பேதுருவுக்கு ஆ. புனித தோமாஸுக்கு
இ. புனித யோவானுக்கு

8. "ஏழைகளுக்கு உதவ மறக்க வேண்டாம்" என யாரால் யாரிடம் கேட்கப்பட்டது?
அ. யாக்கோப்புவினால் கேபாவிடம் ஆ. பேதுருவினால் யோவானிடம் இ. பவுலினால் பர்ணபாவிடம்

9. நாம் எப்படி இறைவனுக்கு ஏற்புடைய மக்கள் ஆகமுடியும்?
அ. திருச்சட்டம் சார்ந்த செயல்களால்
ஆ. இயேசுக் கிறிஸ்துவின்மீது கொள்ளும் நம்பிக்கையால்
இ. விருத்தசேதனத்தின் மூலம் யூதர்களாவதால்

10. யூதேயா நாட்டிலிருந்த கிறிஸ்தவ சபைகள் பவுலின் பொருட்டு கடவுளைப் போற்றி புகழ்ந்தார்கள் ஏன்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 76இற்கான கேள்விகளுக்கு 31 பேர் விடையளித்திருந்தனர்

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**செ. ஆன் நியூசிக்கா துரம்**
**மரியாள் வீதி, தாழ்வுபாடு**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு
2. பெனடிக்ற் டிரோன், பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
3. சி. கணனிகா யூனிற், 6A, வீ. இல. 6855 அருணாசலம், செட்டிகுளம்
4. Sr. மேரி பற்றிசியா புனித அந்தோனியார் ஆலயம், யாழ்ப்பாண வீதி, றம்பவ, அநுராதபுரம்.
5. குமார் தர்ஷன் , பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
6. அ. கில்டா, கட்டையடம்பன், மடு வீதி
7. அ. மேரி அன்ரனியா, ஒல்லிமடு, நானாட்டான்.
8. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு
9. செ. மேரி பற்றீசியா, நறுவிலிக்குளம், வங்காலை
10. அ. அருள்மேரி, இல. 106, கதிர்காமர் நிவாரணக் கிராமம், செட்டிகுளம்


## நீங்காத நினைவுகள்

**25ம் ஆண்டு நினைவு**

மலர்வு 08 - 11 - 1947



உதிர்வு 04 - 12 - 1984

**திரு. சூசை நீக்கிலாஸ் (ஜெயம்)**

**21ம் ஆண்டு நினைவு**

மலர்வு 09 - 05 - 1971



உதிர்வு 28 - 12 - 1988

**செல்வன். நீக்கிலாஸ் சத்தியராஜா (சத்தியா)**

"நீதிமான் காலம் வரும் முன்பே இறந்துவிட்டாலும் இளைப்பாற்றி அடைவான்.
மாசற்ற வாழ்வே பழுத்த முதுமைப் பருவம்." (ஞான 4:7-9)

04.12.2009 அன்று மாலை 5.00 மணிக்கு மாவிலங்கேணி புனித அடைக்கலமாதா ஆலயத்தில் இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புத்திரர்கண்டான், முருங்கன் குடும்பத்தினர். Nicho Telecom, பாரிஸ் பிரான்ஸ்.

இலக்கியத் தடாகம்

# விவிலியமும் தமிழ் இலக்கியமும்

ஒப்பீட்டுத் தொடர் 11

- அருள் . செல்லத்துரை

## திருவிவிலியம்

### முக்காலும் இருப்பவன்

1. (அ) கடவுள் மோசேயை நோக்கி, 'இருக்கின்றவராக இருக்கின்றவர்' நானே என்றார் - விப 3:14

(ஆ) 1. முதலும் முடிவும் ஆனவர் இறந்தும் வாழ்பவர். - திவெ 2:8

2. இயேசு அவர்களிடம், "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். - யோவா 8:57,58

2. (அ) என்றும் வாழும் இறைவனாகிய ஆண்டவரின் திருப்பெயரைத் தொழுதார். - தொ. நூ. 21:33

(ஆ) காலம் கடந்து வாழ்பவர் - எசா. 57:15

3. இவற்றைச் செய்து முடித்தவர் யார்? தொடக்கத்திலிருந்தே தலைமுறைகளை அழைத்தவரன்றோ! ஆண்டவராகிய நானே முதலானவர்! முடிவானவற்றுடன் இருக்கப்போவதும் நானே! - எசா 41:4

4. ஊழி, ஊழிக்காலமாய் உள்ள இறைவன் நீரே. - திபா 90:2

5. (அ) ஆண்டவரே! நீ என்றென்றும் கொலுவீற்றிருக்கின்றீர்; உமது புகழ் தலைமுறை தோறும் நிலைத்திருக்கும். - திபா 102:12

(ஆ) என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார்; நானும் செயலாற்றுகிறேன். - யோவா 5:17

6. என்றென்றும் வாழ்பவர். - திவெ 4:9

7. இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர். - எபி 13:8

## தமிழ் இலக்கியம்

### முக்காலும் இருப்பவன்

1. (அ) ஆதி நடு அந்தமுமிலாததாய்ப் புனிதமாய் அவிகாரமாய்...... இன்பமாய் நின்ற நின் பூரணம். - தாயுமானவர் பாடல் 35

(ஆ) அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க. - திருவாசகம் 32:51

2. ஆதி குணமொன்றும் இல்லான் அந்தம் இல்லான். - திருவாசகம் 18:1

3. அந்தம் உன்று இல்லா ஆனந்தம் - திருவாசகம் 22:10

4. ஈறிலாய் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே. - திருவாசகம் 22:1

5. ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே. - திருவாசகம் 22:5

6. போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய் ஈறின்மை ஆனாய். - திருவாசகம் 5:70

7. முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல் கரைகாட்டி ஆட்கொண்டாய். - திருவாசகம் 5:27
(மல்லல் - வளமை, வலிமை)

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

# குடும்பக் குவலயம்

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
அ. ரேக்கா– தலைமன்னார் கிராமம்

## ரவை தோசை



### தேவையான பொருட்கள்

உழுந்து ½ சுண்டு
வறுத்த ரவை ½ சுண்டு
கோதுமை மா - (அவித்து) 1 சுண்டு
மிளகுத் தூள் - சுவைக்கேற்ப
மஞ்சள் தூள் - ¼ தேக்கரண்டி
சின்னச் சீரகத்தூள் - சுவைக்கேற்ப
எண்ணெய் - தேவைக்கேற்ப

### செய்முறை

உழுந்தை ஒரு சுத்தமான பாத்திரத்தில் நீர் விட்டு 5 மணித்தியாலம் ஊற விடவும். நன்கு ஊறியதும் கல்லை அரித்து சுத்தமாகக் கழுவி அளவாக நீர் விட்டு கிரைண்டரில் நன்கு அரைக்கவும். பின் அரைத்த உழுந்துக் கலவையுடன் வறுத்த ரவை, கோதுமை மா, மிளகுத் தூள், சீரகத்தூள், மஞ்சள் தூள் என்பனவற்றைப் போட்டு தோசைக்கு ஏற்றமாதிரிப் பிசைந்து வைக்கவும். சுமார் 8 மணித்தியாலத்துக்குப் பின் அக்கலவையில் உப்பை சுவைக்கேற்ப விட்டு, சிறிது நீர்விட்டுக் கலக்கவும். பின் தோசை சுடும் கல்லை நன்கு சுத்தமாகக் கழுவி மெல்லிய நெருப்பில் காயவிடவும். நன்கு காய்ந்ததும் எண்ணெய் பூசி தோசைபோல் வார்த்து திருப்பி வேக விடவும். வெந்ததும் மறுபுறம் புரட்டி வேக விடவும். சுவையான ரவை தோசை தயார்.
பின் சம்பலுடனோ சட்னியுடனோ, சாம்பாருடனோ சேர்த்துச் சாப்பிடலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
திருமதி. பாமினி லோகநாதன்
இல. 360 அயின் தியேட்டர் சாலை,
மூர்வீதி, மன்னார்

## டெவல் சிக்கன்
## Devilled Chicken

### தேவையான பொருட்கள்

கோழி : 1 கிலோ (24 துண்டுகளாக வெட்டப்பட வேண்டும்)
பெரிய வெங்காயம் : 250 கிராம் (ஸ்லைஸ் ஆக வெட்டப்பட்டது)
கறி மிளகாய் : 100 கிராம் (நுனி முதல் அடிவரை நீளமாக வெட்டப்பட்டது)
பச்சை மிளகாய் : 100 கிராம் (நுனி முதல் அடிவரை நீளமாக வெட்டப்பட்டது)
வெள்ளைப்பூடு : 2 பல் (விழுதாக அரைத்தது)
இஞ்சி : சிறு துண்டு (விழுதாக அரைத்தது)
சோயா சோஸ் : தேவையான அளவு
தக்காளி சோஸ் : தேவையான அளவு
கட்டர் மிளகாய் : 250 கிராம்
மிளகுத் தூள் : 1 தேக்கரண்டி
உப்பு : தேவையான அளவு
அஜினோ மோட்டோ 1 பக்கேற் (சிறியது)



### செய்முறை

முதலில் 24 துண்டுகளாக வெட்டப்பட்ட கோழியிறைச்சித் துண்டுகளையும், சோயா சோசினையும், மிளகினையும், தேவையான அளவு உப்பையும் சேர்த்து, கோழி இறைச்சியினைப் பொரித்து எடுத்துக் கொள்ளவும். பின்னர் தேவையான அளவு எண்ணெய்விட்டு அதனுள் விழுதாக அரைத்த வெள்ளைப் பூண்டினையும் இஞ்சியையும் ஒன்றாகக் கலந்து கொஞ்சமாகத் தாளித்துக் கொள்ளவும்.

சிறிது நேரம் தாளித்துக்கொண்டு வரும்போது அதனுள் பெரிய வெங்காயம், கறிமிளகாய், பச்சைமிளகாய் என்பவற்றையும் கலந்து மேலும் நன்றாகத் தாளித்துக் கொள்ளவும்.

பின்னர் மிளகு, கட்டர் மிளகாய், உப்பு, அஜினோ மோட்டோ, சோயா சோஸ் என்பவற்றை அக்கலவையில் கலந்து கொள்ளவும்.

கடைசியாக ஏற்கனவே பொரித்து வைத்திருந்த கோழி இறைச்சியினைத் தாளித்த கலவையில் சேர்த்துத் தக்காளி சோசினையும் தேவையான அளவு ஊற்றிக் கிளறி எடுத்துக் கொள்ளவும்.

பின்னர் அடுப்பில் இருந்து இறக்கி, விரும்பியவாறு வெங்காயம், தக்காளி, கறி மிளகாய் என்பவற்றால் அலங்கரித்துக் கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:
ஆரம்பத்தில் தாளிக்கும்போது பூடு, இஞ்சி விழுதுடன் வேறு எதையும் கலத்தல் ஆகாது (கடுகு, ஏலம், பட்டை போன்றன).



மருத்துவப் பொழிவு

# இளநீரில் எத்தனை மருத்துவம்!

ப. தட்சாயினி,
சாளம்பன், நானாட்டான்

வீட்டிற்கு சாமான்கள் வாங்கவே பணம் பற்றாக்குறையாக உள்ளது. இன்று இளநீர் பத்து ரூபா என்று சொல்கிறார்களே எப்படி அடிக்கடி வாங்கிச் சாப்பிட முடியும்? என்று நீங்கள் கேட்கலாம்.

நமக்குத் தேவையில்லாத எத்தனையோ செலவுகளை நாம் செய்கின்றோம். ஒரு சினிமாவுக்குப் போவதற்கு எவ்வளவோ பணம் செலவு செய்கின்றோம்? இளநீரை அடிக்கடி குடித்து வந்தால் நோய் வராமல் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். நமக்கு நோய் எதிர்க்கும் சக்தி இயற்கையாக அமைந்திருக்கிறது. வருமுன் காப்போம் என்ற தேவ வாக்கிற்குத் தக்கபடி உடலை ஆரோக்கிய நிலையுடன் பாதுகாத்துக்கொள்ளலாம்.

சாதாரணமாய் நோய் இருக்கும்போது கவனியாது, நோய் முற்றிய நிலையில் பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவு செய்து என்ன பயன்? சிறுகச் சிறுக செலவு செய்து ஆடம்பர, அநாவசியமான செலவைக் குறைத்து, நோயில்லா இன்ப வாழ்க்கை வாழ நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பக்குவ மனநிலையை நமக்கு நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

புகையிலை வாங்கிப் போடுகின்றோம். வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட், சாராயம், கள், பிராந்தி, போதைப்பொருட்கள் சீட்டாட்டம், சினிமா இவைகளுக்கெல்லாம் அநாவசியமாக நாம் செலவு செய்கின்றோம். நமக்காக, நன்மையை உருவாக்கக் கூடிய இளநீர் அதிக விலை என்று நாம் குடிக்காமல் இருப்பது நல்லதல்ல.

இளநீரை எடுத்து அதாவது ஒரு கால் டம்ளர் எடுத்துக்கொண்டு படிகாரத்தூள் 2 அரிசி எடைமுதல் 5 அரிசி எடை வரை சுத்தம் செய்து எடுத்து இளநீரில் போட்டு கலக்கி இந்த நீரை ஒரு வெள்ளைத்துணியில் நனைத்து கண்களுக்கு அடிக்கடி ஒத்தடம் கொடுத்தால் கண் நோய் விரைவில் குணமாகும். கண்ணுக்குள் காலை ஒரு சொட்டு விட்டாலும் போதும். கண் சிவப்பு, கண் எரிச்சல், கண் வீக்கம், தூசி விழுந்து விடுதல், மெட்ராஸ் ஐ இவைகள் குணமாகும்.

# அவசரக்காரனுக்கு புத்தி மத்திமம்!

சிந்தனைக் கதை

செல்வி அ. லவ்சாயினி
இல. 5, முதலியார்குளம், செட்டிகுளம்.



ஒரு முட்டாள் விவசாயி விவசாயத் தோட்டம் செய்தான். "செடிகள் வளர்ந்து மரமாகிப் பூத்துக் குலுங்கி காய் கனிகள் கொட்டும். ஆசை ஆசையாய் அள்ளித் தின்னலாம்" என்று அவனது மனம் கணக்குப் போட்டது. ஆனால் என்ன கொடுமை! எதுவுமே முளைக்கவில்லை! ஆசை நிராசையானது. மனம் நொந்த விவசாயி ஒருநாள் அவ்வூர் பெரியவரிடம் போய் ஆலோசனை கேட்டான். "நான் கஷ்டப்பட்டு தோட்டம் செய்தேன். எதுவுமே முளைக்கவில்லை" என்று ஒப்பாரி வைத்தான். சாமாதானப் படுத்திய அவ்வூர் பெரியவர், "விதைபோட்டால் தண்ணீர் ஊற்ற வேண்டும். நீ ஒழுங்காகத் தண்ணீர் ஊற்றி இருக்க மாட்டாய்" என்றார். "இல்லை ஒரு நாளுக்கு இரண்டு தடவைகள் தாராளமாக தண்ணீர் ஊற்றினேன். என் உழைப்பெல்லாம் வீணாகிப் போயிவிட்டதே" என்று இன்னும் அழுதான் அந்த விவசாயி.

"தினமும் இரண்டு தடவைகள் தண்ணீர் விட்டால் விதை என்னவாகும்? அழுகிப் போயிருக்கும். அதுதான் முளைக்க வில்லை" என்றார் பெரியவர். விவசாயியோ, "ஒரு விதைகூட அழுகவில்லை" என்று உறுதியாகக் கூறினான். அது எப்படி உனக்கு தெரியும்?" என்றார் பெரியவர். "நான்தான் விதை முளைக்கிறதா என்று தினமும் எடுத்து எடுத்துப் பார்க்கின்றேனே" என்றான் விவசாயி. இதைக் கேட்டு தலையில் அடித்துக்கொண்ட பெரியவர், "தினம் தினம் விதையை எடுத்துப் பார்த்தால் எப்படி அது முளைக்கும்? அது அதற்கு என்று காலம் இருக்கிறது. அந்தக் காலம் வரை காத்திருக்க வேண்டும்" என்றார். ஒருவனுக்கு உழைப்பு மட்டும் இருந்தால் போதாது. புத்திசாலித்தனமும் பொறுமையும் வேண்டும் என்பது இந்தக் கதையில் இருந்து புரிகிறதா?

## மது உண்டவர்களின் மயக்கம் தீர...

மது உண்டவர்களின் மயக்கம் தீர பல மருந்துகள் கொடுத்தும் குணமாகவில்லையென்றால் ஒரு டம்ளர் இளநீரில் ஒரு எலுமிச்சம்பழம் கலந்து கொடுத்தால் மயக்கம் நீங்கும். மயக்கம் அப்படியே சரியாக நீங்கவில்லையென்றால், மறுபடியும் கொடுத்தால் நீங்கிவிடும். இது போதையைக் குறைக்கும்.

# நீங்காத நினைவுகள்

## 3ம் மாத நினைவஞ்சலி

மலர்வு 04 06 1941



உதிர்வு 23 09 2009

### செபஸ்ரியான் அந்தோனியா குரூஸ்

(8ம் வட்டாரம், பேசாலை)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

எம்மை எல்லாம் பாசமாய் வளர்த்தெடுத்த பாச தீபமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டுப்போன உம் பிரிவைத் தாங்க முடியவில்லை அம்மா! துன்பங்கள் வந்தபோதும் தூணாய் இருந்து காத்தீர்களே! உங்கள் பாசத்தை எண்ணி எண்ணி அழுகின்றோம் அம்மா! உங்களுடைய ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்
உற்றார் உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928



உதிர்வு 06 11 2007

### திருமதி அற்புதம் சவிரிமுத்து

(ஓய்வு பெற்ற அதிபர்)
புத்திரர்கண்டான், முருங்கன்.

அம்மா, உங்கள் ஒவ்வொரு மணித்துளியும் எமக்காகவே இருந்தது. அன்னையாய், தந்தையாய், ஆசிரியையாய் எங்களுக்கு எல்லாமுமாய் இருந்தீர்கள். உங்களுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும், எப்படி எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்க - எதற்குமே சந்தர்ப்பம் தராமல் எங்களைவிட்டு மறைந்து விட்டீர்கள். உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் இளைப்பாற நன்றி நிறைந்த செபங்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை ஆர்த்தி

*தகவல்: செ. றூபன் "றோஸ் வாசா"*
*புத்திரர்கண்டான், முருங்கன்*

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 10 1920



உதிர்வு 19 11 2002

### திருமதி. மாகிறேட்

(பாலைக்குளி, அடம்பன்)

பாசத்தின் உறைவிடமாய் இருந்து
இந்தப் பாரில் எம்மை ஈன்று
வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஏழு ஆண்டுகள் கடந்தாலும்
உம் பிரிவால் ஏங்குகின்றோம் உம்பிள்ளைகள் நாங்கள்.

பிரிவால் துயருறும்:-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இவரின் ஆன்ம சாந்திக்காக மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.
தகவல் : அற்புதமலர் குமார் (சுவிஸ்).

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 09 1926



உதிர்வு 29 11 2008

### அமரர். ஆ. காணிக்கைநாதன் கூஞ்ஞ

(இளைப்பாறிய அதிபர்) வங்காலை

அன்பான அப்பா, அருமையான அப்பா, ஆண்டவனில் அமர்ந்திருக்கச் சென்று ஆண்டொன்று ஆனாலும் உங்கள் அன்பு முகம் எம்மைவிட்டு அகலாதையா! பிரிந்த நாள் முதல் வேதனையில் வாடுகின்றோம். உங்கள் பிள்ளைகள் எமக்காய் இறைவனிடம் வேண்டிடுங்கள்.
*(அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் 28.11.2009 அன்று காலை 5.45 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.)*

பிரிவால் துயருறும்,
மனைவி பபியோலா, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அருட்சகோதரி, மலர் (அன்புக்கன்னியர்)
சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
*தகவல்: ஆ. சிலுவைராஜன் கூஞ்ஞ (ஆசிரியர்)*

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி — 5ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. பா.மதலேனாப் பிள்ளை
பிறப்பு: 22-08-1947
இறப்பு: 10-04-2006



திரு. பெஞ்சமின் பாலசுந்தரம்
பிறப்பு: 15-03-1941
இறப்பு: 04-11-2004

### இத்திக்கண்டல், அடம்பன்

அன்பிற்கு இலக்கணமாய், ஆதரவிற்கு இருப்பிடமாய், இன்பத்திற்கு இல்லறமாய், ஈகைக்கு தன்னிறைவாய், உறவிற்கு அன்பராய், ஊழியத்தில் பணியாளராய், எண்ணத்திற்குப் பொக்கிஸமாய், ஏற்றத்தில் ஏணியாய், ஒற்றுமையில் சிகரமாய், எல்லாவற்றிலும் மேலாக எங்களுக்கு சிறந்த பெற்றோராய் திகழ்ந்த நீங்கள், எம்மோடு இனிதாய் வாழ்ந்து ஒரு நொடிப் பொழுதினில் எம்மைவிட்டுப் பிரிந்ததை எண்ணி ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம்.

பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
*(தகவல்: திரு. எஸ். ஜே. மரிசால்பிள்ளை, ஆசிரியர்.)*

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 03 1950



உதிர்வு 11 12 2007

### திரு. செபஸ்தியான்பிள்ளை சூசையப்பு
### வீரபுரம், நேரியகுளம்


"என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும்
பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும்.
நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" (சங் 23:6).

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

159, வீரபுரம், நேரியகுளம்

## 9ம் மாத கண்ணீர் அஞ்சலிகள்

மலர்வு 13 06 1949



உதிர்வு 23 04 2009

### திருமதி. அந்தோனிக்கம்மா (றமணி) மரியநாயகம் குரூஸ்

(பறப்பாங்கண்டல், உயிலங்குளம்)

அன்புச் சகோதரியே!
ஒன்பது மாதங்கள் ஓடிவிட்டன நீ அஸ்தமனம் ஆகி
ஆனாலும் அகத்தைவிட்டு அகலவில்லை உன் நினைவுகள்!

பல ஆண்டுகள் நாம் ஒன்றுசேர்ந்து
பலமுள்ள தோழமையுடன் பாங்காக ஆற்றிய நற்பணிகளையும்
பாசத்தோடும் பணிவோடும் - நீ
பக்குவமாக எம்முடன் கொண்ட நல்நட்பையும்
எந்நாளும் நினைக்கின்றோம்.
நெஞ்சுருகி இப்போது தவிக்கின்றோம்.



உனது வாழ்வில் நீ ஆற்றிய நற்பணிகள்
நிச்சயம் இறைவன்முன் உன்னதமானதே.
நித்திய வான்வீடும் உனக்கு உண்மையே.

உன் நினைவால் வாடும் உன் குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

முன்னைநாள் முருங்கன்
கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்

## சிந்தனைத்துளிகள்

பணத்தைக் கெட்டவழியில் இழப்பது குற்றம்
கெட்ட வழியில் தேடுவது அதைவிடக் குற்றம்.

வீண்பேச்சிலும் அரட்டையிலும் ஈடுபடாதே
அவை உன்னை திசை திருப்பிவிடும்.

இன்று நீ தலைகுனிந்து எழுதும் எழுத்து
நாளை உன்னைத் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும்

நல்லவற்றை பாறையில் எழுது
தீயவற்றை பனிக்கட்டியில் எழுது




சிந்தித்துச் செயற்படு
செயற்பட்டபின் சிந்திக்காதே.

அவசரம் ஆபத்தை உண்டாக்கும்.

*ஆக்கம்:- ஞா. கிறிஷாந்தா குயின்சி*
*சாளம்பன், அடம்பன்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.91 எரேமியா37-44

உங்கள் விடைகளை 15.01.2010க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**




### இடமிருந்து வலம்

1. எரேமியா நிலவறைக் .................................. சென்று அங்கே நெடுநாள் தங்கியிருந்தார்.
5. நாங்கள் செய்துகொண்ட எல்லா.......................... களையும் திண்ணமாய் நிறைவேற்றுவோம்.
11. அங்கிருந்து ....................................திரும்பிச் செல்வான்.
13. ஏனெனில் அவ்வீடு ஒரு .......................... மாற்றப்பட்டிருந்தது.
14. ஆண்டவருக்கு .................... நீங்கள் பாவம் செய்துள்ளீர்கள்.
15. நீ வாளால் ...............................மாட்டாய்.
17. நீர் என்னிடம் எதையும் .............................க் கூடாது.
19. கல்தேயர் மீண்டும் வந்து ..........................த் தாக்குவர்.

### மேலிருந்து கீழ்

1. அதன்பின் எரேமியா காவல் ........................ தங்கி இருந்தார்.
2. ........................ பஞ்சத்துக்கும் அவர்கள் இரையாவார்கள்.
4. அதை அவர் தம் ................................ கொள்ளவில்லை.
6. எரேமியா ......................க் கூடத்திற்குள் சென்று அங்கே நெடுநாள் தங்கியிருந்தார்.
11. அந்நாட்களில் மக்களிடையே எரேமியா தடையின்றி ........................க் கொண்டிருந்தார்.
12. இரவோடு இரவாய் நகரைவிட்டு வெளியேறி.................. நோக்கித் தப்பியோடினர். (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
13. .................... முதல் பெரியோர்வரை மக்கள் எல்லாரும் அருகில் வந்தார்கள்.

### வலமிருந்து இடம்

2. எனவே அவர் மக்களிடையே ........................... வந்தார்.
3. உங்களை மீட்கும் பொருட்டும் அவனுடைய ..................... உங்களை விடுவிக்கும் பொருட்டும் நான் உங்களோடு இருக்கின்றேன்.
7. ஏனெனில் அவர் இன்னும் ................ அடைக்கப்படவில்லை.
9. நன்மை அன்று தீமை விளைவிக்கவே அவர்கள் .......................... நான் விழிப்பாய் இருக்கிறேன்.
11. நீங்கள் கைப்பற்றியுள்ள ............................ குடியிருங்கள்.
16. உங்கள் வேண்டுகோளை இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர்முன் மன்றாடுமாறு நீங்கள் என்னை அனுப்பினீர்கள். (3வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது.)
18. அவர் அங்கு பட்டினியால் ............................... போவார்.
21. நகரில் .......................................... ஏதும் கிடையாது.

### கீழிருந்து மேல்

8. இந்நாள்வரை அவர்கள் எனக்குப்.....................போகவில்லை.
10. உங்களை நீங்களே ...............................க் கொண்டீர்கள்.
11. ஏனெனில் நீ என்னில் ........................... வைத்துள்ளாய்.
17. எரேமியாவுக்கு ........................... ஆணையிட்டுக் கூறினார். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
18. பபிலோனிய ........................ நீர் கையளிக்கப்படுவீர்.
19. இவன் இவ்வாறு பேசி .............. எஞ்சியுள்ள போர் வீரர்களையும். மக்கள் அனைவரையும் மனம் தளரச்செய்து வருகிறான்.
20 அவர் விருப்பப்படியே அவரை...............................

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 89ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
**வி. திவ்வியா**
இல.34/7 H கதிர்காமர் முகாம்
செட்டிகுளம்

இரண்டாம் பரிசு:
நா. சலோமி
மன்/ நானாட்டான் ம.வி.

மூன்றாம் பரிசு:
பி. ஜே. சிந்துஜா
எழுத்தூர், மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 183 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 181 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.89ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 40 அதிஸ்ரசாலிகள்

1. செ. ஜெசில்டா, No. C-08 மடுக்கோவில், மடு.
2. ஞா. அனுசியா, பட்டித்தோட்டம், மன்னார்.
3. ஜெ. எம். கொண்சி, C-11 மடுக்கோவில், மடு.
4. அ. டிப்கா சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
5. செ. மே. அலெக்சன், வஞ்சியன் குளம், வங்காலை.
6. அ. யூட் டிஷாந், மரியாள் வீதி, தாழ்வுபாடு
7. டினுஷா குரூஸ், தரம் 13, மரியாள் வீதி, தாழ்வுபாடு.
8. கி. கிறிஸ்மேரி றெவல், 7ம் வட்டாரம், பேசாலை.
9. பி. நிஜா, தோட்டவெளி, மன்னார்.
10. ப. விஜித் டலிமா, தாழ்வுபாடு, மன்னார்.
11. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
12. ச. சங்கீதன், டொன் பொஸ்கோ மாணவர் இல்லம், முருங்கன்.
13. ம. பேலின் ராணி, சுண்டிக்குளி, முருங்கன்.
14. எம். பி. ஆர். கிறிஸ்தோப்பர் இல.18. கோவில் வீதி ஒழு. யாழ்.
15. ம. ஜொய்னா, சின்னக்கடை இல. 03, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
16. மேரி றெஜீனா சவிரிமுத்து, கங்காணி தீவு, நானாட்டான்.
17. திருமதி. பே. வசந்தி, 'வசந்தம்' ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
18. செ. றொபின்சன், மளுவராயர் கட்டையடம்பன், மடுறோட்.
19. ஆர். சகாயதேவி, புனித அக்னஸ் கன்னியர் மடம், மாத்தளை.
20. யோ. லோறன்சா, ஜீவநகர், முருங்கன்.
21. அ. அருள்மேரி, இல. மு-106 க. நிவார. கிராமம், செட்டிகுளம்.
22. எஸ். தினேஸ், எமில் நகர், மன்னார்.
23. ச. கிஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்
24. இ. சுதர்சினி (றாஜினி), போயிட்டி, இளவாலை.
25. திருமதி. திரேசம்மா சவிரிமுத்து, சென் யோசப் லேன், சில்லாலை
26. அ. சத்தியா, திருக்குடும்ப கன்னியர் மடம் பள்ளிமுனை மன்னார்.
27. என். தயாழினி றோச், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
28. எம். சுஷாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
29. எம். கே. நிரோஷன், கோவில் வீதி, உயிலங்குளம்.
30. ஆர். அன்ரனி யூட்டா, அம்பாள் வீதி, எழுத்தூர், மன்னார்.
31. ச. லின்ரா, கீளியன் குடியிருப்பு தலைமன்னார்.
32. செலஸ்ரீனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
33. தி. லக்சிக்கா, எமில்நகர், மன்னார்.
34. செ. இருதயதாசன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
35. எப். வி. குணபாலன், மணற்குளம், உயிலங்குளம்.
36. எட்வேட் சுமித்திரா, வட்டாரம் 8, பேசாலை
37. எஸ். நிஷாந்தினி கூஞ்ஞு, வட்டாரம் 08. பேசாலை.
38. அ. ஸ்டெலா மேரி, இல. 51 துட்டுவாகை, நேரியகுளம்.
39. யூ. டொறின் ஜசிக்கா, பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்
40. ஜி. அல்பேட், இல. 12. வெல்கம் லேன், பாலையூற்று, திரு.மலை

# ஆண்டவர் எனது நோயை வெளிப்படுத்தினார் என்னைக் குணப்படுத்தினார்!

## ஓர் அனுபவ சாட்சியம்

### - திரு. யா. பெஞ்சமின், மூத்த பொதுநிலைப் பணியாளர் -

2009அம் ஆண்டு ஆவணித் திங்கள் 2ம் வாரத்தில் இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள சாளக்குடி இறைவார்த்தை மையத்துக்கு தியானம் செய்யச் சென்றிருந்தேன். எனது மகன் விமல்றாஜ் 08.08.2009 அன்று மாலை என்னை தியான இல்லம் வரை கூட்டிவந்து என்னை அனுப்பிவைத்து சென்னைக்குத் திரும்பியிருந்தார்.

அந்தத் தியான இல்ல வாசலில் கால் பதித்தபோது, பின்வரும் விதத்தில் செபித்தேன், "இறைவா, மீண்டும் ஒருமுறை உமது வார்த்தையைக் கேட்க அழைத்து வந்தீர் நன்றி! உமது வார்த்தையானது என்னைக் குணப்படுத்தி என் மனத்துயர்களை ஆற்றும் வல்லமை படைத்தது. இங்கு வருகின்ற எல்லா மக்களும் ஆசீர்பெற்று மகிழ்வுடன் செல்கின்றனர். நானும் 2 நோய்களுடன் (ஆஸ்மா, இடுப்பு வருத்தம்) வருகின்றேன். எனது இடுப்பு வருத்தத்தைக் குணப்படுத்தும், இந்த வயதிலும் இறைவார்த்தையைக் கொடுக்க வழிபாட்டு ஆணைக்குழு ஊடாகவும், அன்பிய ஆணைக்குழு ஊடாகவும் அழைக்கின்றீர். எனது நோய் நீங்கி நலம் பெற அருள்தாரும்" என வேண்டினேன்.

"உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு: அவரையே நம்பியிரு, அவர் உன் சார்பில் செயலாற்றுவார்." (தி. பா. 37:5) என்ற வசனம் என் மனதில் நினைவுக்கு வந்தது. தியானத்தில் குணமாக்கல் வழிபாட்டில் பலர் குணம் பெற்று சாட்சியம் பகிர்ந்தனர். ஆனால் நான் தியானத்தில் பங்கு பற்றிய 4ம் நாள் (புதன்கிழமை) ஆராதனை முடிவில் தியானத்தை நடத்திய சகோதரன், "மிகத்தொலைவில் இருந்து வந்த ஒரு சகோதரனின் வலது பக்கக் கிட்னியில் (Kidney) ஓர் கல் நகரத் தொடங்கியிருக்கிறது. அவர் வீடு சென்றதும் பூரண குணமடைவார்" என்றும் கூறினார்.

பங்குபற்றியவர்களில் ஒரு நபரும் தமக்கு வருத்தம் இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. 5ம் நாளும் ஆராதனை முடிவில் மீண்டும் கிட்னியில் கல் உள்ளது எனத் தெரிவித்தார். ஆயினும் எவரும் இவ்வருத்தம் இருப்பதாகத் தெரியப்படுத்தவில்லை.

வார முடிவில் மகன் வந்து என்னைச் சென்னைக்குக் கூட்டிச் சென்றார். ஞாயிறு காலை 11.30 மணியிருக்கும் எனது வலது பக்க இடுப்பில் வலி தாங்க முடியாதவாறு குத்தத் தொடங்கியது அப்பகுதியை மேசையுடன் சுவரில் வைத்து அழுத்திப் பார்த்தேன். வலி குறையவில்லை. பகல் 12.30 மணிவரை இவ்வேதனை தொடர்ந்தது. பின்னர் நின்றுவிட்டது.

மாலை 5.00 மணிக்கு மீண்டும் அதே இடத்தில் வலி மிகக் கூடுதலாக இருந்தது. உடனே நான் கத்தியவாறு ஒரு டாக்டரிடம் கூட்டிப் போகும்படி எனது மருமகளிடம் கேட்டேன். அவர் என்னைக் கூட்டிப் போனபோது டாக்டர் பரிசோதித்து பார்த்து எனது ஈரல் பக்கம் கிட்னியில் கல் உள்ளதுபோல தெரிவதாகக் கூறினார். உடனடியாக ஸ்கேன் (Scan) செய்து பார்க்க வேண்டுமென்று கூறி ஒரு ஊசி மருந்து ஏற்றினார். குத்து குறைந்துவிட்டது. ஸ்கேன் செய்து பார்த்தபோது வலது பக்கக் கிட்னியில் கல் நகர்ந்து விட்டது என்று றிப்போட் தந்தனர். ஸ்கேன் றிப்போட்டை பார்த்த டாக்கடர், "நீர் பூரண சுகம் பெற்றுவிட்டீர். இனிப் பயமில்லை" என்றார்.

போட்டா தியான இல்லத்தில் இறைவன் அச்சகோதரர் மூலம் எனக்குள் இருந்த நோயை வெளிப்படுத்தினார், சத்திர சிகிச்சை இல்லாமல் நான் அறியாமல் எனக்குள் இருந்த நோயை குணப்படுத்திய ஆண்டவருக்கு கோடான கோடி நன்றியை சமர்ப்பணம் செய்கிறேன். நன்றி இறைவா நன்றி!

## மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 700.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 3000.00 (இலங்கை ரூபா)
சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.
காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. (Mannar Branch)
பணம் பெறுபவரின் பெயர்:The Editor - 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்:S/A No. 020020029782

## நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - இல. ரூபா 4,000.00
பல நிறத்தில் - இல. ரூபா 7,500.00
முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

## நீங்காத நினைவுகள்

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 02 1984



உதிர்வு 29 01 2008

### சூசையப்பு ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட்

(பெரிய பண்டிவிரிச்சான், மடு)

உன்னைப் பிரிந்திருக்கும் இந்த இரு வருடத்தில் ஓயாத அலைகளாய் நிதமும் உன் நினைவுகள் நெஞ்சை வருடிச் செல்கின்றன. பாசத்தை நினைவாகத் தந்துவிடு. பாரினிலே எம்மைத் தவிக்கவிட்டு நீ மட்டும் சென்றாய். கண்கள் உன் முகம் காணத் தவம் இருக்கின்றன. என்றும் உன் நினைவுகளே எம்மைக் கண்ணீரில் மூழ்கடிக்கின்றது.
உனது ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி ஜெயந்தா, அம்மா, அப்பா, மாமா, மாமி, சகோதரர்கள், மச்சிமார் உற்றார், உறவினர், நண்பர்கள்.


# மன்னா


# அஞ்சாதீர்கள் இதோ உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் லூக்கா 1:10

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 30 11 1923 — உதிர்வு 15 11 2008



**அமரர் சந்தான் சிமியோன்**
புத்திரர்கண்டான், முருங்கன்.


இறைவன் தந்தார் இறைவன் எடுத்துக்கொண்டார்!

எங்கள் அன்புத் தந்தையே
பாரினில் வாழும் காலம் முடிந்ததென்று
பரமனுடைய சந்நிதியே தஞ்சமென்று
நீங்கள் சென்றுவிட்டீர்கள் ஐயா!
செபமாலையே தஞ்சமென்று தினம் செபிப்பீர்
உம் செபம் உம்மை பரகதியில் சேர்த்ததையா
என்றென்றும் உங்கள் நினைவு
எம்மைவிட்டு நீங்காதையா
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிகாண
உம் பிள்ளைகள் நாங்கள் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 26 01 1927 — உதிர்வு 25 11 2006



**அமரர் திரு. ஆனந்தம் ஒஸ்பிஸ் குரூஸ்**
(இளைப்பாறிய அதிபர்)

எம் ஆசைத் தந்தையே!
ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டதோ
எம்மைவிட்டுப் பிரிந்து?
உம் ஆத்மாவின் நினைவுகள்
ஆறவில்லை எம் உள்ளம் விட்டு
வாழ்வோம் நீர் சொன்ன தடம் தொட்டு
அமைதியாய் தூங்கும் இறைபதம்
எமக்காய் வேண்டும் நின்பதம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் சகோதரங்கள்
'ஆனந்தம்', வங்காலை 08, மன்னார்.

### 2வது பிறந்த நாள் வாழ்த்து




**A. கிறிஸ்த்தல் மொறாய்ஸ்**

07-12-2009

அரிப்பு வங்காலையைச் சேர்ந்த திரு. திருமதி. இன்பம் மொறாய்ஸ், ஜெசி சோசை தம்பதிகளின் செல்வப்புதல்வி A. கிறிஸ்த்தல் மொறாய்ஸ் தமது 2வது பிறந்த தினத்தை கடந்த 07-12-2009 அன்று பிரான்ஸ்சில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். கிறிஸ்த்தல் குட்டியை அன்பு அப்பா, அம்மா, மற்றும் உறவுகள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : அப்பா, அம்மா

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 04 1936 — உதிர்வு 29 11 2008



**திரு. அந்தோனி சீமான்**
(சித்த வைத்தியர், கலாபூசணம், சமாதான நீதிவான்)

### 9ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 01 1940 — உதிர்வு 23 11 2000



**திருமதி. சீமான் செபமாலை**
(வஞ்சியன்குளம்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை வைப்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

எங்களை எல்லாம் பாசமாய் வளர்த்தெடுத்த - பாச தீபங்களே!
எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு - நீங்கள்
இருவரும் எம்மை விட்டுப்பிரிந்துசென்ற நாட்களை எண்ணி - நித்தம் கண்ணீர் வடிக்கின்றோம்
கொடிய நோய் வடிவில் காலன் உங்கள் இருவரையும் கவர்ந்து செல்ல முனைந்தானே.
உயிர் பிரியும் வேளையிலே பிள்ளைகள் எங்களுக்கு விடைகூறாமல்
நீங்கள் இருவரும் விடைபெற்ற மாயமென்ன?
உங்களைப் போன்ற தெய்வங்களை இனி நாம் எப்போது காண்போம்?
சீரும் சிறப்புமாய் உலகம் புகழ வாழ்ந்து சென்றீர்களே! புன்னகைதனையே வதனத்தில் கொண்டு
பிறர்நல சேவையில் உழைத்த உத்தமர்களே! உங்களை மறக்க முடியுமா?
வேதனையில் ஒவ்வொரு நொடியும் உங்களுக்காய் ஏங்குகின்றோம்.
உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இவர்களின் பிரிவால் துயருறும் : மகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல் : பேரப்பிள்ளைகளான டொறின், சிந்துஜா, கௌசி, கெலன், சர்மிலன்

### 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 12 1929 — உதிர்வு 07 11 2006



**திரு, வ. யேசுரத்தினம்**

மூன்று ஆண்டுகளென்ன
முந்நூறு ஆண்டுகளானாலும்
எம்முள்ளத்தில் என்றும்
தெய்வமாக வாழ்கிறீர்கள்!

மாறா நினைவுகளுடன்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

தகவல்: DR. (திருமதி) ரதினியூட்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
மன்னார்.

### 1ம் ஆண்டு நினைவு



**செ. ஜெயசீலன்**
கன்னாட்டி, முருங்கன்

மலர்வு 28—02—1982
உதிர்வு 10—01—2009

கண்கள் கலங்குகின்றன, மனக்காயங்கள் எரிகின்றன - எம்
உடலோ வெண்தணலாய் வேகிற்று - நேயனே உன்னை எண்ணாத நாள் எமக்கிங்கில்லை.

அன்பும் பாசமும் அகத்திலே கொண்டு பண்பாக எம்மைப் போசித்தாயே
நலமுடன் நாங்கள் யாவையும் பெற்றிட நல்மனம் கொண்டு உழைத்திட்டாயே
மண்ணகம் வாழ்ந்து எம்மைப் பிரிந்தாய் விண்ணகம் சென்று நீ வாழ்ந்திட வேண்டும் ஐயா!

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."
என்னும் இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டு விண்ணவர் கூட்டத்தில்
நீயும் வாழ்கவென இறைவனை நாளும் வேண்டுதல் செய்கின்றோம்.

பிரிவால் துயருறும் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது